விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 19 ஞாயிற்றுக்கிழமை (03.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 15

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

# இராணுவத்தினர், பொலிஸாரைத் தவிர யாரும் ஆயுதம் வைத்திருக்க முடியாது

## ஜெனரல் சரத் பொன்சேகா அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தான் ஜனாதிபதியாக வந்ததும் இராணுவத்தினர், பொலிஸார் தவிர்ந்த ஏனையவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள் களையப்படும் என ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார். நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற பிரசார நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். *(02 ஆம் பக்கம் பார்க்க)*




ஊடகவியலாளர் மாநாட்டில் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் பிரமுகர்கள் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது.

## திருமாவளவன் இலங்கை வருகை

(கொழும்பு)

மறைந்த அமைச்சர் பெரியசாமி சந்திரசேகரனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் இலங்கை வந்துள்ளார்.

அவர் இன்று மலையகத்துக்குச் சென்று சந்திரசேகரனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவார். (ச-5)

## ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதியானதும் நாடாளுமன்றில் புதிய அரசியல் யோசனை

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதியாகத் தெரிவானவுடன் தமிழ் மக்களுக்கு தேவையான அவசர அபிவிருத்தித்திட்டங்களை நிறைவு செய்வதுடன் நாடாளுமன்றத்தில் புதிய அரசியல் யோசனை முன்வைக்கப்படுமென ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துக்களை வெளியிட்டார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இச் செய்தியாளர் மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## காணாமல் போனோரின் உறவுகள் மனோ கணேசன் எம்.பி. முன் கதறல்



(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோரின் உறவினர்கள் நேற்று மனோ கணேசனை சூழ்ந்து கதறி அழுதனர்.

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் மற்றும் படுகொலை செய்யப்பட்டோரின் உற வினர்கள் நேற்று மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசனை நேற்று *(20ஆம் பக்கம் பார்க்க)*

## ஜனாதிபதி வேட்பாளர் பொன்சேகா நேற்று யாழில் தீவிர பிரசாரம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளும் பொருட்டு நேற்று யாழ். குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்ட ஜெனரல் பொன்சேகா பல தரப்பினரையும் சந்தித்து பேச்சு நடத்தினார்.

நேற்று காலை அன்ரனோவ்-32பி விமானம் மூலம் யாழ். குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்ட பொன்சேகா வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டதுடன் தேர்தல் பிரசாரத்திலும் ஈடுபட்டார்.

பின்னர் அவர் யாழ் ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளை சந்தித்து கலந்துரையாடினார். அதன்பின் காரைநகருக்கு சென்ற அவர் *(20ஆம் பக்கம் பார்க்க)*





விரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில்...

## உள்ளே...

ஜோதிடகலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் 2010 உங்களுக்கு எப்படி?

FedEx Express

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

232 நாடுகளுக்கான உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

இப்பொழுது வடமராட்சியிலும்

குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா

TCN EXPRESS
28, Nelsan Place, Colombo -06

259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 222735 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இராணுவத்தினர் பொலிஸாரைத் தவிர...

அவர் அங்கு உரையாற்றுகையில், இராணுவ அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் இருந்தமையால் இங்குள்ள மக்களின் நிலையை நன்கறிவேன்.

அத்துடன் தமிழ் மக்களின் கலை கலாசார விழுமியங்கள் தொடர்பிலும் தெரியும். இவற்றை மதித்து நடக்குமாறு எமது படையினரிடம் அப்போது கேட்டுக் கொண்டேன்.

நான் இராணுவத் தளபதியாக இருந்த போது யுத்தத்திற்காகவே கடமைபுரிந்தேன். யுத்தம் தெற்கில் ஏற்பட்டிருக்குமென்றாலும் எனது கடமையை இது போன்றே செய்திருப்பேன்.

நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கு தெற்கு என எல்லா உறவுகளினதும் பல உயிர்கள் பிரிந்தன. அதனால் வருத்தப்படுகிறேன்.

யுத்தம் முடிபடைந்த பின்பு வடக்கு கிழக்கு மக்கள் உட்பட பாதிக்கப்பட்ட அனைவருக்கும் என்னால் என்ன செய்ய முடியுமென எண்ணிக்கொண்டிருந்தேன். தற்போதுள்ள அரசு முள்கம்பிகளுக்குள் இருக்கும் மக்களை நிம்மதியாக வாழ அனுமதிக்கவில்லை.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் சுகாதாரமும், உணவு, சுதந்திரமென எதுவுமே இல்லாமல் துன்பப்படுகிறார்கள். இந்நிலையை அரசாங்கம் உணர்ந்தும் உணராதது போன்று உள்ளது.

நாட்டில் யுத்தம் முடிபடைந்ததும் தற்காலிக குடிசைகள் அமைத்து முகாம்களில் வாழும் மக்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் என நினைத்தேன்.

ஆனால் அரசாங்கம் அதனைச் செய்யவில்லை. ஜனாதிபதி, அரசும் தமது குடும்பங்களுடன் எவ்வாறு இருக்கின்றனர் என்பது உங்களுக்கு தெரியும்.

அதேபோன்ற வசதிகளுடன் பாதுகாப்புடன் இராணுவ அதிகாரி அதுமட்டுமல்லாமல் மேலும் இரண்டு அமைச்சுக்களின் செயலாளராக இருந்து சுகபோகங்களை அனுபவிக்க அரசாங்கத்தினால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

ஆனால் மக்களின் நிலையை உணர்ந்து எனக்கு கிடைத்த சலுகைகள் எல்லாவற்றுக்கும் பதவிகளுக்கும் பிரியாவிடை கொடுத்துவிட்டு உங்களிடம் வந்துள்ளேன்.

நான் வெற்றி பெற்றவுடன் மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்துவேன். மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், பொருட்களின் விலையின் அதிகரிப்பு உட்பட பல பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

நான் ஜனாதிபதியானதும் நாட்டில் பின்வரும் தீர்வுகளை மக்களுக்கு உடனடியாக வழங்குவேன்.

☆ அரச ஊழியர்களிற்கான சம்பளங்கள் அதிகரிக்கப்படும்.

ஓய்வூதியர்களுக்கு வயோதிபர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவு வழங்கப்படும்.

வேலையற்ற பட்டதாரிகள், பட்டதாரி மாணவர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவாக 2ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். அத்துடன் ஒரு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

போரில் ஏற்பட்ட அழிவிலிருந்து யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணம் பூராக மீளக்கட்டியெழுப்புவதற்கான திட்டம் ஒன்றை தயாரித்துள்ளேன்.

பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்துதல். அத்துடன் பருத்தித்துறை துறைமுகம் பாரிய துறைமுகமாக அமைக்கப்பட்டு இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் வடக்கு மாகாணத்திற்குரியவை கப்பல் மூலம் நேரடியாக இங்கு கொண்டுவரப்படும்.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களான வலிவடக்கு, யாழ்ப்பாணம், அரியாலை, முகமாலை, நாகர் கோவில் உட்பட்ட பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்கள்.

அதற்கு மேலாக பலாலி படைத்தளமுள்ள பகுதியில் இராணுவ முகாம்கள் நகர்த்தப்பட்டு மக்கள் குடியமர்த்தப்படுவார்கள்.

மீள் குடியமர்த்தப்படும் மக்கள் அனைவருக்கும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுவதுடன் நிதிக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

கைது செய்யப்பட்டு சிறைகளில் வாழும் தமிழ் இளைஞர் யுவதிகளில் சாதாரண குற்றத்திற்காக கைது செய்யப்பட்டவர்கள், விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

படையினர், பொலிஸார் தவிர்ந்த ஏனையவர்களில் ஆயுதங்களை வைத்திருப்பவர்களிடமிருந்து அவை களையப்படும்.

பொலிஸாருக்கு இருக்கும் அரசியல் தலையீட்டை நீக்கி நீதியான சேவையாக பொலிஸ் சேவையை மாற்றியமைப்பேன்.

பொலிஸார், படையினருக்கு ஒழுங்கான வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவேன்.

மீன்பிடியில் உள்ள கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கப்பட்டு சுதந்திரமாக எங்கும் எப்போதும் மீன்பிடிப்பதற்கான சூழல் ஏற்படுத்தப்படும்.

விவசாயிகள் தமது உற்பத்திகளை ஒழுங்காக விற்பனை செய்வதற்குரிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

அத்துடன் விவசாயிகளுக்கு உரவகைகளுக்கு மானியம் வழங்கப்படும்.

தமிழ்ப் பகுதிகளில் தமிழ் பொலிஸார் கடமையில் அமர்த்தப்படுவர்.

வடக்கிலுள்ள போக்குவரத்து குறைபாடுகள் நீக்கப்படும்.

முச்சக்கரவண்டிகள் உட்பட மானிய விலையில் எரிபொருள் வழங்கப்படும். இவை போன்ற பல வேலைத்திட்டங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும்.

எல்லா மக்களும் சமமாக வாழக்கூடிய வகையில் நாடாளுமன்றத்தின் ஊடாக அரசியல் தீர்வுத்திட்டம் கொண்டுவந்து இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும்.

யாழ்ப்பாண பாடசாலைகளின் கல்விமுறை, சுகாதாரம் உட்பட சேவைகள் கொழும்பு போன்று நவீன முறையில் வசதிகள் செய்யப்படும்.

இதேவேளை நேற்றிரவு நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா பதிலளிக்கையில்,

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியேற்றம் செய்வது அரசின் கடமையாகும். படையினர் அதற்கான திட்டங்களை வழங்குவார்.

மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஒன்றுமே தெரியாது.

வெளிநாட்டில் 20வருடங்கள் இருந்துவிட்டு இங்குவந்தவருக்கு மக்களின் வாழ்க்கை முறை பற்றி தெரியாதுதானே. தற்போது கோத்தபாய வெளிநாட்டு தூதுவர் போன்று தான் இலங்கையில் கடமையாற்றுகின்றார்.

யாழ்ப்பாணத்தில் காணாமல் போன இளைஞர்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளது. இது பாரிய பிரச்சினை. இதற்கு உரிய தீர்வு காணப்பட வேண்டும். அம் மக்களுக்கு நஷ்ட ஈடும் வழங்கப்பட வேண்டும்.

கொடூர யுத்தத்தில் பெருமளவான இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்டதுடன் பின்னரும் 10ஆயிரம் இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதிலிருந்து காணாமல் போனதாக முறைப்பாடு செய்யப்பட்ட இளைஞர்களும் உள்ளனரா என்பது குறித்து விசாரிக்கப்பட வேண்டியுள்ளதுடன். விபரங்களும் வெளியிடவேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்கள் விருந்தாளிகள் போன்று வாழ்ந்துவிட்டு போகலாமென யுத்தம் நடைபெற்ற காலத்தில் வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்று எனது செவ்வியை திரிவுபடுத்தி வெளியிட்டிருந்தது.

ஆனால் நான் கூறியது என்னவென்றால் இந்த நாட்டு பிரஜைகள் அனைவரும் அரசியல் யாப்பின் படி சுதந்திரமாக வாழ முடியும்.

இதற்கு மேலாக முறையற்ற கோரிக்கைகள் எங்கிருந்து வந்ததாலும் தவறு எனக் கூறியிருந்தேன். இக் கூற்றே திரிவுபடுத்தி வெளியிடப்பட்டது என்றார். (ச-5)

# பூபாளராகங்கள் சிறுகதைப் போட்டி முடிபுகள் இம்மாதம் வெளியாகும்

## ஏற்பாட்டுக் குழு அறிவிப்பு

லண்டன் பூபாள ராகங்கள் நிகழ்வையொட்டி கடந்த வருடம் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டி முடிபுகள் இம்மாத இறுதியில் வெளியாகும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

லண்டன் பூபாளராகங்கள் நிகழ்வை முன்னிட்டு வருடாந்தம் நடத்தப்படும் உலகளாவிய சிறுகதைப் போட்டி கடந்த ஆண்டு (2009) ஆறாவது போட்டியாக நடைபெற்று முடிந்தது. ஆனால் கடந்த ஆண்டு தாயக உறவுகளின் அவல நிலையை கருத்தில் கொண்டு லண்டன் பூபாளராகங்கள் 10ஆவது ஆண்டு விழா ரத்துச் செய்யப்பட்டது.

அதனால் அவ்விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டி முடிபுகள் வெளியிடுவதிலும் தாமதம் ஏற்பட்டது. எனினும் உலகெங்கும் இருந்து எழுதிய நூற்றுக்கணக்கான தமிழ் எழுத்தாளர்களை கருத்தில் கொண்டு போட்டி முடிபுகள் இம்மாத இறுதிப் பகுதியில் வெளியிடப்படுகிறது.

பரிசில்கள் பத்தாவது ஆண்டு விழாவிலேயே ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போல் வழங்கப்படும் என்று போட்டியின் ஏற்பாட்டாளர் மகாலிங்கம் சுதாகரன் அறிவித்துள்ளார்.

பத்தாவது ஆண்டு விழாவை முன்னிட்டு சிறந்த 10சிறுகதைகளுக்கு பரிசில்கள் வழங்கப்படுவது குறிப்பிட்டத்தக்கது. பூபாளராகங்கள் 10ஆவது ஆண்டு விழா இவ்வாண்டு லண்டன் இலைதுளிர் காலத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. (ச)

# சிந்தனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நொந்துபோயுள்ள எமது மனங்களின் உளநல மேம்பாடு எனும் தொனிப்பொருளில் சர்வதேச புகழ்மிக்க உளநல மருத்துவ நிபுணர் பேராசிரியர் தயா.சோமசுந்தரத்தின் சிந்தனை அரங்கு -02 கருத்துரை நிகழ்வு இன்று மாலை 4.30மணிக்கு ஐ.ஐ.ரி நிறுவன யாழ்.கிளையில் நடைபெறவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரும் இச்சிந்தனைக் கூட்டத்தில் பங்குகொண்டு தமது சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ளுமாறு பேராசிரியர் இரா. சிவச் சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (ச-14)

# ஜனாதிபதி...

ஜெனரல் பொன்சேகாவுடன் ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரவி கருணாநாயக்க, ஜயலத் ஜெயவர்த்தன, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, ஜே.வி.பி நாடாளுமன்றக்குழு தலைவர் அனுர குமார திஸநாயக்க உட்பட ஐக்கிய தேசிய முன்னணியை சேர்ந்த முக்கிய பிரமுகர்களும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற் கொண்டனர். (ச-5)


## ஐங்கரன் திருமண சேவை

மணமகள் தேவை

எங்களிடம் யாழ்.இந்து உயர்குலம் U.K Citizen 34,36,39 வயது, Canada Citizen 31 வயது, Swiss Citizen 33 வயது, Austerliya Citizen 36 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணி நேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை.

தொடர்பு :- லண்டன் ஐங்கரன்

T.P No. 0044 7535384166

0044 7508295863

Fax No: 0044 2086720673

(84)

## மணப் பெண் தேவை

யாழ்.இந்து உயர்குலம். அரசாங்கத்துறையில் கடமையாற்றும் 18.09.1980 இல் பிறந்த மூலம் நட்சத்திரம் உடைய சகோதரிக்கு அரசாங்கத்துறையில் கடமையாற்றும் மணமகனை சகோதரன் தேடுகின்றார். செவ்வாய்க் குற்றம் இல்லை. சீதனம் கொடுக்கப்படும்.

தொடர்பு:-

0044-7784772542

(84)

## தங்குமிட வசதிகள்

குளிரூட்டப்பட்ட (AC) அறைகள், தங்குமிட வசதிகள் யாழ். நகரில் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு,

தொலைபேசி எண்:-

077 7283811,

077 1387115

(90)

## விற்பனைக்கு

கால்நடை தீவனங்கள், உழுந்துக் குறுணல், உழுந்துக் கோது, 2 ஆம் தர கறுப்பு கவ்வி விற்பனைக் குண்டு.

தொடர்புகளுக்கு,

தொலைபேசி எண்:-

077 7283811,

077 1387115

(90)

## விற்பனைக்கு

வவுனியாவில் இருந்து தருவிக்கப்பட்ட தரமான கல் நீக்கிய சிவப்பு நாட்டரிசி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு,

தொலைபேசி எண்:-

077 7283811,

077 1387115

(90)

## விற்பனைக்கு

குருநாகல் மாவட்டத்திலிருந்து தருவிக்கப்பட்ட கலப்படம் அற்ற தரமான புளி தொகையாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு,

தொலைபேசி எண்:-

077 7283811,

077 1387115

(90)

## விற்பனைக்கு

வேம்படி மகளிர் கல்லூரி வீதி, நீதிமன்றம் அருகில் 4 பரப்புக் காணியும் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அண்மையில் வீடு வளவும், கோயில் வீதி, முருகேசர் லேன், பிரம்படி லேன், பருத்தித்துறை வீதி, வேறு புதிய வீடும் விற்பனைக்குண்டு. விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். வேறு தரகர் தேவையில்லை.

தொடர்பு:- சுந்தரம்

T.P. 222 9177

(193)

## விற்பனைக்கு

கிறேற் டென் ஆண் நாய்க் குட்டி விற்பனைக் குண்டு. ஒன்றரை வயது.

தொடர்பு:-

திருமதி யோகநாதன்

(மாஸ்டர்)

குளிப்பன் லேன், வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை

(C-4108)

## கடை வாடகைக்கு

43, பலாலி வீதி, கந்தர் மடத்தில் நல்ல நிலையில் உள்ள கடை வாடகைக்கு உண்டு. நேரில் வரவும்.

தொடர்புக்கு,

T.P. 021 300 6684

(பவானி)

(191)

## காணவில்லை

01.01.2010 நண்பகல் 12 மணியிலிருந்து கறுப்பு நிற பொக்கட் பெண் நாய்க்குட்டி (Pocket Dog) வால் நல்ல சடையும் செம்படைக் கலரும், யாராவது கண்டால் கீழ்க் குறிப்பிடும் விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் தரப்படும்.

கணேசா பத்திரிகைக் கடை

சி.சத்தியமூர்த்தி

329, மெயின் வீதி, பருத்தித்துறை.

T.P. 021 226 3928

(C-4106)

## விற்பனைக்கு

பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்துக்கள், சொக்ஸ் உட்பட அனைத்து வகையான காலணிகளும், பாடசாலை உபகரணங்களும், பயிற்சிப் புத்தகங்களும் மலிவான விலையில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்,

சுப்பர் சூஸ்

7/1, செங்குந்தா நவீன சந்தை, மேல்மாடி, கல்வியங்காடு.

(194)

## வேலையாட்கள் தேவை

கணனி ரைப் செற்றிங் தெரிந்தவர்கள் தேவை.

அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம்.

நேரில் வரவும். (8 AM- 5PM)

ஐங்கரன் ஓவ் செற்

சிலையடி, மந்திகை

T.P. 021 226 3641

(C-4103)

# ACCA புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உட்பட 170 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ACCA - Association of Charted Certified Accountants கற்கை நெறிக்கான புலமைப்பரிசில் பரீட்சை - 2010 அண்மையில் நடைபெற்றது. மேற்படி பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி மாணவர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி பரீட்சையில் CAT - Certified Accounting Technician கற்கை நெறியில் எஸ். பிரகண்ணனும் ACCA கற்கை நெறியில் செல்வி கே. நந்திகா ஆகியோர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

CAT கற்கை நெறிக்கு தோற்றியவர்களில் 20 மாணவர்களும், ACCA கற்கை நெறிக்கு தோற்றியவர்களில் 100 மாணவர்கள் முதற் தொகுதியில் தெரிவு செய்யப்படுகின்றனர். பதிவு செய்வதற்கான இறுதித் திகதி இம் மாதம் 10 ஆம் திகதி ஆகும்.

குறித்த திகதியினுள் பதிவு செய்யாத மாணவர்களின் இடத்திற்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியலடிப்படையில் அடுத்த தொகுதி மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரங்களினை Jaffna Technical Institute (JTI) விளம்பரப் பலகையில் பார்வையிடுவதுடன் பதிவினையும் மேற்கொள்ள முடியும். மேலும் ACCA கற்கை நெறி வழிகாட்டி கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பி. தக்ஷன் (ACCA Ftms Global in singapore) ஆல் நிகழ்த்தப்படவுள்ளது. (ஓ)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலர் சீ. ஏ. மோகன்ராஜ் தலைமையில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-134)



இணுவில் இளம் தொண்டர் சபை அறநெறிப் பாடசாலை அதிபர் மா.ந. பரமேஸ்வரனின் நெறியாள்கையில் அற நெறிப்பாடசாலை மாணவர்களினரால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தப்பட்ட இசை நாடகத்தின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம்.

# பேரூந்து சேவை சீரின்மையால் பொதுமக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் இருந்து தினமும் காலை 6 மணிக்கு யாழ். நோக்கி புறப்படும் 751 இலக்கப் பேரூந்து சேவை கடந்த சில தினங்களாகச் சீரின்மையால் பொதுமக்கள், அரச ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் தத்தம் கடமைகளுக்கு உரிய நேரத்திற்கு செல்ல முடியாமல் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து அப்பிரதேச மக்கள் பருத்தித்துறை பேரூந்து சபைக்கு மகஜர் ஒன்று அனுப்பியுள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது. (ஓ)

# வாரம் ஒரு தகவல்

## தூங்க முடியவில்லை

"டாக்டர் நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்"

"என்ன பிரச்சினை உங்களுக்கு?"

"மனுஷன் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை"

"ஒரு மனிதன் தன் வாழ்நாளில் மூன்றிலொரு பகுதியை தூங்கியே தான் கழிக்கிறான். தெரியுமல்லவா?"

"அவர்களெல்லாம் கொடுத்து வைத்தவர்கள்"

"அது இருக்கட்டும்... ஒருவன் எப்படித் தூங்குகிறான் என்பதை வைத்துக்கூட அவனுடைய மனதைப் புரிந்து கொள்ளலாம்"

"அது எப்படி?"

"ஒருகாலை நிமிர்த்தியும் இன்னொரு காலை மடக்கியும் வைத்துக் கொண்டு தூங்குபவர்களுக்கு இரண்டு விதமான குணங்கள் உண்டாம். இவர்களெல்லாம் சில நேரங்களில் தங்களைப் பலசாலிகளாகக் காட்டிக் கொள்வார்களாம். ஆனால் அதுவே அவர்களுடைய குணம் இல்லையாம் மனதுக்குள்ளேயே பதுங்குவார்களாம்."

"அப்படியா?"

"ஆமாம்! மனதுக்குள் ஒரு தவிப்பு அல்லது பயம் உள்ளவர்கள் பந்துமாரிச் சுருண்டு படுத்துக் கொண்டு போர்வைக்குள் பதுங்கிக் கொள்வார்களாம். அந்தப் பயம் போனதற்குப் பின் நல்லா நிமிர்ந்து படுத்துத் தூங்குவார்களாம்"

"டாக்டர் நீங்கள் சொல்வதெல்லாம் தூங்குபவர்களைப் பற்றி... என்னைப் போல் தூங்க முடியாதவனுக்கு ஏதாவது வழி உண்டா... அதைச் சொல்லுங்க..."

"உங்களால் ஏன் தூங்க முடியவில்லை?"

"மனைவி தொணதொண என்று பேசிக்கொண்டிருந்தால் எப்படி தூங்க முடியும்?"

"எங்கள் வீட்டிலும் அதே பிரச்சினைதான். அதற்கு வழி இதுதான். இந்தாங்க"

"என்ன இது?"

"தூக்க மாத்திரை"

"ரொம்ப நன்றி டாக்டர். இதை நான் எப்படி பாவிக்க வேண்டும்."

"இது உங்களுக்கில்லை. உங்கள் மனைவிக்கு"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கிராம அலுவலர்கள் மீள் நியமனம்

வலி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஓய்வு பெற்றுச் சென்றுள்ள மூன்று கிராம சேவையாளர்கள் மீண்டும் ஆறுமாதங்கள் சேவைபுரிய மீள் நியமனம் பெற்றுள்ளனர்.

இதன்பிரகாரம் முத்துக்குமாரசாமி உரும்பிராய் வடக்குக்கும், பொ. மகேந்திரன் இருபாலை கிழக்குக்கும், க. வைத்தியநாதன் புத்தூர் கிழக்குக்கும் நியமனம் பெற்றுள்ளனர். (ஓ-134)

# இராசி பலன்

3.01.2010

(மார்கழி 19, ஞாயிற்றுக்கிழமை)

திருதியை முன்னிரவு 7.12 மணிவரை

ஆயிலியம் பின்னிரவு 3.39 மணிவரை

இராகுகாலம் 5.00 - 6.30 மணிவரை

சுபநேரம் 9.30-11.00 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பயந்த சுபாவம், பித்த ரோகம், புதிய தகவல், அதிக பிரயாசை. |
| இடபம் | இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், பண வருவாய். |
| மிதுனம் | கோபப்படுதல், வேலைச்சுமை, எடுத்த காரியம் தாமதமாகும், தன விரயம். |
| கடகம் | சத்துரு ஜெயம், நண்பர்கள் உதவி, புதிய பொருள் சேர்க்கை, போசன சுகம். |
| சிங்கம் | பிதாசிந்தை, மனக்கிலேசம், எடுத்த காரியம் தாமதமாகும், போசனசுகம். |
| கன்னி | தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, பெருமையடைதல், முயற்சி கைகூடும். |
| துலாம் | சுபநிகழ்வு, அதிகாரம், உறவினர் வருகை, உற்சாகம். |
| விருச்சிகம் | ஆரோக்கியக்குறைவு, அச்சமான நிலை, ஆன்றோர் சந்திப்பு, திடீர் பயணம். |
| தனுசு | எதிர்பாராத அச்சம், காரிய தாமதம், ஆரோக்கியக்குறைவு, போசன சுகம். |
| மகரம | நல்ல வரவேற்பு, காரிய அனுகூலம், களஸ்திர நன்மை, பொருள் சேர்க்கை. |
| கும்பம் | பகைவர் நேசம், எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம், உற்சாகம். |
| மீனம் | காரிய இடையூறு, மனச்சஞ்சலம், பணவிரயம், புதிய திருப்பம். |

வளவன்

## ஆவணங்கள் இல்லாததால் அடையாள அட்டை பெறவில்லை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அச்செழு கிராம சேவையாளர் பிரிவில் இதுவரை எழுபத்தைந்து பேருக்கு மேல் தேசிய அடையாள அட்டைகள் பெறவில்லை என தெரிய வருகிறது.

அடையாள அட்டை பெறுவதற்குரிய சில ஆவணங்கள் அவர்களிடம் இல்லாத காரணத்தால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நோக்கில் அப்பகுதி கிராம சேவையாளர் துரிதமாகச் செயல்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-134)

## மகரஜோதி பெருவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு யாழ். சபரீச ஐயப்பன் தேவஸ்தான மகரஜோதி மண்டலப் பெருவிழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை பாற்குட பவனியும் பாலாபிஷேகமும் 6 ஆம் திகதி புதன்கிழமை (மார்கழி உத்தர தினத்தில்) காலை 4 மணிக்கு ஐயப்பன் ஜெயந்தி தினமும் 14 ஆம் திகதி மகரஜோதி பெருவிழா, திரு ஆபரணப் பெட்டி வருதல் மற்றும் 18 படிப்பூஜை ஆகியன நடைபெறவுள்ளன. (ஓ)

## அலங்கார உற்சவம்

(அல்வாய்)

பருத்தித்துறை சிந்தாயாத்திரை சித்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 5 ஆம் தீகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் தினமும் மாலை 5 மணிக்கு உருத்திராபிஷேகம் நடைபெற்று 5.30 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து விநாயகப் பெருமான், வள்ளி தெய்வானை சமேதராய் முருகப் பெருமான் திருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது.

மேலும் உற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை பூங்காவனமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4-19)

# இலங்கை அணியின் நிறைவேறாத கனவு

இந்திய மண்ணில் ஒரு டெஸ்ட் போட்டியிலாவது வெல்ல வேண்டும். ஒருநாள் தொடரை கைப்பற்ற வேண்டும் என்ற வீர வசனம் பேசி இந்தியா சென்ற இலங்கை அணியினர் இம்முறை மீண்டும் வெறுங்கையுடன் நாடு திரும்பியுள்ளனர்.

கடந்த 1983 முதல் இலங்கை அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து வருகிறது. இதுவரை இந்திய மண்ணில் பங்கேற்ற 14 டெஸ்ட் போட்டிகளில் ஒன்றில் கூட இலங்கை அணி வெற்றி பெற்றது இல்லை.தவிர அன்று முதல் இன்று வரையிலும் ஒரு முறை கூட இரு அணிகள் பங்கேற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரையும் இலங்கை வென்றது இல்லை.

இந்நிலையில் கடந்த நவம்பர் 16 முதல் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணி 3 டெஸ்ட் 2 இறுதி -20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது. தொடர் ஆரம்பமாகும் முன்பு இலங்கை அணித்தலைவர் சங்ககாரா கூறுகையில்,

இந்திய மண்ணில் எங்கள் அணி மோசமான தோல்விகளை அடைந்துள்ளது. இம்முறை முழு பலத்துடன் உள்ள நாங்கள் அந்த சோக வரலாற்றை மாற்றி அமைப்போம் என பேசினார்.

### சிறப்பான ஆரம்பம்

சங்ககாரா சொல்லியது போல் முதல் டெஸ்டில் அபார ஆரம்பம் கண்டனர். இந்திய அணி முதல் இன்னிங்சில் 32 ஓட்டங்கள் எடுப்பதற்குள் நான்கு முக்கிய விக்கெட்டுக்களை இழந்து திணறியது. ஆனால் இலங்கை அணியினர் தொடர்ந்து சிறப்பாக செயல்படாத நிலையில் விழித்துக்கொண்ட இந்திய வீரர்கள் முதல் இன்னிங்சில் 400 இற்கும் அதிகமான ஓட்டங்களை (426) குவித்தனர்.

### இந்தியா ஆதிக்கம்

பதிலுக்கு இலங்கை வீரர்கள் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்திய மண்ணில் அதிகபட்ச ஓட்டங்களை (760) எடுத்தனர். அவ்வளவு தான். இந்திய அணியின் தோல்வி உறுதியானது என்ற மிதப்பில் இருந்த இலங்கை அணிக்கு போட்டியின் கடைசி நாளில் சச்சின், லக்ஸ்மன் உதவியுடன் சமனிலை செய்து பதிலடி கொடுத்தனர்.

முதல் முறையாக இந்திய மண்ணில் டெஸ்ட் போட்டியை வெல்ல கிடைத்த அருமையான வாய்ப்பை இலங்கை வீரர்கள் கோட்டை விட்டனர். அடுத்து நடந்த 2 போட்டிகளில் இந்திய அணி வெல்ல தொடரை 0-2 என இலங்கை மீண்டும் இழந்தது.

### சிறிய ஆறுதல்

பின் நடந்த இரண்டு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரை இலங்கை அணியினர் 1-1 என சமனிலை செய்தனர். இந்நிலையில் இந்திய அணியின் யுவராஜ் காயம் பன்றிக்காய்ச்சலால் சிறிசாந்த் விலகல் போன்ற காரணத்தால், இலங்கை அணிக்கு ஒருநாள் தொடரை வெல்ல வாய்ப்பு ஏற்பட்டது.

### கடும்போட்டி

ஒருநாள் தொடரில் எதிர்பார்ப்புக்கு மாறாக கடும் போட்டியை இலங்கை அணி கொடுத்தது. முதல் போட்டியில் இந்தியாவின் (414) இலக்கை விரட்டிய இலங்கை அணி இந்திய ரசிகர்களை சற்று அதிகமாகவே அதிர வைத்தது. அடுத்த போட்டியில் 300 இற்கும் மேற்பட்ட ஓட்டம் எளிதாக விரட்டி வென்றது.

### இளம் படையின் எழுச்சி

இந்நிலையில் தடை காரணமாக அணித் தலைவர் தோனியும் விலக அணியை வழி நடத்திய சேவாக் இளம் வீரர்களின் எழுச்சியால் அடுத்தடுத்த போட்டிகளில் எளிதாக வெல்ல தொடரில் 1-3 என பின்தங்கிய இலங்கை அணி மீள முடியாத இடத்துக்கு சென்று விட்டது. ஐந்தாவது போட்டி ஆடுகள சர்ச்சையால் இரத்துச் செய்யப்பட்டது.

### மீண்டும் சோகம்

பல போட்டிகளில் வெற்றிபெற நல்ல வாய்ப்புகள் இருந்தும் இலங்கை அணி மீண்டும் ஒரு முறை இந்திய மண்ணில் தனது சோக பயணத்தை நிறைவு செய்து நிறைவேறாத கனவுடன் நாடு திரும்பியது.

இந்த தோல்விகள் குறித்து சங்ககரா



கூறுகையில், முதல் டெஸ்டில் நாங்கள் வெற்றி பெற நல்ல வாய்ப்பு இருந்தும் போதிய பந்துவீச்சு இல்லாததால் தொடரையே இழந்தோம். ஆனால் ஒருநாள் தொடரின் 4 போட்டியிலும் வெற்றிக்கு அருகில் சென்று கடும் போராட்டத்தை கொடுத்தோம். அனைத்து ஆட்டங்களும் வெற்றி , தோல்வி சிறிய இடைவெளியில் தான் முடிந்துள்ளது என்றார்.

# கரோலினின் சின்ன, சின்ன ஆசை



டென்னிஸ் அரங்கில் " டீன் ஏஜ்" புயலாக அசத்திக்கொண்டிருக்கிறார் கரோலின் வோஸ்னியாக்கி. இவருக்கு இந்த ஆண்டு " சிறப்பாக அமைந்தது. யு.எஸ். ஓபன் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய இவர், தரவரிசையில் பட்டியலில் நான்காவது இடத்துக்கு முன் னேறினார். அடுத்த ஆண்டும் அபார ஆட்டத்தை தொடர்ந்து, முதலிடத்தை பிடிக்க காத்திருக்கிறார்.

டென்மார்க்கை சேர்ந்தவர் 19 வயதான கரோலின் வோஸ்னியாக்கி. இவரது அம்மா அன்னா ஒரு கைப்பந்து வீராங்கனை. போல ந்து நாட்டின் தேசிய கைப்பந்து அணிக்காக விளையாடியுள்ளார். அப்பா பியாட்டர், ஒரு கால்பந்து வீரர், இவர்களது குடும்பம் போலந்தில் இருந்து டென்மார்க்கில் குடியேறியது.

விளையாட்டுப் பாரம்பரியத்தில் பிறந்த கரோலினுக்கு , இளம் பருவத்தில் இருந்தே டென் னிஸ் மீது ஆர்வம் அதிகம். இவரது பயிற்சியாளராக அப்பா பியாட்டர் செயல்பட, சர்வதேச போட்டிகளில் முத்திரை பதித்தார்.

இந்த ஆண்டு யு.எஸ். ஓபன் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.

இதன் மூலம் கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய முதல் டென்மார்க் வீராங்கனை என்ற பெருமை பெற்றார். இறுதிப் போட்டியில் பெல்ஜியத்தில் கிம் கிளைஸ்டர்சிடம் தோல்வி அடைந்தார். ஆனாலும் தரவரிசையில் காத்திருக்கும் இவர், சமீபத்தில் கால்பந்து வீரர் பெர்னாண்டோ டோரஸ் அனுப்பிய கிறிஸ்துமஸ் பரிசை நினைத்து பூரிக்கிறார்.

இதுகுறித்து கரோலின் கூறியது,

ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ டோரசின் ஆட்டம் எனக்கு மிகவும் பிடிக்கும். இதனைக் கேள்விப்பட்ட அவர், தான் விளையாடும் லிவர்பூல் கிளப் அணியின் " டி -சேர்ட்" ஒன் றை எனக்கு கிறிஸ்துமஸ் பரிசாக அனுப்பி னார். அவரது கையெழுத்திட்ட "டி -சேர்ட்டை" உடனடியாக அணிந்து கண்ணாடியில் பார்த் தேன்.

அந்த சிவப்பு நிற உடை பார்ப்பதற்கு மிகவும் பிரமாதமாக இருந்தது. இந்த ஆண்டு கிராண்ட்ஸ்லாம் இறுதிப்போட்டியில் விளை யாடுவேன் என சற்றும் எதிர்பார்க்கவில்லை. இந்நிலையில் யு.எஸ்.ஓபன் இறுதிப் போட்டி யில் பங்கேற்றது பெரிய விடயம். தற்போது தரவரிசை பட்டியலில் நான் காவது இடத்தில் உள்ளேன்.

"முதல் 20" வீராங்கனைகளில் நான் தான் மிக இளம் வீராங்கனை. என்னைப் பொறுத்தவரை பெரிதாக சாதிக்க நினைப்பது கிடையாது.

சின்ன, சின்ன ஆசை தான் உண்டு. உதாரணமாக இந்த ஆண்டு அவுஸ்திரேலியன் ஓபன் மூன்றாவது சுற்றுவரை முன்னேறினேன். அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியன் ஓபன் மூன்றாவது சுற்றுவரை முன்னேறினேன். அடுத்த ஆண்டு மூன்றாவது சுற்றைக் கடந்தால் பெருமைப்படுவேன்.படிப்படியாக முன்னேற்றம் காணவே விரும்புகிறேன் இவ்வாறு கரோலின் கூறினார்.

## வி.கழகங்களுக்கிடையில் கலந்துரையாடல்

(வடமராட்சி)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களிற்கிடையிலான பிரதேச விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலக பொது மண்டபத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களும் புதிதாக பதிவு செய்யப்படவுள்ள கழக தலைவர்கள், செயலாளர்களைக் கலந்து கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (ச-24)

# தொடர்ந்து வேகத்தில் அசத்துவேன்

இந்திய அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் சகீர்கான். கடந்த ஐ.பி.எல். இரண்டாவது தொடரின்போது இவருக்கு தோளில் காயம் ஏற்பட்டது. இதனால் இந்த ஆண்டு முழுவதும் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலைக்குச் சென்றார். ஆனால் காயத்தில் இருந்து விரைவில் மீண்டு வந்த இவர் உள்ளூர் போட்டியில் அசத்தினார்.இதையடுத்து சமீபத்தில் நடந்த இலங்கை அணிக்கு எதிரான தொடரில் தேர்வு செய்யப்பட்டார். மும்பையில் நடந்த மூன்றாவது டெஸ்ட்டில் அசத்தலாக பந்துவீசிய சகீர்கான், இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

இதுகுறித்து சகீர்கான் அளித்த பேட்டியில்,

◆ *தற்போது வேகப்பந்து வீச்சாளர்கள் அதிகமாக அசத்துவதால்தான் இந்திய அணி வெற்றிபெறுகிறது என்கிறார்களே ?*

தற்போதைய வேகப்பந்துவீச்சாளர்கள் அதிக அனுபவம் உள்ளவர்கள். இதனால் தான் அணியின் வெற்றிக்கு அவர்களால் உதவமுடிகிறது தவிர இன்னும் அதிக வீரர்கள் தங்களை நிரூபிப்பார்கள். இது ஆரோக்கியமான போட்டியாக உள்ளது.

◆ *இந்திய அணியின் பந்துவீச்சில் உங்களது பங்கு என்ன?*


என்னுடைய பந்துவீச்சிற்கு மட்டுமல்ல மற்ற பந்துவீச்சாளர்களுக்கும் பொறுப்பெடுத்து செயல்படுவதில் மகிழ்ச்சியாக உள்ளேன். வேகப்பந்துவீச்சில் கடந்த சில ஆண்டுகளாக என்ன அனுபவம் எனக்கு கிடைத்ததோ அதனை மற்ற வீரர்களிடம் பகிர்ந்து கொண்டு செயற்படுகிறேன்.

◆ *பந்துவீச்சிற்கு ஒத்துழைக்காத மும்பை டெஸ்டில் 5விக்கெட்டுக்கள் வீழ்த்தியது குறித்து?*

காயத்திற்குப் பின் மீண்டு வந்த நிலையில் இலங்கைக்கு எதிரான மும்பை டெஸ்டில் 5விக்கெற் கைப்பற்றியது எனக்கு மிகவும் முக்கியமானது. மற்ற அனைத்தையும் விட சிறப்பானதாக இது இருந்தது. இன்னும் நான் அசத்தலாக செயற்படுகிறேன் என்று எண்ணம் தோன்றியது. வர இருக்கும் பங்களாதேஷ் தொடரில் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு தொடர்ந்து அசத்துவதற்கு இது உதவும்.

◆ *காயமடைந்து அணியில் இருந்து விலகியபோது உங்கள் மனநிலை எப்படி இருந்தது. இதில் எப்படி மீள்வது?*

காயத்தினால் போட்டிகளில் பங்கேற்காதபோது தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டேன். காயமடையும்போது இதுதான் முக்கியம். வெளிப்படையாகச் சொல்வதென்றால் அணியில் பங்கேற்காமல் இருக்கும் போது மிகவும் ஏமாற்றமாக இருந்தது.



ஆனால் தன்னம்பிக்கை வைத்தால் சரியான முறையில் மீண்டு வந்துவிடலாம்.

◆ *இப்போது உங்கள் இந்திய அணி டெஸ்ட் தர வரிசையில் முதலிடம் பிடித்துள்ளது. எதிர்காலத்தில் என்ன சவால் காத்திருக்கிறது?*

டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பிடித்த அந்த நாள் மறக்க முடியாதது. எதிர்காலத்தில் என்ன செய்யப் பேபாகிறோம் என்பதை விட முதலிடம் பிடித்ததை தொடர்ந்து சிறப்பாகக் கொண்டாடி வருகிறோம்.

## வலைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(வடமராட்சி)

கரவெட்டி கிழக்கு வாலிப வட்ட விளையாட்டுக் கழகத்தினரால் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 14ஆம் திகதி வடமராட்சிக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களிற் கிடையிலான வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டியில் கலந்து கொள்ளும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 5ஆம் திகதி க்கு முன்பதிவுகளைமேற்கொள்ளுமாறு கழகச்செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ச-24)

# யாழ்ப்பாணத்துப் பண்பாடு

7

## மறந்தவையும் மறைந்தவையும்



வீட்டு வளவின் வாசலுக்குச் சங்கடப் படலை என்ற கேற் அமைக்கப்பட்டிருந்தது. இந்தப் படலையை மூடிமேலே கூரை போடப்பட்டிருந்தது. இக்கூரை சங்கடப் படலையின் பாது காப்புக்குப் பயன்பட்டதோடு, வழிப்போக்கர்கள் இளைப்பாறிச் செல்லவும் உதவியமை குறிப்பிடத்தக்கது.

சில இடங்களில் சங்கடப் படலைக் கூரைக்குக் கீழே வெளிப்புறமாக இருமருங்கும் திண்ணைகள் அமைக்கப்பட்டிருந்தன. இத்திண்ணைகளையே வழிப்போக்கர்கள் பெரும்பாலும் இளைப்பாறப் பயன்படுத்துவர். யாழ்ப்பாணத்திலே ஒரு காலத்தில் நிலவிய மனித நேயத்திற்கும் சமூகப் பொறுப்புணர்வுக்கும் இச் சங்டப் படலைத் திண்ணைகள் சாட்சிகளாய் விளங்கின.

'நல்லநாள் பெருநாள்' என்று உறவினர்கள் வந்து உணவருந்தக்கூடிய (பந்தியாக இருந்தது) வகையிலே வீட்டின் ஒரு பகுதி அமைக்கப்பட்டதும் உண்டு. யாழ்ப்பாணத்துப் பெரியவர் ஒருவரின் சமரகவியில் வீட்டில் விருந்தோம்ப விந்தையுடன் கூடமொன்றை நாட்டில் முன்மாதிரியாய் நன்கமைத்தாய்" என்று இடம் பெறுவதையும் இவ்விடத்திலே சுட்டிக்காட்டலாம்.

யாழ்ப்பாணத்திலே சபை சந்திக்குரிய வீடாகக் கட்ட வேண்டுமென்ற மனநிலை இன்றும் இருப்பதை அவதானிக்கலாம். காலச் சூழ்நிலைக்கேற்ப யாழ்ப்பாணத்து வீடுகளின் அமைப்புக்கள் மாறிக் கொண்டே வருகின்றன.

### பொருளியல் - பழங்குபொருட்கள் - போக்குவரத்து

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்களிலே பொருளியல், புழங்கு பொருட்கள், போக்குவரத்து என்பவை ஒன்றுடன் ஒன்று நெருக்கமான தொடர்புடையவையாகவே காணப்படுகின்றன. எனவே இவற்றைத் தனித்தனியே குறிப்பிடாது ஒன்றாக குறிப்பிடுகின்றோம்.

யாழ்ப்பாணத்துப் பொருளியல் அமைப்புப் பெரும்பாலும் விவசாயமாகவே இருந்தது. அவற்றை மேட்டு நிலப் பயிர்ச் செய்கை பள்ள நிலப் பயிர்ச் செய்கை எனப் பகுக்கலாம். கரையோரப் பகுதிகளில் மீன்பிடி முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக இருந்தது. இவை பற்றி யாழ்ப்பாணத்து உணவுப் பழக்கங்கள் பற்றிக் கூறியவிடத்து விரிவாக விளக்கியுள்ளோம்.

யாழ்ப்பாணத்து விவசாய, பொருளாதாரப் பண்பாட்டில் புகையிலைச் செய்கைக்கு முக்கியமானதோர் இடமுண்டு. யாழ்ப்பாணத்து மண்வளம் புகையிலைச் செய்கைக்கு மிகவும் உகந்ததாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

காசுப்பயிரான புகையிலைச் செய்கை யாழ்ப்பாணத்திலே புதிய பணக்கார வர்க்கமொன்றினை உருவாக்கியது. யாழ்ப்பாணத்தில் இருந்து புகையிலை தென் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. அதிக வருமானந்தரும் புகையிலை வெண்காயம் முதலான பயிர்ச் செய்கைகளினால் நிலவுடைமையாளரும் வணிகர்களுமே அதிக பயனைப் பெற்றனர்.

யாழ்ப்பாணத்துப் பொருளாதார வளர்ச்சியிலே புகையிலைப் பயிர் பெரிய பங்களிப்பினைச் செய்துள்ளது. புகையிலை பயிரிடப்பட்டவர்களிலும் பார்க்கப் புகையிலையைத் தென் இலங்கைக்கும், மலையாளத்திற்கும் ஏற்றுமதி செய்தவர்கள் பெரும் பணக்காரர்கள் ஆனார்கள்.



பனம் பொருட்களைக் கொண்டு செய்யப்படும் புழங்கு பொருட்கள்

தென் இலங்கையிலே (சுருட்டுக் கடை, புகையிலைக்கடை) புகையிலை யைப் பிரதான விற்பனைப் பொருளாகக் கொண்டு கடைகள் பல தோன்றின. இதனால் உள்ளூர் முதலாளித்துவச் சமூகமொன்று யாழ்ப்பாணத் தீபகற்பத்திலே உருவாகியது.

புகையிலையின் வருகை சுருட்டுக் கைத்தொழில் என்ற தொழில் வகையையும் உருவாக்கியது. சுருட்டுக் கைத் தொழில் நிலையங்கள் 'சுருட்டுக் கொட் டில்கள்' என்ற பெயரால் அழைக்கப் பட்டன.

சுருட்டுக் கொட்டில்களில் ஒரு 'படிப்புப்' பாரம் பரியமும் யாழ்ப்பாணத்திலே நிலவியமை குறிப்பிடத் தக்கது. யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் 'படிப்புப்' பெற்றிருந்த முக்கியத் துவத் தினைச் சுருட்டுக் கொட்டில் வாசிப்பும் சுட்டி நிற்கிறது எனலாம்.

பெரிய எழுத்து மகாபாரதம் இராமாயணம், நல்லதங்காள், விக்கிரமாதித்தன் கதைகள் முதலியன சுருட்டுக் கொட்டில்களிலே வாசித்துக் காட்டப்பட்டன என அறியமுடிகின்றது. ஒரு வகையிலே புராணப் படிப்பு முறை போல 'இவ் வாசிப்பு மரபு' அமைந்தது எனக் கருதலாம். பிற்காலத்தில் தினசரிப் பத்திரிகை வாசிப்பதாக இம் மரபு மாற்றம் பெற்றது என்பர்.



பணப்பயிரான புகையிலை

யாழ்ப்பாணத்துப் பொருளியற் பண்பாட்டோடு மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்த புழுங்குபொருட் பயன்பாட்டுப் பொருட்கள் என்றும் கூறுவர். ட்ண்பட்டின் கண்ணாடி புழங்கு பொருட்கள்" என்று பண்பாட்டு ஆய்வாளர்கள் கூறுவர். யாழ்ப்பாணத்திலே பயன்படுத்தப் பட்ட புழங்கு பொருட்கள் இப்பிரதேச மக்களின் பண்பாட்டுக் கோலங்கள் பலவற்றைத் தெளிவு படுத்துகின்றன.

புழங்குபொருட் பண்பாட்டினை இரண்டு தளங்களிலே நோக்கலாம்.

ஒன்று : சிறுகைத் தொழில் வகுப்பினரின் பொருளியல் சார்ந்தது.

இரண்டு : புழங்கு பொருட் பாவனையாளர்களைச் சார்ந்தது

புழங்கு பொருள் உற்பத்தியாளர்கள் தமக்கு வருமானம் ஈட்டித் தரும் தொழிலாக மாத்திரம் செய்யாது, தமதும் பாவனையாளர்களினதும் அழகியல் உணர்வுகளையும் அதிலே பயன்படுத்தியமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் பணம் பொருட்களைக் கொண்டு செய்யப்படும் புழங்கு பொருட்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை. பனையோலையினாற் செய்யப்படும் புழங்கு பொருட்களிலே அழகியல் அமிசங்களும் பொருந்தியிருந்தன.

பனையோலையாற் செய்யப்பட்ட புழங்கு பொருட்களைப் பட்டியல் இடுவது நமது நோக்கமன்று பனை ஓலையாற் செய்யப்பட்ட புழங்கு பொருட்கள் சிலவற்றைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை பதிவு செய்துள்ளார்.

"அழகுறு வன்னம் அமைவுறுப் போட்டுத்
தொழிலமை வனிதையர் திறமையோடிழைத்த
பெட்டி, பாய், குட்டான், பெயர்பெறு கதிர்ப்பாய்
அடுக்குப் பெட்டியும் அருவிலைமூடலும்
பிட்டவி நீத்துப் பெட்டியும் சுண்டும்
பனையின் குருத்தைப் பதனமாய் வார்ந்து
பன்னிறந் தீட்டிய பன்னோலை கொண்டு
கைவல் லிளையர் கருதி யிழைத்த
ஆனைப் பெட்டியு மழகிய தேரும்
கொட்டைப் பெட்டியுங் கிலுக்குப் பெட்டியும்"

மேலே குறிப்பிட்டவற்றுள் இடம் பெறும் பலபொருட்கள் இன்று பயன்பாட்டில் இல்லை. உதாரணமாகக் கொட்டைப் பெட்டி என்பதை இன்றைய தலைமுறையினரிற் பலர் அறியமாட்டார்கள். ஒரு காலத்தில் பல்வேறு பாவனைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட 'உமல்' என்பது இன்று பயன்பாட்டில் இல்லை.

19 ஆம் நூற்றாண்டிலே மிஷனரிமார் எழுதி வெளியிட்ட பாலபோதம் என்னும் பாடப்புத்தக்கத்தில் 'உமலின்' பயன்பாடு பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

உலோகத் தொழிலைப் பொறுத்த வரையில் விவசாயத்திற்கும் வீட்டுப் பாவனைக்குமுரிய உபகரணங்கள் இரும்பினாற் செய்யப்படடன.

கத்தி, கோடரி, சத்தகம், மண்வெட்டி, பாக்குவெட்டி, கலப்பைக் கொழு, குத் தூசி, எழுத்தாணி முதலியன இங்குள்ள கைவினைக் கலைஞர்களாற் செய்யப்பட்டன. இவற்றின் தரத்திலும் அமைப்பிலும் அழகியலோடு ஒட்டித் தமது நுட்பமான தொழிற்திறன்களையும் வெளிக்காட்டினார்.

செம்பு, பித்தளை, வெள்ளி புழங்கு பொருட்களும் சமய கரணத்தோடு தொடர்புடைய பயன்பாட்டுப் பொருட்களும் செய்யப்பட்டன. தாம்பாள் (துட்டம்) விளக்கு வட்டில் வெற்றிலைத் தட்டு முதலான உலோகப் பொருட்களிலே அழகியல் அமிசம் சிறப்பாகப் பேணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(அடுத்த ஞாயிறு தொடரும்)

பேராசிரியர்
எஸ். சிவலிங்கராஜா

### யாழ்.பல்கலைக்கழகத்தில் 20.11.2009 இல் நடைபெற்ற பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நினைவுப் பேருரை

# பாகிஸ்தானில் தொடரும் குண்டுவெடிப்பு சம்பவங்கள்

(பெஷாவர்)

பாகிஸ்தானின் பாஜாவூர் பகுதியில் நேற்று முன்தினம் நிகழ்ந்த சாலையோர குண்டு வெடிப்பில் தலிபான் எதிர்ப்பு பழங்குடியின் தலைவர் உட்பட ஆறு பேர் பலியாகியுள்ளனர்.

இதுகுறித்து பொலிஸார் கூறியதாவது,

பாகிஸ்தானின் பாஜாவூர் பகுதியில் தலிபான்களுக்கு எதிரான பழங்குடியினத் தலைவர் மாலிக் குல் ஷா அலிகான், ஒரு சிறுவன் ஆகியோர் உட்பட ஆறு பேர் வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது சாலையோரத்தில் வைக்கப்பட்ட வெடிகுண்டு, ரிமோட் கொண்ட்ரோல் மூலம் வெடிக்கச் செய்யப்பட்டது. இதில் ஆறுபேர் பலியாகினர் ; பலர் காயமடைந்தனர். அவர்கள் சென்ற வாகனம், குண்டு வெடிப்பில் சேதமடைந்து பாதுகாப்பு அதிகாரிகள், அந்த பகுதியில் போக்குவரத்தை தடை செய்து, மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையில் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள ஹங்கு மாவட்டத்தில் நிகழ்ந்த மற்றொரு சம்பவத்தில் வெடிகுண்டுகளை வைக்கும்போது ஏற்பட்ட வெடி விபத்தில் இரண்டு பயங்கரவாதிகள் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் ஷாஹசன்கெல் என்னும் இடத்தில் அமைந்துள்ள கைப்பந்து மைதானத்தில், வெடி பொருட்கள் நிரப்பப்பட்ட வாகனத்தை மோதி வெடிக்கச் செய்த தற்கொலைப் படைத் தாக்குதலில் ஏராளமானோர் பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இவ்வாறு பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்நிலையில் கடந்த திங்களன்று நடந்த மத ஊர்வலம் ஒன்றில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 43 பேர் உயிரிழந்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் வாதிகள் ஆகியோர் நேற்று முன்தினம் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தனர். இதனால் பாகிஸ்தானின் வர்த்தக நகரான கராச்சியில் நேற்று முன்தினம் முழு கடையடைப்பு நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-2-6)

# அமெ.விமானத்தை தகர்க்க முயன்ற தீவிரவாதி பற்றி திடுக்கிடும் தகவல்

கடந்த மாதம் 24 ஆம் திகதி நைஜீரியா நாட்டிலிருந்து அமெரிக்காவின் டெட்ராய்ட் நகருக்கு 300 பேருடன் சென்ற பயணிகள் விமானம் ஒன்றை தகர்க்க முயன்றதாக அல்கொய்தா தீவிரவாதி அப்துல் முத்தலீப் (வயது 23) கைது செய்யப்பட்டான்.

இவன் நைஜீரியாவின் லகோஸ் நகர விமான நிலையத்தில் இருந்து தனது பயணத்தை தொடங்கி நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாம் சென்று அங்கிருந்து டெட்ராய்ட் நகருக்குப் பயணமானதாக முதலில் தகவல்கள் வெளியானது.

ஆனால் நைஜீரிய அரசு நடத்திய விசாரணையில் அப்துல் முத்தலீப் கானா நாட்டில் இருந்து தனது பயணத்தை தொடங்கி இருப்பதும், ஆம்ஸ்டர்டாம் செல்லும் முன்பாக நைஜீரியாவின் லாகோஸ் நகர விமான நிலையத்தில் 30 நிமிட நேரம் மட்டுமே தங்கியிருந்ததும் தெரிய வந்ததாக அந்நாட்டின் தகவல் துறை மந்திரி டோரா அகுன்யிலி கூறியுள்ளார்.

கானா நாட்டில் இருந்து வெர்ஜின் நைஜீரியா பகுதி வழியாக டிசம்பர் 24 ஆம் திகதி லாகோஸ் விமான நிலையம் வந்த முத்தலீப்பின் கடவுச்சீட்டு சோதனை செய்து பார்க்கப்பட்டதாகவும், பின்பு ஆம்ஸ்டர்டாம் புறப்படும் முன்பாக மீண்டும் அந்த கடவுச்சீட்டு சோதனை செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (6-2)




# மெலமின் கலப்படம் சீனாவில் தொடரும் விவகாரம்

சீனாவில் பால் உற்பத்திப் பொருட்கள் சிலவற்றில் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் இரசாயனமான மெலமின் கலப்படம் காணப்பட்டதை அடுத்து ஷாங்காய் நகரின் பால் பண்ணை ஒன்றை மூடியதுடன் அதன் மூன்று மேலாளர்களை அரசு அதிகாரிகள் கைது செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2008 ஆம் வருடம் மெலமின் கலப்படம் என்ற விவகாரம் சீனாவில் தேசிய அளவில் பெரும் சர்ச்சையைத் தோற்றவித்திருந்தது.

சில பொருட்களில் ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு அதிகமாக மெலமின் கலப்பு இருந்ததே ஷாங்காய் பாண்டா பால் பண்ணை மூடப்படக் காரணம் என்று சீனாவின் அரச செய்தி நிறுவனமான ஸின்ஹுவா கூறியுள்ளது.

2008 இல் மெலமின் கலப்படம் கொண்ட பொருட்களை உட்கொண்டதால் குறைந்தது 6 குழந்தைகள் உயிரிழந்தும் இலட்சக்கணக்கான குழந்தைகள் உடல்நலம் பாதிக்கப்பட்டும் இருந்தமை தெரிந்ததே. (ஓ-2-6)

# பிரேசில் நிலச்சரிவு ; 44 பேர் பலி

(ரியோடி ஜனெய்ரோ)



அமெரிக்க கண்டத்தில் உள்ள பிரேசில் நாட்டில் ஆங்ரா தாஸ்ரியிஸ் தீவு உள்ளது. காடுகளும், மலைகளும் சூழ்ந்த இயற்கை எழில் கொஞ்சும் அத்தீவு ஒரு சுற்றுலாத் தலமாகும்.

புத்தாண்டு கொண்டாட அங்குள்ள விடுதிகளில் ஏராளமான மக்கள் தங்கியிருந்தனர். இந்த நிலையில் அங்கு பலத்த மழையுடன் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது.

இதையடுத்து அப்பகுதியில் இருந்த 3 வீடுகள் மற்றும் ஒரு விடுதியும் மண்ணுக்குள் புதைந்தன. இதில் 44 பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயம் அடைந்தனர்.

தகவல் அறிந்ததும் படகுகள் மூலம் பொலிஸாரும், கடற்படை வீரர்களும் சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். காயம் அடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். வீடுகள் மற்றும் விடுதிகள் மீது மலைப் பாறைகளும் மரங்களும் அதிக அளவில் சரிந்து கிடப்பதால் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டதாக ரியோடி ஜனேரியா துணை ஆளுநர் எலூயிஸ் பெர்னான்டோ எப்ஷோ்வா தெரிவித்துள்ளார்.

நிலச்சரிவில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை உயரும் வாய்ப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் அங்கு 3 நாட்கள் துக்கம் கடைப்பிடிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## வடகொரியாவில்

# அந்நிய நாட்டு நாணயங்களை பயன்படுத்த அந்நாட்டு அரசு தடை

வடகொரியாவில் அன்னிய நாட்டு நாணயங்களை பயன்படுத்த அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது. அமெரிக்க டொலர்கள், யூரோ, யென் மற்றும் இதர அயல்நாட்டு நாணயங்களை யாராவது பயன்படுத்தினால் அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும் என்று வடகொரிய அரச எச்சரித்துள்ளது.


அதிகரித்து வரும் பண வீக்கத்தை கட்டுப்படுத்திடவும் நாட்டின் பொருளாதாரத்தின் மீதான அரசு கட்டுப்பாட்டை வலுப்படுத்திடும் நோக்கிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரசு வட்டாரங்களை மேற்கோள்காட்டி சியோலிலிருந்து வெளியாகும் நாளிதழ் ஒன்றின் இணைய தளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதுவரை வடகொரியாவின் பல இடங்களில் குறிப்பாக அயல் நாட்டினர் வருகை தரும் - கடைகள், உணவு விடுதிகள் மற்றும் இதர சில்லறை விற்பனை நிலையங்களில் வெளிநாட்டு நாணயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## அமெரிக்காவில் அதிசய பிரசவம்!

# இறந்ததாக கருதியும் தாயும், சேயும் உயிருடன் இயல்பு நிலைக்குத் திரும்பினர்

(டென்வர்)



அமெரிக்காவில் பிரசவத்தின் போது மாரடைப்பில் மூச்சு நின்று போன தாய், சிசேரியன் மூலம் குழந்தையை வெளியே எடுத்தும் பிழைத்தார்.

அமெரிக்காவின் கொலராடோ பகுதியைச் சேர்ந்தவர் மைக். இவரது மனைவி டிரேசி. (வயது 33) 2 குழந்தைகளுக்கு தயான டிரேசி நிறைமாத கர்ப்பிணியாக இருந்தார். கிறிஸ்துமசுக்கு முதல்நாள் இரவு பிரசவ வலி ஏற்படவே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு பிரசவம் ஆவதற்கு முன் டிரேசிக்கு கடுமையான் மாரடைப்பு ஏற்பட்டது. அவரது சுவாசம் நின்றது. இரத்த அழுத்தம் நின்றது. இசிஜியில் இதயத் துடிப்பே இல்லை.

இதையடுத்து மாரடைப்பில் டிரேசி இறந்திருக்கலாம் எனக் கருதிய டாக்டர்கள். குழந்தையை காப்பாற்ற திட்டமிட்டனர். டிரேசிக்கு சிசேரியன் ஆபரேஷன் செய்து குழந்தையை வெளியே எடுத்தனர்.

குழந்தையின் இதயத் துடிப்பும் நின்றிருந்தது. உடல் வெப்பமாக இருந்தது குழந்தையை தந்தை மைக்கிடம் டாக்டர்கள் கொடுத்தனர். அவர் கையில் வாங்கிய சில விநாடிகளில் குழந்தை அசைய ஆரம்பித்தது. சில நிமிடங்களில் சகஜநிலைக்கு வந்து அழத் தொடங்கியது.

அதே 4 முதல் 5 நிமிடங்களில் டிரேசிக்கும் இதயத் துடிப்பு திரும்பியது. சுவாசம் சீரானது. இறந்ததாக டாக்டர்கள் கருதிய தாயும், சேயும் உயிருடன் இயல்பு நிலைக்குத் திரும்பிய அதிசயம் நடந்தது. இத்தனைக்கும் டிரேசி இறந்ததாக கருதி அவருக்கு மயக்க மருந்து (அனஸ்தீசியா) தராமலேயே சிசேரியன் செய்தனர் டாக்டர்கள்.

இதுகுறித்து டாக்டர்கள் கூறுகையில், நடந்தது எதுவும் இந்த நிமிடம் வரை எங்களுக்குப் புரியவில்லை என்றனர். இந்த தம்பதியினர் தங்களது 3 குழந்தைகளுடன் கிறிஸ்துமசை தாமதமாக நேற்று முன்தினம் கொண்டாடி மகிழ்ந்தனர். (ஓ-2-6)

# மனித வயிற்றுக்கு நிகரான ஓர் கருவி ஆய்வாளர்களால் கண்டுபிடிப்பு

மனித வயிற்றுக்கு நிகரான ஓர் கருவியை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்விச்சின் உணவு ஆய்வு நிறுவகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்களினால் இந்த புதிய கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த கருவி மனித வயிற்றினால் மேற்கொள்ளப்படும் சகல தொழிற்பாடுகளையும் துல்லியமாக மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனித சமிபாட்டுத் தொகுதியின் இயக்கம் தொடர்பில் ஆய்வுகளை நடத்தும் நோக்கில் இந்த புதிய கருவி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருவியை கண்டுபிடிப்பதற்கு சுமார் பத்து ஆண்டு காலம் தேவைப்பட்டதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மனித வயிறு உணவு சமிபாடு தவிர்ந்த ஏனைய பல தொழிற்பாடுகளை ஆற்றுவதாகவும், இதனால் குறித்த கருவியின் உருவாக்கம் மருத்துவ உலகில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தும் எனவும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

உணவு எவ்வாறு சமிபாடடைகின்றது என்பதனை கண்டறியும் நோக்கிலேயே முதலில் இந்தக் கருவி உருவாக்கத் திட்டமிடப்பட்டதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், மருந்துப் பொருட்கள் உட்கொள்ளப்பட்டதன் பின்னர் எவ்வாறான செயற்பாடு நடைபெறுகின்றது என்ற முக்கியமான ஆய்வினை இந்தக் கருவியினைக் கொண்டு கண்டறிய முடியும் என சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த ஆய்வு முடிவுகளின் மூலம் மருந்துப் பொருள் பாவனை மற்றும் மருந்துப் பொருட்களின் செயற்பாடு தொடர்பில் புதிய தகவல்களை வெளியிட முடியும் என குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கருவியை சந்தையில் விற்பனை செய்யக்கூடிய வகையில் தயாரிப்பதே தமது அடுத்த இலக்கு என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

# துன்புறுத்தும் எண்ணங்களை அழிக்கலாம்!



சில நினைவுகள் நம்மை வாட்டி வதைக்கும்.பொதுவாக சோகமான சம்பவங்கள், பயம் போன்றவை அடிக்கடி நினைவுக்கு வந்து துன்புறுத்தும்.

மகிழ்ச்சியான சம்பவங்களை நாம் மீண்டும் நினைப்பதைப் பற்றி கவலைப் படுவதில்லை. ஆனால் மனதை வேதனைப்படுத்தும் நினைவுகள் மீண்டும் வந்தால் கலங்கி விடுகிறோம். வாழ்க்கையே பெரும் தொந்தரவாகி விடுகிறது. அதையே நினைத்து மனநலம் பாதிக் கப்படுவோரும் இருக்கிறார்கள்.

இதுபோன்ற தொந்தரவு தரும் எண்ணங்களைப் பற்றி அச்சப்படத் தேவையில்லை. மூளையில் பதிவாகி இருக்கும்.

அந்த எண்ணப்பதிவைக் கண்டு பிடித்து அழித்துவிடும் விஞ் ஞான முறை கண்டுபிடிக்கப்பட்டது. விரைவில் இது சிசிச்சை முறையாகவும் வர இருக்கிறது. அமெரிக்காவின் நியூயோர்க் பல்கலைக் கழக ஆய்வுக்குழு கண்டு பிடி த்துள்ள இந்த முறைக்கு பெயர் "பிகேவியர் தெரபி" என்று பெயரிட்டுள்ளனர்.

நமது எண்ணங்கள் எல்லாம் மூளையில் உற்பத்தி ஆகின்றன. அங்கேயே பதிவு செய்யப்படுகின்றன. இதில் நம்மை துன்புறுத்தும் பய உணர்வுகளும் பதிவாகி இருக்கும்.அது தொடர்பான சம்பவங்கள், சூழல்கள் மீண்டும் அமையும்போது நமக்கு பயம் தொற்றிக்கொள்கிறது.

இதுவரை பயம்(போபியா) தொடர்பான சிகிச்சைக்கு, சம்பந்தப்பட்டவர்களிடமே காரணம் கேட்டு அதுபோன்ற சூழல் வராமல் தடுப்பதன் மூலமே பய உணர்வைக் கட்டுக்குள் கொண்டு வருவார்கள்.

ஆனால் மீண்டும் பயத்தை ஏற்படுத்தும் சூழல் அமைந்துவிட்டால் நிச்சயம் பயம் மீண்டும் தோன்றிவிடும்.

ஆனால் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய முறையில் பயத்துக்கு உள்ளானவர்களின் மூளைப்பதிவுகள் ஸ்கேன் செய்து பார்க்கப்படும்.அப்போது வண்ணவண்ண கட்டங்கள் பதிவுகள் காட்டப்படும். அதில் நீல நிற கட்டமாக பதிவாகும் நினைவுகள் பய உணர்வைக் குறிக்கும்.

பயத்தை உருவாக்கும் சில சம்பவங்களை ஏற்படுத்தி அதற்கேற்ப பதிவுகள் வேறுபடுத்திக் காட்டும் படியாக இந்த முறை உருவாக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் அந்த பய உணர்வுகளை அழித்துவிட்டு சோதித்துப் பார்க்கப் பட்டது. இதில் வெற்றிகிடைத்துள்ளது. அதாவது தேவையற்ற எண்ணங்களை அழிக்க முடியும் என்று தெரியவந்துள்ளது.

முதலில் எலிகளுக்கும், பின்னர் 3 குழுவினருக்கும் சோதித்துப் பார்க்கப்பட்டது. ஒவ்வொரு குழுவினருக்கும் வேறு வேறு விதமான சிகிச்சை அளிக்கப்பட்டது. பிகேவியர் தெரபி முறையில் சிகிச்சை பெற்றவர்களுக்கு பயமூட்டிய சம்பவங்கள் மீண்டும் அச்சுறுத்தவில்லை.

"போபியா" வைப் போக்கும் சிகிச்சை முறையில் இந்த கண்டுபிடிப்பு மறுமலர்ச்சியை உருவாக்கும் என்று விஞ் ஞானிகள் நம்புகிறார்கள்.





ஆர்.யூ.பாலமுருகன்

# பசுமை இல்ல வாயுக்களை உறிஞ்சி பெற்றோல் தயாரிக்கும் 'பக்டீரியா'

எரிபொருள் ஒருபுறம் தீர்ந்து வருகி றது. மறுபுறம் மாசு பெருகி வருகிறது. எரிபொருளின் தேவையையும் பூர்த்தி செய்து மாசையும் கட்டுப்படுத்துகிறது ஒரு பக்டீரியா. அதிசயமாக இருக்கிறதா!

காற்றில் கார்பன் - டை ஒக்சைட் அளவு அதிகரிப்பால் மாசு பெருகியுள்ளது. இந்த கார்பன் -டை ஒக்சைடை உறிஞ்சி பெற்றோலாக வெளியிடுகிறது இந்த பக்டீரியா. இதனால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்த மகிழ்ச்சியில் இருக்கிறார்கள் கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள்.

சையனோ பக்டீரியம் என்றுபக்டீரிய நுண்ணுயிரியல் விஞ்ஞானிகள் செயற்கையாக சில மாற்றங்களை ஏற்படுத்தினர். இதற்காக பக்டீரியாவில் ருபிஸ்கோ என்னும் நொதி சேர்க்கப்பட்டது. அதன் பின்னர் இந்த பக்டீரியாக்கள் கார்பன்-டை-ஆக்சைடை சுவாசித்து இசோப் புட்டால்



டிகைட் என்ற வாயுவாக வெளியிடுகிறது. இதை எளிமையாக மாற்றி இசோப் புட்டனால் என்ற எரிபொருள் தயாரிக்கப்படுகிறது. இது பெட்ரோலுக்கு சிறந்த மாற்று எரிபொருளாகும்.

இதுவரை தாவரங்கள் மற்றும் பூஞ்சைகளில் இருந்து மாற்று எரிபொருள் தயாரிக்கப்படுகிறது. இதில் பல்வேறு இதை எளிமையாக மாற்றி" இசோப்புட்டனால் என்ற எரிபொருள் தயாரிக்கப் படுகிறது. இது பெற்றோலுக்கு சிறந்த மாற்று எரிபொருளாகும். இதுவரை தாவரங்கள் மற்றும் பூஞ்சைகளில் இருந்து மாற்று எரிபொருள் தயாரிக்கப்படு கிறது. இதில் பல்வேறு மாற்றங்களைத் தாண்டி எரிபொருள் கிடைக்கும்.

ஆனால் இந்த பக்டீரியா முறையில் எளிமையாக குறைந்த செலவில் சிறந்த எரிபொருளை உற்பத்தி செய்ய முடிகிறது.இதன்மேலும் ஒரு சிறப்பம்சமாக, இந்த பக்டீரியாக்கள் சூரிய ஒளியை கிரகித்தும் எரிபொருளை உற்பத்தி செய்துவிடும்.அதாவது சூரிய ஒளியில் இருந்து கார்பன்-டை ஒக்சைடை பிரித்து பின்னர் அதை இசோப்புட்டால் டிகைடாக மாற்றும்.

எனவே இந்த பக்டீரியாக்களைக் கொண்டு இரட்டை வழியில் நிறைய பெற்றோல் தயாரிக்க முடியும். இதனால் கூடுதலான பக்டீரியாக்களை உற்பத்தி செய்வதில் விஞ் ஞானிகள் முனைப்புக்காட்டி வருகிறார்கள்.

மிகவும் வித்தியாசமான இந்தமுறை, மாசுக்களையும் கட்டுப்படுத்த உதவும் என்பதால் விரைவில் உலகம் முழுமைக்கும் பரவி விடும் என்று எதிர்பார்க்கலாம்!

# கை அசைவில் இயங்கும் டிவி.



மனிதனுக்கு அறிவு அதிகம். அதே போல சோம்பலும், எல்லா வேலையும் இருந்த இடத்திலேயேநடக்க வேண்டும் என்று பலர் விரும்புவார்கள்.

இன்னும் சிலர் கை அசத்தாலே காரியம் நடக்க வேண்டும் என்றும் ஆசைப்படுவார்கள்.

அதேபோல எண்ணம் உடையவர்களின் ஆசையை நிறைவேற்ற புதிய டி.வி. வருகிறது.

ஆமாம், இனிமேல் டி.வியை இயக்க ரிமோட்டை தேட வேண்டாம் இருந்த இடத்தில் இருந்து கையை அசைத்தால் போதும் டி.வி. இயங்க ஆரம்பித்துவிடும்.

அமெரிக்காவின் டெக்சாஸ் இன்ஸ்ட்ருமெண்ட் நிறுவனம் மற்றும் பிரான்ஸ் நாட்டின் ஆரஞ்சு வேல்லி நிறுவனம் ஆகியவை இணைந்து இதற்கான டி.வி. வடிவமைப்பில் ஈடுபட்டுள்ளன. இந்த டி.வி.யில் ஒரு 3டி கேமராவும், சென்சாரும் இணைக் கப் பட்டிருக்கும்.

டி.விக்கான சுவிட்சை ஆன் செய்தால் போதும், மற்றபடி எல்லாவேலைகளையும் ரிமோட் இல்லாமல் கை அசைவிலேயே செய்யலாம். கேமராவும், சென்சாரும் உங்கள் அசைவுகளுக்கு ஏற்ற டி.வியை இயக்கும். விரல்களை அசைப்பதற்கு ஏற்ப சானல் மாற்றவோ, சத்தத்தை (வால்யூம்) கூட்டவோ குறைக்கவோ முடியும்.

அதேபோல வீடியோ கேம்ஸ் விளையாட நினைத்தாலும் உடல் அசைவு மூலமே விளையாடலாம். 3டி சமிக்ஞை முறையில் இயங்கும் இந்த டி.வி. தயாரிப்புப் பணிகள் தொடங்கி விட்டன. அடுத்த கிறிஸ்துமஸ் பண்டிகையை இந்த டி.வி.யுடன் கொண்டாடலாம் என்று இதைத் தயாரிக்கும் நிறுவனங் கள் தெரிவித் துள்ளன.

# நிலவில் மிகவும் குளிர்ச்சியான பகுதி



இரவில் குளிர்ச்சி தருவது நிலவு. ஆனால் சூரிய குடும்பத்திலேயே வெதுவெதுப்பான கிரகம் சந்திரன் தான். இருந்தாலும் நிலவின் குளிர்ச்சியான பகுதி தற்போது கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

நாசா விண்வெளி மையத்தின் எல்.ஆர்.ஓ. என்ற நிலவை ஆராயும் விண்கலம் இதைக் கண்டுபிடித்தது.

நிலவின் தென்மேற்குப் பகுதி தான் மிகவும் குளிர்ச்சியாக உள்ளது. இரவில் மைனஸ் 294 டிகிரி செல்சியஸ் குளிருக்குச் செல்கிறது.

நிலவு 1.54 டிகிரி சாய்வாக இருந்து பூமியைச் சுற்றி வருகிறது. இதனால் பெரும்பாலான பகுதிகளில் வெப்ப மாற்றம் அதிகமாக வித்தியாசப்படுவதில்லை. நில நடுக் கோட்டுப் பகுதியில் மட்டும் சற்று அதிகமான வெப்பமும் அதிகமான குளிரும் நிலவுகிறது.

நில நடுக்கோட்டுப் பகுதியில் பகலில் 127 டிகிரி செல்சியஸ் வெப்பமும் அதே பகுதியில் இரவு மிக அதிகமான குளிரும் ஏற்படுகிறது.


சூரியன் 6 மாத காலம் பூமியின் தென் அரைக் கோளத்திலும் மற்ற 6 மாதம் வட அரைக் கோள பாதையிலும் சுற்றி வரும். கடந்த ஒக்டோபரில் தென் அரைக் கோளத்தில் பயணித்த போது வெப்ப அளவீடுகள் கணிக் கப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. நில நடுக் கோட்டின் தென்பகுதியில் மைனஸ் 238 செல்சியஸ் வரையும் தென்மேற்குப் பகுதி யில் மைனஸ் 294 செல்சியஸ்வரையும் நிலவுகிறது.

ஆனால் வடபகுதியில் அதீக அளவில் வேறுபாடுகள்இல்லை.

கிரகங்கள் நீள் வட்டப்பாதையில் சுற்றி வருவது இந்த மாறுபாட்டிற்குக் காரணமாகும். நிலவும் குளிர்ச்சியான தென்மேற்குப் பகுதிக்கு "ஹெர்மைட்" என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகிறார்கள்.

# தமிழ் பல ஆண்டுகளுக்கு முன்னரே உலக அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது

## கவிக்கோ அப்துல் ரஹ்மான்



சென்னை புத்தகக் காட்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற உரை அரங்கத்தில் கவிக்கோ அப்துல் ரஹ்மான் ''செம்மொழி சிந்தனைகள்'' என்ற தலைப்பில் பேசினார்.

செம்மொழி என்றால் என்ன என்று பெரும்பாலானவர்களுக்கு தெரியாத சூழல் உள்ளது. ஒரு மொழி தனக்குரிய அனைத்து சிறப்புகளையும் பெற்று அதே சமயத்தில் குறை எதுவும் இல்லாமல் அதில் செம்மைத் தன்மை நிறைந்திருப்பின் அந்த மொழி செம்மொழி என அங்கீகரிக்கப்படுகிறது.


தமிழ் நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து வருவதால் உலகின் 8 ஆவது அதிசயமாக தமிழ் மொழி பார்க்கப்படுகிறது.

கணியன் பூங்குன்றனாரின் ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்ற வரியின் மூலம் தமிழ் பல ஆண்டுகளுக்கு முன்னரே உலக அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது. உலக அங்கீகாரம் கிடைத்த பிறகே அதற்கு இந்திய அரசின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

பல்வேறு கால கட்டங்களில் அந்நிய படையெடுப்புக்களால் ஏற்பட்ட பாதிப்புகளையும் சமாளித்து தாங்கி நிற்கிறது தமிழ். கலை இலக்கியத் தனித்தன்மை, மொழி கோட்பாடு, தொன்மை உள்ளிட்ட பல்வேறு சிறப்புகளுடன் மனித உணர்வுகளை வெளிப்படுத்துவதில் வேறு எந்த மொழியிலும் இல்லாத கலைச் சொற்கள் இருப்பது தமிழில் மட்டும் தான்.

சங்க இலக்கியம் முதல் இன்று வரை தமிழில்வந்துள்ள இலக்கியங்கள் மூலம் தமிழின் சிறப்புகளை அறிவதோடு தமிழ் உயர் தனிச்செம் மொழி என்பதை மக்கள் பெருமிதத்துடன் உணரவேண்டும். இதுவே இப்போதைய தேவை என்றார் அப்துல் ரஹ்மான். (2-6)

# ரஜினியின் யோசனைப்படி ராகவேந்திரா கோயில்



நடிகரும், டான்ஸ் மாஸ்டருமான ராகவா லாரன்ஸ் திருமுல்லை வாயல் சரஸ்வதி நகரில் ஸ்ரீ ராகவேந்திரா கோவில் கட்டியுள்ளார். நேற்று முன்தினம் காலை கோவிலை அவர் திறந்து வைத்தார். அப்போது சிறப்பு பூஜைகள் நடந்தது. ஏராளமான பக்தர்கள் திரண்டுவந்து சாமியை வழிபட்டனர். 1/2 கிரவுண்டில் இந்தக் கோவில் கட்டப்பட்டுள்ளது.

இதுபற்றி லோரன்ஸ் கூறியதாவது, ராகவேந்திரர் 5 அடி உயர மாபிள் சிலையால் கட்டப்பட்டுள்ளது. இந்த சிலை ரஜனி யோசனைப் படி தீர்மானிக்கப்பட்டது. எல்லாக் கோவில்களிலும் ராகவேந்திரருக்கு தொந்தி இருக்கும்.

ரஜினியோ ராகவேந்திரர் யோகி. அவருக்கு தொந்தி இருக்காது என்று கூறியதுடன் ஒரு போட்டோவையும் கொடுத்தார். அதன்படியே சிலை தீர்மானிக்கப்பட்டது.

ராகவேந்திரர் சிலையை தொடக் கூடாது என்று சில கோவில்களில் கட்டுப்பாடுகள் உள்ளன. ஆனால் இங்கு சிலையை தொட்டு வணங்கலாம். இன்று முதல் மண்டபப்பூஜை தொடங்கி 48 நாட்கள் நடைபெறும். அப்போது ரஜினி உள்ளிட்ட நடிகர், நடிகைகள் பங்கேற்கிறார்கள். இவ்வாறு அவர் கூறினார். (ஓ-2-6)

# ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எழுத்தாளன் என்பதில் பெருமையடைகின்றேன்

## முதல்வர் கருணாநிதி

எழுத்துக்கு விருது வழங்கினால் முதல்வர் பதவியை விட 30 ஆயிரம் மடங்கு மகிழ்ச்சி அடைவேன். எனக்கு அரசுக் கடலில் வீற்றிருக்க ஆசையில்லை என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார். 33 ஆவது சென்னை புத்தகக் காட்சியை கடந்த புதன் கிழமை தொடக்கி வைத்த கலைஞர் பொற்கிழி விருதுகளையும் வழங்கினார். அவர் அங்கு உரையாற்றுகையில்,


நான் ஒரு எழுத்தாளன். கடந்த 60 ஆண்டுகளாக எழுதிக் கொண்டிருப்பவன். நாளைக்கும் எழுதப் போகிறவன். எழுத்தாளன் என்பதை ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பெருமையாகக் கருதுபவன். எனக்கு அலுத்துப் போய்விட்டது. செம்மொழி மாநாடு முடிந்த பிறகு வேறொரு திக்கில் மக்களோடு நின்று எனது பயணத்தைத் தொடர்வேன். அரசில் அல்ல அரசாங்கத்தில் அல்ல.

இங்கே என் முன் அமர்ந்திருக்கக் கூடிய கவிஞர் வைரமுத்து, எழுத்தாளர் ஜெயகாந்தன் ஆகியோரின் அருகில் சென்று உட்காரவே எனக்கு ஆசை. அரசுக் கட்டிலில் வீற்றிருக்க வேண்டும் என்ற ஆசை அல்ல. நான் (கருணாநிதி) அளித்த ரூ. ஒரு கோடியில் கலைஞர் மு.கருணாநிதி பொற்கிழி என்ற பெயரில் ஆண்டுதோறும் எழுத்தாளர்கள் படைப்பாளிகளுக்கு விருது வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படுவது, வழங்கியது தவறல்ல. ஆனால் விருதினைப் பெற்றவர்கள் எப்படி தவறு இழைக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் ஒரு நூலைத் தருவது வழக்கம். அதன்படி ஒரு சந்திப்பின் போது சென்னை வரலாறு என்ற நூலைத் தந்தார். அதில் 1969 இல் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த எனது பெயரையும் அதற்கு முன் முதல்வர் பொறுப்பு வகித்த அண்ணாவின் பெயரையும் குறிப்பிடவில்லை. ஆனால் 1977 இல் முதல்வராக எம்.ஜி. ஆர். இருந்தார் என்பதற்கான குறிப்பு உள்ளது. ''மதராஸ்'' என்பதை சென்னை என பெயர் மாற்றம் செய்து உத்தரவு பிறப்பித்தேன். அந்தச் செய்தியும் அந்தப் புத்தகத்தில் இல்லை.

சட்டப் படிப்புக்கென தனியாக பல்கலைக் கழகம் 1997 இல் தொடங்கப்பட்டது. இது யாரால் தொடங்கப்பட்டது எனக் குறிப்பிடப்படவில்லை. 1997 இல் தி.மு.க. ஆட்சியில் கோயம்பேடு சந்தை திறக்கப்பட்டது. சென்னை வரலாறு புத்தகத்தில் முக்கியமானதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதைத் திறந்து வை த்தது யார் எனக் குறிப்பிடவில்லை. அப்படி என்ன நான் தவறு இழைத்து விட்டேன் ? தமிழனாக பிறபடுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தவன் என்பதை விட வேறு என்ன தாழ்வு எனக்கு?

அந்த நூலுக்கு கடந்த ஆண்டோ அல்லது அதற்கு முன்னைய ஆண்டோ புத்தகக் காட்சியில் விருது வழங்க பட்டிருகிறது.



கலைஞர் மு. கருணா நிதி பொற்கிழி யை 3 அல்லது 4 பேர் குழுவாக வழங்குகின்றனர். அப் படி வழங்கும் போது புத்த கம் விருது க்கு உரியதுதானா என்பதையும் அதை எழுதிய ஆசிரியரையும் எண்ணிப் பார்க்க வேண்டும். தென்னிந்திய புத்தக விற்பனை யாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தினரை மிரளவைக்கவோ சோகத்தில் ஆழ்த்தவோ இதைச் சொல்லவில்லை. புத்தகங்களுக்கு விருதுகளை வழங்கும் போது உன்னிப்பாக கவனமாக நடந்து கொள்ள வேண்டும் என்றார் முதல் வர் கருணாநிதி. (2-6)

# 2020 இல் சக்தி மிக்க நாடாக இந்தியா

(புதுடில்லி)

இன்னும் 10 ஆண்டுகாலத்தில் இந்தியா உலக அளவில் மாபெரும் சக்தி நிறைந்த நாடாக திகழும் என சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள பொருளாதார நிபுணர் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியா பட்டினிச் சாவு இல்லாத ஆற்றல் மிக்க நாடாகத் திகழும் என்றும் உலக அளவில் பெரும் பொருளாதார வளர்ச்சி பெற்ற சீனாவை மிஞ்சும் வகையில் இதன் வளர்ச்சி இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

சீனாவில் வேலை ஆட்கள் குறைந்து விடுவர். இதன் காரணமாக சீனாவில் பணப் பெறுமதி காரணமாக சீனாவின் பணப் பெறுமதி குறையும், தொடர்ந்து சீனா பலவீனம் பெறும்.

இதேநேரத்தில் இந்தியாவில் வேலைக்குக் கிடைக்கும் ஆள் பலம் அதிகரிக்கிறது. தொடர்ந்து இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியும் நன்றாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# பனிப்பொழிவினால் கடும் பாதிப்பு

இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில் கடும் பனிப்பொழிவு காரணமாக இரண்டு ரயில்கள் மோதிக் கொண்டன. இதில் 15பேர் கொல்லப்பட்டனர். 50இற்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். பல மாநிலங்களில் மின்சாரம் தடைப்பட்டது. இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப் பட்டது. அத்துடன் டெல்லி, கொல் கத்தா, புவனேஸ்வரர், கஞ்சா, ஜம் முகாஷ்மீர் உள்ளிட்ட பல மாநிலத்திற்கு செல்லவேண்டிய விமானங்கள் பயணம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மார்கழிமாதம் பனிப்பொழிவுக்கு குறைவு இருக்காது தான்.. ஆனால் இந்த முறை வடமாநிலங்களில் பனிப்பொழிவு அனைவரையும் வாட்டி வதைக்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ஓ-2-6)


தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்
வாழும் கலைப் பயிற்சி-பாகம் I
(சுதர்சன கிரியா எனும் சிறப்பு மூச்சுப்பயிற்சி உள்ளடக்கியது)
இலவச அறிமுக உரை



இடம் :- கம்பன் கோட்டம், நல்லூர்.
காலம் :-04.01.2010 திங்கள், மாலை 5 மணி
பயிற்சி நாட்கள்: - 05.01.2010 முதல் 09.01.2010 வரை காலை 6.30 -8.30 அல்லது மாலை 5.00-7.00
மேலும் விபரங்களுக்கு:-
சர்வதேச வாழும் கலை அற நிறுவனம்
தொ.பே- 0771000750, 0771777998
(189)

Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower
18 வருட அனுபவம்
- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Dec 2009 to May 2010
~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா
கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.
மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 10.01.2010
(181)

## சினி தகவல்கள்



♦ கடந்த 10 ஆண்டுகளில் அதிக இலாபம் ஈட்டிக் கொடுத்த நடிகை என கின்னஸில் இடம் பிடித்திருக்கிறார் ஹாரி பாட்டர் புகழ் எம்மா வோட்சன் இவருடைய வயது 19 தான்.



♦ தனது அதிரடி ஆட்டத்தால் இந்தியாவை மிரட்டும் இலங்கை கிரிக்கெட்டர் டில்ஷானுக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சிங்கள நடிகையான தனது மனைவியை அவர் மணந்து கொண்டது டெல்லியில் தான் ஏழெட்டு சிங்களப் படங்களுக்கு திரைக்கதை எழுதியிருக்கும் டில்ஷான் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் பாலிவூட் படம் டைரக்ட் செய்யும் திட்டத்தில் இருக்கிறார்.

## 6.2 அடி உயர வில்லன்!



சத்யராஜ், நெப்போலியன், ரகுவரன் ஆகியோரைத் தொடர்ந்து தமிழ் படவுலகின் உயரமான வில்லர் நடிகர்கள் பட்டியலில் புதிதாக சேர்ந்திருப்பவர், சஞ்ஜித்.6.2 அடி உயர முள்ள சஞ்ஜித் வியாபாரி, பத்துப் பத்து, பரட்டை என்கிற அழகு சுந்தரம் ஆகிய படங்களில் வில்லனாக வந்தார்.சமீபத்தில் திரைக்கு வந்த 'வேட்டைக்காரன்' படத்திலும் 5 வில்லன்களில் ஒருவராக கலக்கி இருக்கிறார்.

இப்போது மணிரத்னம் இயக்கி வரும் 'இராவணா', விஜய் நடித்து வரும் 'சுறா' ஆகிய படங்களில் வில்லனாக நடித்து வருகிறார்..

''வில்லனாக த்தான் நடிப்பேன் என்று நான் ஒன்றும் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்ளவில்லை. எந்த கதாபாத்திரமாக இருந்தாலும் மக்கள் மத்தியில் அடையாளம் தெரிய வேண்டும்.அப்படிப்பட்ட கதாபாத்திரங்களில் நடிப்பதையே விரும்புகிறேன்'' என்று சொல்கிறார் சஞ்ஜித்.

## ஜீவா-ஸ்ரேயா ஜோடியின் ரவுத்திரம்



சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிப்பில் உருவாக விருக்கும் புதிய படம் ரவுத்திரம். இந்த படத்தின் நாயகனாக நடிகர் ஜீவா நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக ஸ்ரேயா ஒப்பந்தமாகியிருக் கிறார்.

படத்தை இயக்குபவர் டைரக் டர் கோகுல். இவர் பிரபல தெ லு ங்கு பட இயக்குநர் சூர்ய கிரணிடம் இயக்குநர் பயிற்சி பெற்ற அனுபவத்துடன் ரவுத்திரம் சினிமாவை இயக்க வந்திருக்கிறார். ஜனவரி இறுதியில் சூட் டிங் தொடங்குகிறது.

## மாநகரை குலுக்கும் தம்பி அர்ஜுனா



உலகின் தாய் பெண் தான். தாய் நாடு, தாய்மொழி, தாய்மண் என நமது வாழ்வே பெண்களைச் சுற்றியே உள்ளது. ஆனாலும் மாபெரும் சாம்ராஜ்யங்கள் ஒரு பெண்ணின் கண் அசைவில் வீழ்ந்திருக்கின்றன. மாபெரும் காவியங்கள் பெண்களை போற்றியே புனையப்பட்டிருக்கின்றன.

அதே மாதிரி எனது தம்பி அர்ஜுனா படமும் ஒரு பெண்ணைச் சுற்றி நிகழும் கதைதான்.ஒரு பெண்ணின் மீது ஒருவன் கொண்ட காதல் ஒரு மாநகரையே குலுக்குவதுதான் இதன் மையக்கரு... என்கிறார் தம்பி அர்ஜுனா பட இயக்குனர் விஜய் ஆர்.ஆனந்த்.

ஏஞ்சல் பிலிம் இன்டர்நஷனல் ஜி.எம்.பாலாஜி தயாரிப்பில் ரமணா, சுமன், பெரோஸ்கான் ஆகியோர் நடிக்கும் இப் படத்தில் மாநகரை குலுக்கும் காதலியாக நடிகை ஆஷிமா நடித்திருக்கிறார்.

## எதுவும் நடக்கும்




ஒரு பணக்காரரின் பங்களாவுக்கு காப்பாளராக இருக்கிறார் கார்த்திக்குமார். செல்வந்தர் வெளியூர் சென்றிருக்கும் நேரத்தில் அவரது பேத்தி அபர்ணா நாயர் அமெரிக்காவிலிருந்து வருகிறார். வந்தவர் கார்த்திக் குமாரின் அப்பாவித்தனத்தால் கவரப்பட்டு நட்பாகிறார்.

கணவன் , மனைவியாக நடிக்கத் தொடங்குகிறார்கள். ஒரு கட்டத்தில் கார்த்திக்குமாருக்குள் அடங்கிக் கிடந்த நடிப்பு வெறி சைக்கோ தனமாக மாறுகிறது. அபர்ணாவை உண்மையான மனைவியாக பாவிக்கத் தொடங்குகிறார். அவர் அவமானப்படுத்தியதை சுட்டிக் காட்டி அடித்து துன்புறுத்துகிறார்.

விபரீதத்தை உணரும் அபர்ணா அவரிடமிருந்து தப்பி ஓடுகிறார். அப்போதுதான் கார்த்திக் ஏற்கனவே தன் மனைவியை கொலை செய்து அந்த வீட்டுக்குள் ஒளித்து வைத்திருப்பது தெரியவருகிறது. அவர் துரத்த இவர் ஓட.. பரபரக்கிறது படம். முடிவு என்ன என்பது சஸ்பென்ஸ். ஒரு வீடு நாலைந்து கேரக்டர்களை வைத்துக்கொண்டு வித்தியாசமான திகில் படத்தை தந்திருக்கும் இயக்குநர்கள் ரொஸாரியோ& மகேஸ்வரன் முயற்சியைப் பாராட்டலாம்.

பெர்னார்ட்டின் ஒளிப்பதிவும் ராஜின் இசையும் பயமுறுத்துகிறது. கார்த்திக்குமார் அப்பாவியாக இருந்து சைக்கோவாகும் மாற்றத்தை மிகையில்லாமல் செய்திருக்கிறார். அபர்ணா நாயர் தானும் பயந்து மற்றவர்களையும் பயமுறுத்துகிறார்.




இருவர் முகத்தை மட்டுமே திரும்ப திரும்ப பார்ப்பதால் வரும் சலிப்பு அந்த வீடு எங்கே இருக்கிறது என்கிற குழப்பம் அடுத்த காட்சியை யூகித்து விடுகிற திரைக்கதை ஆகியவை குறைகள். இவற்றை தவிர்த்து இருந்தால் நல்ல திகில் படம் பார்த்த திருப்தி கிடைத்திருக்கும்.

வெளியூர் சென்ற தாத்தா வரும்வரை இருவரும் தனிமையில் இருக்கவேண்டிய கட்டாயம். அப்போது அபர்ணா , கார்த்திக் குமார் பற்றி விசாரிக்கிறார். கார்த்திக் குமாருக்கு பெரிய நடிகராக வேண்டுமென்ற ஆசை. ஆனால் அவரை பலரும் புறக் கணிக்கிறார்கள். மனைவியே மரியாதையில்லாமல் நடத்துகிறார் என்பது தெரியவருகிறது.

அவரது நடிப்புத்திறமையை பரிசோதிக்க இருவரும் கணவன் மனைவியாக நடித்துப் பார்க்கலாம் என்கிறார்.




## களம் இறங்கினார் தேவயானியின் இன்னொரு தம்பி !



நடிகை தேவயானியின் இன்னொரு தம்பியான மயூரும் சினிமாவில் களம் இறங்கிவிட்டார். தேவயானியின் தம்பி நகுல் போய்ஸ் படத்தில் குண்டுப் பையனாக வந்து கலகலப்பூட்டினார்.அதன் பின்னர் இப்போது சிலிம்மாகி சிறந்த நடிப்பை வெளிப்படுத்தி வெற்றி நாய கனாக வலம் வந்து கொண்டிருக்கிறார்.

இப்போது தேவயானியின் இன்னொரு தம்பி மயூர் பலே என்ற பெயரில் உருவாகும் புதிய படத்தில் நாயகனாக அறிமுகமாகிறார். நகுல் போலவே துறுதுறுவென இருக்கும் மயூர் குடும்பத்தில் உள்ள எல்லோருக்குமே செல்லப் பையனாம். பலே படத்தை தயாரித்து இயக்குபவர் பாபுராஜா.

## ப்ரியாமணியின் புதிய காதலன்




பிருத்விராஜ்,பாலா நாயகர்களாக நடிக்கும் படம் புதிய முகம். நாயகியாக ப்ரியாமணி நடிக்கிறார்.

முக்கிய வேடத்தில் மீராநந்தன், நெடுமுடி வேணு, பக்ரு நடிக்கிறார்கள்.

பாலாவுக்கு,ப்ரியாமணிக்கும் நிச்சயிக் கப்படுகிறது.இந்த நிலையில் ப்ரியாமணி யுடன் கல்லூரியில் படிக்கும் பிருத்விராஜ் நட்புடன் பழகுகிறார். இதனை விரும்பாத பாலா, பிருத்விராஜை கண்டிக்கிறார். பாலாவின் இந்தப்போக்கை விரும்பாத ப்ரியாமணி பாலாவை வெறுத்து பிருத்விராஜை காதலிக் கிறார்.முடிவில் ப்ரியாமணி யாரை மணம்முடிக்கிறார் என்பதை பரபரப்பான சம்பவங்களால்காட்சிப் படுத்துகிறார் இயக்குனர் தீபன்.

## விஜய்யை எதிர்த்த டப்பிங் வில்லன்





"பொம்மாயி விடமாட்டேன்" என்று திரைக்குப் பின்னால் மட்டும் குரல் கொடுத்து வந்த பி.ரவிஷங்கர் முதன் முறையாக நடித்திருக்கும் படம் " வேட்டைக் காரன்"

"நான் நடிகனாகியது தற்செயலான விடயம். பிரசாத் ஸ்டுடியோ பக்கம் என்னைப் பார்த்து இருக்கிறார் இயக்குநர் பாபுசிவன்.

ஒருநாள் போனில் கூப்பிட்டார்கள். என்னுடைய அண்ணன் சாய்குமாருக்கு தான் அழைப்பு வந்திருக்கும் எனக்கு இருக்காது என்று நினைத்தேன்.

உங்களைத் தான் இயக்குர் அழைக்கச் சொன்னார் என்று கூறினார்கள். பாபுசிவன் முன்னின்றதும்" வேட்டைக்காரன்" படத்தில் நீங்கள் தான் விஜய்க்கு வில்லன் என்றார். கரும்புதின்ன கூலியான என்று அந்தத் தருணமே கமிட்டாகிவிட்டேன். நீண்ட ஜிப்பா , நீண்ட தாடி , நீண்ட முடி என்ற என்னுடைய கெட் - அப்பும் நீளமாக இருக்கும். பாத்திரமும் நீளமாக இருக்கும்.

என்னுடைய பாத்திரத்தில் பெயர் செல்லா. தோல்வியை ஏற்காத குணம் செல்லாவுக்கு யாராவது எதிர்த்தால் பிடிக்காது. ரொம்பவும் கோபக்காரன். பந்தா இல்லாமல் விஜய் பழகினார்.


ஒரு "கிக்" ஷொட்டால் அவர் என்னை உதைப்பார். அந்தக் காட்சியில் ரொம்பவும் இன்வால்வான விஜய் எனக்கும் பெயர் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் என்னையும் நடிக்க வைத்தார்.இந்தப் படத்தில் எனக்கு பஞ்ச் டயலாக் கிடையாது. ஆனால் என்னுடைய இமேஜ் , பாடி லேங் வேஜைப் பற்றி ஆடியன்ஸ் பேசுவார்கள்.

சன் பிக்சர்ஸ் நிறுவனம் நான் பேசும் 'வாடா' என்ற காட்சியை காட்டி என்னை முதல் படத்திலேயே மிகப் பெரிய வில்லன் நடிகராக அடையாளப் படுத்தியிருக்கிறது.நூறு படங்களில் நடித்தால் கிடைக்கக் கூடிய புகழை சன் பிக்சர்ஸ் முதல் படத்திலேயே அளித்திருக்கிறது."

# மஹிந்த வென்றால் பொன்சேகாவுக்கு ஆபத்து

# பொன்சேகா வென்றால் மஹிந்த குடும்பத்திற்கு ஆபத்து

## தேர்தல் முடிவு அறிவிக்கும்போது முக்கிய 'தலைகள்' தலைமறைவாகிவிடும்



தேர்தல் களத்தில் நாடு சிக்குண்டுள்ளது. மக்களைத் தம் பக்கம் வளைத்துப் போட பிரதான வேட்பாளர்கள் இருவரும் பல உபாயங்களை வகுத்துக் கொண்டாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வியூகத்தை உடைப்பதில் எதிர்க் கட்சிகள் திணறவே செய்கின்றன.

தேர்தல் என்று வந்துவிட்டால், பொய்யுரைகளும் திருகுதாளங்களும் மேடையேறுவது சகஜம்.

ஆனாலும் இலங்கையின் ஜனநாயகத்தில் இருக்கக்கூடிய பெரும் குறைபாடு, ஆளுந்தரப்பு தேர்தல் காலத்தில் அரச சொத்துடைமைகளைப் பயன்படுத்துவதாகும்.

அரச ஊடகங்கள் எதிர்க்கட்சிகளை மறந்துபோவதும் இந்த நாட்டின் பல வீனமான ஜனநாயகத்தின் அடிப்படைக்குக் காரணமாகும்.



தேர்தல் ஆணையாளருக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களின் குறைந்த வலு அல்லது தேர்தல் ஆணையாளர் தனக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை பிரயோகிக்கமுடியாத நிலை தொடர்வதால் ஒவ்வொரு தேர்தலின்போதும் ஆளுந்தரப்பு , அரச உடமைகளை, ஊடகங்களை தனது தேர்தல் பிரசாரத்திற்குத் துணையாக்கிக் கொள்ளும் துரதிர்ஷ்டம் நீடிக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை இருக்கும்வரை இத்தகைய ஜனநாயக விரோதப்போக்குகளை நிறுத்தமுடியாது.

இதன் காரணமாகவே இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஆரம்பித்த காலந் தொடக்கம், அதனை இல்லாதொழிக்க வேண்டுமென்ற கருத்தும் வலுத்து வருகின்றது.

எனினும் யாராலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கமுடியவில்லை.

### காரணம் உண்டு

நாட்டிற்கும் ஜனநாயகத்திற்கும் பொருந்தாத ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பதை ஜனாதிபதியாக இருப்பவர் ஒருபோதும் விரும்பமாட்டார்..

தனக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைத் தூக்கி எறிவதற்கு எவரும் தயாரில்லை என்ற நிலையில் ஜனாதிபதி ஆட்சி முறை உயிர்பிழைக்கின்றது.

எனினும், இரண்டாவது தடவையாக ஜனாதிபதிப் பதவியை வகித்து அதன் முடிவு காலத்தில் அந்தப் பதவியை இல்லாதொழிக்க முற்படுகின்றபோதிலும், அடுத்த ஜனாதிபதி யார் என்ற ஊகங்கள் ஓரளவு தலைதூக்க ''ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு'' தோல்வியில் முடிந்துவிடுகின்றது.

சந்திரிகா குமாரதுங்க இந்த நாட்டின் ஜனாதிபதியாக இரு தடவைகள் பதவி வகித்தவர். இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக இருக்கமுடியாதென்ற நினைப்பு அவருக்கு வந்தபோது ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கமுற்பட்டார்.

அதற்காக ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவைக் கோரினார். அடுத்த ஜனாதிபதியாகும் சந்தர்ப்பம் தனக்குரியதென நினைத்த ரணில் விக்கிரமசிங்க ஒரு தடவையேனும் தான் ஜனாதிபதியாக இருந்த பின்னர் அந்தப் பதவியை இல்லாதொழிக்கலாம் என நினைத்தார். நினைத்தது நினைத்தபடி நடக்கவில்லை.

வடக்குக்கிழக்குத் தமிழ்மக்கள் அப்போது ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்க ரணிலுக்கான சந்தர்ப்பம் நழுவ, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானார். அப்போது தான் ரணில் நினைத்தார். சந்திரிகா குமாரதுங்க கேட்டபோதே 'அதற்கு ஆதரவு வழங்கியிருக்கலாமென்று. என்ன செய்வது நாம் ஒன்று நினைக்க தெய்வம் இன்னொன்று நினைக்க, எதிர்பாராத மாற்றங்கள் நடந்து முடிகின்றன.

இந்த மாற்றங்கள் ரணில் விக்கிரமசிங்கவிற்கு மட்டுமென நினைத்தால் அது தான் தவறு. மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அந்த மாற்றம் நடக்கலாம். அன்று வடக்குக்கிழக்கு தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரித்தனர். அதனால் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகினார். அவரின் பதவி இன்று தமிழ்மக்கள் மத்தியில் என்ன உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

ஆக, இன்று நாம் எடுக்கின்ற முடிபு நாளை தவறாக இருக்கலாம். இன்று தவறு என்று நினைப்பது இன்னொரு சந்தர்ப்பத்தில் சரியாகலாம்.எதுவாயினும் நாம் எடுக்கின்ற முடிவினால் ஏற்படப் போகும் விளைவு என்ன? என்பதைத் தீர விசாரித்தறிந்தே எடுக்கவேண்டும்.

### வெற்றி யார் பக்கம்

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி யாருக்கு என்ற கேள்வி ஒவ்வொருவர் உள்ளத்திலும் விடை தெரியா வினாவாக இருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் வெற்றி தமக்கானதென்கிறார்கள். சரத் பொன்சேகாவின் ஆட்கள் மஹிந்தவை வீட்டுக்கு அனுப்புவோம் என்கின்றனர். இதில் எது நடக்குமென்பதை நிறுதிட்டமாகக் கூறமுடியாத அளவில் தேர்தல் ஆதரவு ஜி.ஜி.பொன்னம்பலம் கேட்ட உரிமைபோல் உள்ளது. 2010 ஆம் ஆண்டு பிறந்துவிட்டது. இன்னமும் 23 தினங்கள் வாக்களிப்பிற்கான காத்திருப்பாக இருக்கும்.

வென்றவர் யார் தோற்றவர் யார் என்ற முடிவை இப்போது கூற முடியாதாயினும் தேர்தல் முடிபு அறிவிப்பு வெளியானதும் ஒரு விடயம் கட்டாயம் நடந்தேறும். அதாவது ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றால் ஜெனரல் சரத்பொன்சேகா நீதி விசாரணைக்கு உட்படுவார். நாட்டைக் காட்டிக் கொடுத்தவர் என்ற குற்றச்சாட்டு தீர் தோசைமா போல தயாராகவே இருக்கின்றது.

தேர்தல் முடிபு வருவதற்கு முன்னதாக கட்டுநாயக்கா விமானத்தளத்தில் காத்திருந்து விமானம் ஏறினாலன்றி தப்பும் வழி ஏதுமில்லை.

மாறாக ஜெனரல் சரத் பொன்சேகா வெற்றிபெற்றால் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அவரின் சகோதரர்களும் விசாரணைக்கு உட்படுவர். விசாரணை சாதாரணமாக இருக்காது. போர்க்குற்றங்கள், சொத்துக்குவிப்புகள், ஊழல்கள் என நீண்டதொரு பட்டியல் முன்வைக்கப்படும்.

இதிலிருந்து மஹிந்த குடும்பம் தப்புவதாக இருந்தால் அவர்களும் விமானம் ஏறுவதைத் தவிர வேறு வழியில்லை.

இப்போது தேர்தல் ஆதரவு யாருக்கு அதிகம் என்ற முடிபை இரு பிரதான வேட்பாளர்களும் தீர்மானிக்க முடியாத அளவிற்கு நிலைமை வந்துவிட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கே வெற்றி என்ற பூரண நம்பிக்கையை இழக்கும் நிலை மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டதை மறுக்க முடியாது.

அதேநேரம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கக்கூடிய ஆதரவை வெட்டி வீழ்த்திவிட்டோம் என்ற நினைப்பும் சரத் பொன்சேகாவிடம் இல்லை.

ஆக, இரு பிரதான வேட்பாளர்களும் முடிபு தெரியாதவர்களாக இருவரில்







ஒருவர் என்ற நிகழ்தகவுக்குட்பட்டுள்ளனர்.

இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படக் கூடிய வாய்ப்புகளை அடுத்து வரும் இருபத்துமூன்று நாட்கள் தீர்மானிக்கவுள்ளன. இதற்கான தேர்தல் பிரசாரங்கள், விஞ்ஞாபனங்கள் தயார் நிலையில் இருந்தாலும் அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு, வேலையற்ற பட்டதாரிகளுக்கு இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு, ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு ஆகிய மூன்று உத்தரவாதங்களும் எதிர்முனைத் தரப்பால் முறியடிக்கப்பட முடியாத தேர்தல் வியூகங்களாகவுள்ளன.

அதேநேரம் மஹிந்த ராஜபக்ஷ தரப்பில் அலரிமாளிகை விருந்துபசாரங்கள், சந்திப்புக்கள், போர் வெற்றி



முழக்கங்கள் என்ற வியூக அமைப்புகளும், கிராமப்புறங்களில் சோடை போகாமல் உள்ளனவென்பதையும் கூறித்தானாக வேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் மஹிந்த ராஜபக்ஷ வென்றால் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்குத் தண்டனை, ஜெனரல் சரத் பொன்சேகா வெற்றி பெற்றால் மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்திற்கு ஆபத்து என்ற யதார்த்தத்தில் தேர்தல் முடிபுகள் அறிவிக்கப்படும் போது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட இரு பிரதான வேட்பாளர்கள் உட்பட பல முக்கிய தலைவர்கள் இந்த நாட்டில் இருக்கமாட்டார்கள் என்பதை ஊகிக்க முடிகின்றது.

**விதுரன்**

# ஆலடி மாநாடு

## 'நேரடி ரயல்' காட்டினால் பெயிலாகிப் போகுமாம்



ஆலடி மாநாட்டிற்கு வந்த பண்டிதர் சுவடே பைல் கட்டு ஒன்றையும் கொண்டு வந்தார். மாநாட்டில் இருந்தவர்களுக்கு ஆச்சரியம். நிதியமைச்சர் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் பாராளுமன்றுக்குக் கொண்டு செல்லும் பெட்டி போல பண்டிதர் கொண்டு வந்த பைல் கட்டு இருந்தது.

என்ன பண்டிதர் ஐயா, தேர்தல் விஞ்ஞாபனம் ஏதுமோ? விதானையார் கேட்க, இல்ல விதானையார் எங்கட மாநாட்டிற்கு வழமையாக வாற கடிதங்கள் தான். வருடக் கணக்கில ஆலடி மாநாடு நடக்காதத்தால கடிதங்கள் தேங்கிப் போச்சு. சொல்லிக் கொண்டே பண்டிதர் ஆலடியில் அமர்ந்தார்.

முன்பு ஆலடி மாநாடு கூடும் போது சில பிரச்சினைகள் குறித்துப் பொது மக்கள் ஆலடி மாநாட்டிற்குக் கடிதம் எழுதுவார்கள். பொதுமக்களின் நன்மை கருதி ஆலடி மாநாட்டில் கடிதங்கள் வாசிக்கப்படும்.

என்ன செய்வது நாட்டு நிலைமை - இடப்பெயர்வு போன்றவற்றால் ஆலடி மாநாடு கூடாமல் போயிற்று. இப்போது மீண்டும் ஆலடி மாநாடு கூடியமையால், பண்டிதர் கடிதப் பைலையும் எடுத்து வந்தார்.

பைலைத் திறந்து கடிதம் ஒன்றை எடுத்து வாசிக்கப் பண்டிதர் முற்பட்ட போது பண்டிதரின் வேட்டிக்குள் செருகியிருந்த கையடக்கத் தொலைபேசி அலறத் தொடங்கியது.

பண்டிதர் அவசரமாகக் கையடக்கத் தொலைபேசியை எடுத்து பட்டனை அமத்தி காதுக்குள் வைத்தார். ஹலோ... ஹலோ... பண்டிதர் பேசுறன். நீங்கள்... பண்டிதரின் குரல் அரைக் கிலோ மீற்றருக்குக் கேட்டிருக்கும். அந்தளவு உரத்த குரல்.

பண்டிதரின் குரலுக்கு எதிர் முனையில் இருந்து பதில் வந்தது. நான் யாழ்ப்பாணத்திலிருந்து பேசுறன். உங்களிட்ட ஒரு உண்மையைச் சொல்ல வேணும்...

ஆரு மகன் கதைக்கிறியள்... என்ன விஷயம்...

பண்டிதர் ஐயா யாழ்ப்பாணத்தில வாகனம் ஓட்டுவதற்கு லைசன்ஸ் கொடுக்கினமல்லோ... ஓம் அதற்கென்ன... யாழ்ப்பாணக் கச்சேரியில விண்ணப்பித்து பரீட்சை எழுதி அதில் சித்தியடைந்து நேரடியாக 'ரயல்' காட்டிற முறை இருக்குத்தானே!

ஓம் தம்பி அந்த முறை எனக்குத் தெரியும்... அதுக்கென்ன? இப்ப பண்டிதர் கேள்வி கேட்டார்.

அங்கதான் ஐயா பிரச்சினை இருக்கு, நேரடியாக ரயல் காட்டப் போறவியள் பாஸ்பண்ணுறது முடியாத காரியமாம். அப்ப என்ன செய்யிறது தம்பி... எதிர் முனையில் இருந்து சிரிப்பொலிவர பண்டிதருக்கு கோபம் வந்தது.

தம்பி இது சிரிக்கிற நேரமோ, கதையைக் கெதியா முடியும், கான்போன் காசை திண்டு தள்ளுது... பண்டிதர் ஐயா, யாரேனும் லைசன்ஸ் எடுக்கிறதா இருந்தா 'லேனர்ஸ்' மூலமாகத் தான் எடுக்கச் சொல்லுறாங்கோ. அலைச்சல் இல்ல, ஓடத்தெரியா விட்டாலும் உடன் லைசன்ஸ் கிடைச்சு விடும்... பண்டிதர் மௌனமாகிப் போனார். அதென்ன தம்பி நேரடியா ரயல் காட்டுறவியள் பெயிலாகிப் போக லேனர்ஸ் ஊடாக வாறவர்கள் லைசன்ஸ் எடுத்துக் கொண்டு போறது, உதென்ன கதை சும்மா கதைக்கக் கூடாது. நீர் கூறுகிற விடயத்துக்கு ஏதேனும் ஆதாரம் இருக்கோ தம்பி பண்டிதர் கேட்டார்.

ஆதாரமோ... கச்சேரியில லைசன்ஸ் கிடைத்தவர்களை ஒரு பகுப்பாய்வு செய்தால் தெரியும் பண்டிதர்.

நேரடியா ரயல் காட்டினவியள் லேனர்ஸ் மூலமாக ரயல் காட்டினவியள் எண்டு பிரிச்சு ஒரு பகுப்பாய்வு செய்தால் உண்மை தெரிய வரும். எதிர்முனையில் இருந்து பதில் வர,

அதுவும் சரிதான் தம்பி, ஆனால்... என்ன பண்டிதர் ஐயா ஆனால் எண்டு இழுக் கிறியள்...

எங்கட அரச அதிபர் ஐயாட்ட ஒருக்கா சொன்னால் எல்லாம் சரிவரும். பத்மநாதன் ஐயாவோடையும் கதைக் கிறம் தம்பி...

இருந்தாலும்... பண்டி தர் மீளவும் இழுத்தார்.

ஏன் பண்டிதர் ஐயா நீங்களும் லைசன்ஸ் எடுக்க வேண்டி இருக்கோ... எதிர்முனைக் கேள்வி பண்டிதருக்கு சிரிப்பைக் கொடுக்க ஓம் தம்பி நீங்கள் வாகனம் ஓட்ட லைசன்ஸ் எடுக்க வேணும். நாங்கள் இந்த உயிரைக் கொண்டு போறதுக்குத் தான் லைசன்ஸ் தேவை, எங்கட பைல்கள் எப்ப வருமோ தெரியாது. மரணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறம். முதுமையின் வருத்தல் பண்டிதரின் குரலில் தெரிந்தது.

சரி பண்டிதர் ஐயா... நான் பிறகு கதைக்கிறன். ஓம் தம்பி நீர் சொன்ன விடயம் பற்றி ஐயாக்களோட கதைக்கிறன். ஆனால் எதிலும் உண்மை இருக்க வேணும்.

உண்மையில்லாமல்... எதையும் நாங்கள் பேசக்கூடாது. அதேநேரம் உண்மைகள் கண்டறியப்படவும் வேணும். பண்டிதரின் தொகுப்புரையுடன் கான் போன் கட்டாகியது.

கான்போன் கதையோட தான் மாநாடு முடியும் போல விவசாய மன்னர் சற்று கோபப்பட்டார். இது நல்ல விடயத் துக்காக கதைச்சம். எங்கட இளசுகள் வீதியால போகவர கான் போனில கதைச்சுக்கொண் டல்லோ போகுதுகள். பண்டிதர் பதில் கூறிக் கொண்டே பைலைத் திறந்து ஒரு கடிதத்தை எடுத்தார். பண்டிதர் கெதியா வாசியுங்கோ.

ஊரடங்குச் சட்டத்தை நீக்கினாலும் இப்ப இருக்கிற வாகன நெரிசலில் வீடு போய்ச் சேர முடியாது. விதானையார் விஸ்வலிங்கம் அவ சரப்படுத்தினார். பண்டிதர் கடிதத்தை வாசிக்கத் தொடங்கினார்.

பண்டிதர் ஐயா வணக்கம்

நாங்கள் நான்கு பெண் பிள்ளைகள் எங்கட அப்பா இறந்து விட்டார். நல்லா இருந்த நாங்கள் என்ன செய்யிறது காலப்பிழை. அப்பா வின்ர இழப்போட எங்கட குடும்பம் வறுமைக்குள் தள்ளப்பட்டு விட்டது. வீட்டுக் கஸ்ரத்தைப் போக்க கடை ஒன்றில வேலை செய்யிறன். அழகு ஒன்றுதான் என்ர சீதனம், வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு சம்பந்தம் பேசப்பட்டது. மாப்பிள்ளையும் நல்ல வர்.

வெளிநாட்டு மாப்பிளையைத் திருமணம் செய்தால் எங்க குடும்பக் கஸ்ரமும் நீங்கு எண்ட நம்பிக்கை. நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் பெண் பார்ப்பதாக இருந்தது. அது கந்த ஷஷ்டி காலம் என்பதால் ஆலய வீதி யில் அடி அளித்துக் கொண்டிருந்தேன்.

பார்ப்பதற்கு புரோக்கரும் மாப் பிள்ளையும் வந்திருந்தனர். அவர்களுக்கும் என்னைப் பிடித்து விட்டது. ஆனால்... என்ன செய்வது அந்த நேரம் இரண்டு விடுகாலி கள் எனக்குப் பக்கத்தில வந்து என்ன மச்சான் இன்டைக்கு உலாத்தப் போகல்லயோ... என்று கூற... இண்டைக்கு ஒருத்தரும் வரல்லப் போல மற்றவன் பதிலளித்தான். நிலைமையை உணர்ந்த மாப்பிள்ளை என்னை வேண்டாம் என்றே கூறிவிட்டார். பார்த்தீர்களா எங்கட வாழ்க் கையில் இப்படி ஒரு அநியாயம். வீம்புத் தனம் பேசும் இந்த விடுகாலிகளைத் திருத்த யாரும் இல்லையோ....

இப்படிக்கு...

பண்டிதர் கடிதத்தை வாசிக்கும் போதே அவரின் கன்னத்தின் ஓரத்தில் வடிந்த கண்ணீர் காகிதத்தை நனைத்துக் கொண்டது.

பார்த்தியளோ பண்டிதர் எங்கட இளசுகள். இறைவா நீதான் இவையளைத் திருத்த வேணும் பண்டிதர் சொல்ல சோமசுந்தரக் குருக்கள் கண்டாமணியை இழுத்தடிக்க மாநாடு கலைந்தது.

ஆதித்தன்

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### வசந்தம்

உண்ண உணவுமின்றி
உடையுடன் - எங்கள்
உணர்வும் இழந்து
வாழ்வதா எங்கள்
வாழ்வின் வசந்தம்

எம்மை நாமே
ஆளுதலுடனே
சொந்த மண்ணில் - புழுதி
வாரிச் சொரிந்து
சொந்தங்களுடன்- நாம்
கூடி மகிழ்ந்து
ஏர் பிடித்து
எருது கலைத்து
விதை விதைத்து
வியர்வை சிந்தி
எங்கள் வயல்களில்
வளமது பெருக்கி
தென்னம் கீற்றின் -இளம்
தென்றல் தழுவ
சொந்த வீட்டின்- சிறு
திண்ணையில் அமர்ந்து
கூழோ கஞ்சியோ
உண்டு மகிழ்வோம்
அதுவே எங்கள்
வாழ்வின் வசந்தம்

இணுவை சுகந்தி

### இது தான் நான்

சந்தர்ப்ப வசமாகி
அலைகடலோடு
வந்து சேர்ந்த
எல்லோரையும்- நான்
சந்தித்து விட்டேன்- ஆனால்
என்னைத்தான் இன்னும்
சந்திக்க முடியவில்லை...?

ஜசிந்தா பாலசுப்பிரமணியம்
உரும்பிராய்

### சங்கு முழக்கம்

இலை மறைந்த கனியும்
இருள் மறைத்த ஒளியும் - பூ
இதழ் மறைத்த தேனும்
முகில் மறைத்த நிலவும் - தம்
பெருமை இழப்பதில்லை
அதுபோல்
அன்புள்ள சங்கே
சில காலம் நீ ஓய்ந்தாலும்
உன் முழக்கம் ஓயாது

வி.கரன்
ழீர்வேலி

### மா(ற்)றிவிடு

தோல்விகள் உனக்கென்ன தொடர்கதையா!
தோல்விகளைக் கண்டு தோற்றுவிடாதே
நாளைய உலகின் விடிவெள்ளி நீ
நடுக்கடலடியில் விடப்பட்ட படகல்ல நீ
எதிர்பார்ப்புக்கள் சிலவேளை எட்டாக்கனிதான்
என்றுமே வாழ்க்கை ஓர் போராட்டம் தான்
தோல்விகள் என்று பாரமல்ல -அவை
மீண்டும் தோற்றுவிடாத படிக்கட்டுக்கள்
இன்றே வீறுகொண்டு நீ எழுந்தால்
வெற்றி என்றும் உனக்கேதான்

சி.ராதிகா
பொலிகண்டி

### மறந்துவிடாதே!

உதவாதவன் என்று
அடுத்தவனைப் பார்த்து
உன் கைவிரலை நீட்டாதே...!
அடுத்தவன் உன்னைப்பார்த்து
கைவிரலை நீட்டாதபடி
பயணிப்பதுதான்...
சமூகத்திற்கு நீ செய்யும்
பேருதவி என்பதை
மறந்தவிடாதே

வ.ச.செல்வராசா

### வாட்டிடும் ஞாபகங்கள்

வசந்தமாய் பூத்த மலர்
வரண்டு சருகாகி
உடைந்து போன நெஞ்சுவழி
சத்தமிட்டு சுவாசம் தடுக்க
புதுக்காற்றை அனுமதித்து
அடைத்திட முயல்கிறேன்
பூட்டிக்கொள்ள நெஞ்சம் தயாரில்லை
சருகுகள் பறக்கின்றன சரீரமெங்கும்
உடைவுகளாய்...

த.சீதா
வீரவாணி

### சங்குநாதம் எங்கும் ஒலிக்கும்

வலம்புரி நீ தரும் சங்கு நாதம் - இந்த
வையகம் முழுவதும் வசந்த கீதம்!
விடியலின் பாதையில் வருபவன் - நீ
வாசகர் மனதினைத் தொடுபவன்!

நடுநிலை உந்தன் வசிப்பிடம் - தனி
நம்பிக்கை தருகின்ற நிறைகுடம்!
புகழினை உயர்வாக கண்டவன் - தாய்த்
தமிழினை மூச்சாகக் கொண்டவன்!

இதயத்தில் இதமாய் வாழ்கின்றாய் - இந்த
உலகத்தை நிறைவோடு ஆள்கின்றாய்!
வருகின்ற காலங்கள் உனக்காக - எம்
வலம்புரி நீயென்றும் எமக்காக!

இ.கோபிகா
யா.வடமராட்சி
இந்து மகளீர் கல்லூரி

## மௌனத்தின் தேடல் -01

### விடியலைத் தேடும் விழிகள்

விழி தூரம் எட்டும் வரை
வழி ஏதும் அறியா – நீ
விழி மூடி புதையுண்ட – உன்
உறவையா தேடுகிறாய்...

சர்வதேசமே வழிதெரியா...
விழியான போது...!
உன் விழிகளின் விடியல்
எப்போது...?

வி.கிரிதரன்
மானிப்பாய்

முட்கம்பி வேலிக்குள் முடிவிலா
சோகம்தான் என்ன
தொலைந்து போன வாழ்வை எண்ணியா
தொடரும் இந்த வதழ்வை எண்ணியா
சொல்லுங்கள் உறவுகளே

சந்நிதி கஜா

### முள்வேலி உதிரங்கள்

ஆணாகப்பிறந்த பாவம்
ஆண்டுகளாகியும்
ஆதரவற்று ஆசைகள் புதைத்த
உள்ளங்கை
முள்வேலி உதிரங்கள் யாரறிவார்?

ரி.தீதா
புத்தூர்

### புரியவில்லை

கொட்டும் மழையில் எரியும் வெய்யிலில்
முட்கம்பி வேலிக்குள் உடம்பெங்கும்
எரிகாயங்களுடன்
உயிர்போகும் எமக்கு – எங்கள்
வீட்டுக் காற்று தான் எங்கே...?
புரியவில்லை நம் தலைவர்களுக்கு

ஆர்.கருணா
யாழ் பல்கலைக்கழகம்
கலைப்பீடம்



மனிதா!
இந்த முட்கம்பி வேலிகள்
உன்னை அடைக்கவில்லை
உன்னுடைய
உணர்ச்சிகளை அடைக்கியாஎ.

– ரமீ –
கோவையூர்

### பேரவலம்

முட்டிமோதிய போர்களிலே
எம் உறவுகள் சாய்ந்திட
மிஞ்சிய நாமெல்லோரும்
கம்பிக் கூட்டுக்குள்
விதியின் போர்வையிலே
சதியின் வலைவிரிப்புக்கள்
சமாதி வாழ்வினிலே
சாகடிக்கச் செய்கின்றது
தமிழனாய் பிறந்ததால்
தரணியில் இடமில்லாமல்
தத்தளிக்கின்றோம்

வே.அகிலேஸ்வரன்
மருதங்கேணி

### விடைபெறுவது எப்போது

முள்வேலிக்குள் முடங்கிய முத்துக்களே!
விலங்கினமாய் சிறைப்பட்டதால்
விடியலை எண்ணி உங்கள்
விழிகள் தேடும் வழிகள்
விடைபெறுவது எப்போது

கோ.சதீஸ்
ஷூராஜகிராமம்

சங்குநாதம்

## மௌனத்தின் தேடல்- 02



அன்பு வாசகர்களே !
உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.
-ஆசிரியர் -

## ★ ஆசியாவிலேயே அதிக உயர்வு ★

# 2009இல் கொழும்பு பங்குச் சந்தை 125 வீத வளர்ச்சியால் வரலாறு படைத்தது

## அந்நிய முதலீடும் அதிகரிப்பு

2009 ஆம் ஆண்டின் இறுதி வாரத்தில் உள்நாட்டு முதலீட்டாளர்கள் முன்னணி நிறுவனப் பங்குகளை வாங்கியதன் மூலம் பங்குகள் அதிக உயர்வைக் காட்டின.

2009இல் தொடர்ச்சியாக உயர்வடைந்து வந்த கொழும்பு பங்குச் சந்தை 2009இன் முடிபில் 125.2 வீத வளர்ச்சியைக் காட்டி ஆசியாவில் அதிக வளர்ச்சி அடைந்த பங்குச் சந்தையாகவும்; உலகில் ரஷ்யாவுக்கு அடுத்ததாக 2ஆவது உயர்வைப் பெற்ற சந்தையாகவும் ஆனது.

யுத்தத்தின் பின்னரான பொருளாதார சாதக நிலை ,குறைந்த வட்டி வீதம் ;குறைவடையும் பண வீக்கம் , ரூபாயின் நிலைப்புத் தன்மை மற்றும் மீள்வரும் வெளிநாட்டு முதலீட்டு ஆர்வம் என்பன இவ் வளர்ச்சிக்கு உதவியுள்ளதாக இத் துறைசார் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

2008ஆம் ஆண்டில் 13.6 பில்லியன் ரூபாய் வெளிநாட்டு முதலீடாக உள்வந்தது.2009இல் தேறிய பெறுமதியாக 785.3 மில்லியன் ரூபாய் பங்குகளை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விற்றுள்ளனர்.

கார்ஷன் நிறுவனப் பங்குகள் 7.68 வீதம் அதிகரித்து 490.50 ரூபாயும் புக்கிட் நிறுவனப் பங்கு 6.16 வீதம் அதிகரித்து 3025.50 ரூபாயானது.

2008ஆம் ஆண்டு சராசரியாக 464 மில்லியன் ரூபாய் புரள்வைக்கொண்டிருந்தகொழும்புபங்குச் சந்தையானது ,2009இல் 593.6 மில்லியன் ரூபாயாக உயர்வடைந்தது.கடந்த ஆண்டு பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வு 14 ஆயிரத்து 250கோடி ரூபாய்களாகும்.

இதேவேளை நிபுணர்களின் பார்வையில் ,ஜனவரி நடுப் பகுதி வரை பங்குச் சந்தையானது அதிகரித்து ,பின்னர் ஜனாதிபதித் தேர்தல் வரை சிறிது சரிவைக் காட்டும் என்கின்றனர்.

கொழும்புபங்குச்சந்தையானது; ஜனாதிபதித் தேர்தல் முடிவை உன்னிப்பாக அவதானிப்பதாக தெரிவிக்கிறார் முன்னணி பங்குத் தரகர் ஒருவர்.

2009 ஆம் ஆண்டு பங்குச் சந்தையில் ராஜ் இராஜரட்ணத்தின் விவகாரம் அதிர்வை ஏற்படுத்தியது.ஆனாலும் விரைவாகவே இந் நிலைமையிலிருந்து மீண்டது.

2009இல் கொழும்பு பங்குச் சந்தையில் 38 வீத பங்குகளை வெளிநாட்டினர் வாங்கினர்.25.1 வீத பங்குகளை வெளிநாட்டு நிறுவனங்கள் வாங்கின.33.3 வீதத்ததை உள்நாட்டு நிறுவனங்களும் வாங்கியுள்ளதாக கொழும்பு பங்குச் சந்தையின் வர்த்தக அபிவிருத்தி முகாமையாளர் துஷார ஜெயரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தின் பின்னர் அனைத்து பங்கு விலைச் சுட்டி 72 வீதம் அதிகரித்தது. தற்போது 5257 பரிமாற்றங்கள் நாளொன்றுக்கு நடை பெறுகின்றன. ஆனால் 2600 பரிமாற்றல்களே மே வரையான ஆண்டின் முதல் 5 மாதங்கள் இடம்பெற்றது.

2008 டிசம்பர் அனைத்து பங்கு விலைச் சுட்டி 1590.72 ஆக இருந்தது. அது தற்போது 3385.55 ஆக அதிகரித்துள்ளது. இது 125 வீத வளர்ச்சியைக் காட்டி வரலாறு படைத்துள்ளது.

இதேபோல் மிலங்கா விலைச் சுட்டியும் 136 வீதம் வளர்ச்சி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் குறித்து பிணைகள் மற்றும்பங்குப் பரிவர்த்தனை ஆணையகத்தின் பணிப்பாளர் சந்தன டீ சில்வா தெரிவித்ததாவது;

கொழும்பு பங்குச் சந்தையானது கிராமப் புறங்களில் உள்ள முதலீட்டாளர்களை ஆர்வப்படுத்தி பங்குச் சந்தையில் முதலிடத் தூண்டி அவர்களின் பங்குபற்றலையும் பெற்றுக் கொள்வுள்ளோம்.

ஓய்வூதியநிதி,ஊழியர்நம்பிக்கை நிதியம் ,ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் வங்கி வைப்பு ,காப்புறுதி நிறுவனங்களுக்கு கொழும்பு பங்குச் சந்தையில் முதலிடும் ஆர்வம் அதிகரித்துள்ளது. இது அவர்களின் பணத்தினை அதிகரித்துக் கொள்ள உதவும்.

2009இல் கட்டுமானம் மற்றும் பொறியியல்துறை 356 வீத வளர்ச்சியை பெற்றது. இதேபோல் வங்கித் துறை 134 வீதமும் உணவு மற்றும் மதுபானத்துறை 114 வீதமும் வளர்ச்சி அடைந்தன.

தொலைத் தொடர்புத்துறை 36 வீத வளர்ச்சி மட்டுமே பெற்றது. ஹோட்டல் மற்றும் பிரயாணத் துறை 90 வீத வளர்ச்சியை அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த வெள்ளிகிழமை பங்குச்சந்தை விடுமுறை நாள் என்பதால் விாழக்கிழமை முடிபின் படி கொழும்பு பங்குச் சந்தையில் சில முன்னணி நிறுவணங்களின் ஒரு பங்கின் விலைகள் வருமாறு ,

அபான்ஸ் எலக்ரிக்கல் 100.00, ஏ.சி.எல்.கேபிள்ஸ் 76.75,அற்கின்ஸ்பென்ஸ் ஹோட்டல் 269.25, ஆர்ப்பிக்கோ பினான்ஸ் 45.00, ஏசியன்ஸ் அலைன்ஸ் இன்சுரன்ஸ் 56.00, ஆஸிரி ஹொஸ்பிட்டல் 10.25,பொகவந்தலாவ ரீ எஸ்ரேட் 37.50,கார்கில்ஸ்(சிலோன்) 62.25,

செலிங்கோ இன்சுரன்ஸ்134.25, சிலோன் ஹொஸ்பிட்டல் 80.25, சிலோன் லெதர் புரடெக்ஸ் 56.00, சிலோன் தியேட்டர்ஸ் 54.00, சிலோன்ரொபாக்கோ கம்பனி185.00,


கொழும்பு டெக்யாட் 244.75, கொழும்பு லான்ட் டெவலெப்மன்ட் 3.90,கொமர்ஷல் வங்கி 189.50, டயலொக் 7.25,ஈகிள் இன்சுரன்ஸ் 178.00,கலதாரி ஹொட்டல் 15.00, எச்.என்.பி. 170.00, எச்.என்.பி. அசுரன்ஸ் 49.50,ஜனசக்தி இன்சுரன்ஸ் 9.50,ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் 171.50,ஜோன் கீல்ஸ் ஹோட்டல் 22.50,களனி ரயர்ஸ் 67.25,

லங்கா சீமெண்ட் 23.25,லங்கா செரமிக்49.00லங்கா ஐஓசி17.25,லங்கா ரைல்ஸ் 66.50, லக்ஸபான பற்றரிஸ் 4.80, மேர் ஷன்ட் வங்கி 19.50, என்.டி.பி. வங்கி 206.00,

நவலோகா ஹோஸ்பிட்டல் 3.10,பான் ஏசியா வங்கி 20.25, பியூப்பிள் மேர்ஷன்ட் வங்கி 35.00,

றிச்சட் பீரிஸ் கம்பனி 39.00, சம்பத் வங்கி 204.25,செலான் வங்கி 37.00,சிங்கர் சிறிலங்கா 76.50, தாஜ் லங்கா ஹொட்டல் 23.25,த லங்கா ஹொஸ்பிட்டல் .19.00, ரோக்கியோ சீமெண்ட் 322.25, ரச்வூட் 85.00,ரான் ஏசியா ஹொட்டல் 174.25,யூனியன் அசுரன்ஸ் 90.75

என்ற விலைகளில் இறுதியாக வியாபாரம் ஆனமை குறிப்பிடத்தக்கது.






## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.63 | 115.27 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 183.17 | 187.00 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 161.98 | 165.90 |
| சுவிஸ் பிராங் | 108.90 | 112.40 |
| கனேடிய டொலர் | 107.03 | 110.57 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.14 | 104.22 |
| சிங்கப்பூர் டொலர் | 80.54 | 82.56 |
| ஜப்பான் யென் | 1.21 | 1.24 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.46 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.14 | |

# விவசாய கடன்களுக்கான வட்டி மத்திய வங்கியால் குறைப்பு

(கொழும்பு)

மூன்று விவசாய திட்டங்களுக்கான வட்டி வீதத்ததை,விவசாய சமூகத்துக்கு ஆதரவு வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் குறைத்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி வருடாந்த வட்டி வீதம் புதிய கிராமிய கடன்,திட்டம் (NCRCS),அக்ரோ கால்நடை அபிவிருத்தி கடன் திட்டம் (ALDL), நவோதய விசேட கடன் திட்டம் போன்றவற்றுகு முறையே 12 வீதத்திலிருந்து 8 வீதமாக வட்டி குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

புதிய கிராமிய கடன் திட்டத்தின் (NCRCS) கீழ் ஒவ்வொரு ஆண்டும் பத்து பில்லியன் ரூபாய் ஒதுக்கப் படுகிறது.

அக்ரோ கால்நடை அபிவிருத்தி கடன் திட்டம் 2008ஆம் ஆண்டு அரசாங்க பட்ஜெட்டில் அறிமுகப் படுத்தப்பட்டது.

இது பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் அறிமுகப் படுத்தப்பட்டது. இதற்கு 2009ஆம் ஆண்டு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

இதேபோல் கால்நடை வளர்போருக்காக , 2007ஆம் ஆண்டு அரசாங்க பட்ஜெட்டில் அறிமுகப் படுத்தப்பட்ட நவோதய கடன் திட்டத்தின் கீழ் நடுத்தர கால அளவைக் கொண்ட கடன்கள் வழங்கப்படுகின்றன.

இக் கடன் திட்டங்களின் வட்டியை குறைப்பதன் மூலம் விவசாயம் , கால்நடை வளர்ப்பில் முதலீட்டை அதிகரிக்கஅரசாங்கம்திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம் விவசாய உற்பத்தி மற்றும் பால் உற்பத்தினை அதிகரிக்க முடியும்.

இந்த நடவடிக்கை நாட்டின் உணவுப்பாதுகாப்பை அதிகரிப்பதுடன் உணவு உற்பத்தியில் தன்னிறைவை பெற்றுக் கொள்ளல் மற்றும் விவசாய சமூகத்தின் வருமானத்தையும் வாழ்வாதாரத்தையும் உயர்த்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 3385.55 | 28.96 |
| மிலங்கா விலைச்சுட்டி | 3849.38 | 28.81 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 765.42 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : கார்ஷன்ஸ் ,த புக்கிட் ,கொழும்பு டெக்யாட் , ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் ,என்வெயர்மெண்டல் றிசோசஸ் இன்வெஸ்மெண்ட்.
***சரிவைக் காட்டிய பங்குகள்***: லுப்ரிக்கன் லங்கா ,டிப்பட் புறடெக்ஸ் , ஏசியன் ஹெட்டல் புறப்பட்டிஸ் ,லங்கா ஐ.ஓ.சி.,வலிபல் பவர்.

## கொழும்பு-யாழ்.இடையில் லேக் ஹவுஸ் பஸ் சேவை

லேக் ஹவுஸ் தினகரன் சொகுசு பஸ் சேவை யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் கொழும்பு வெள்ளவத்தை சென்.லோறன்ஸ் தேவாலயத்துக்கு எதிரில் உள்ள லேக் ஹவுஸ் செய்தி முகவர் நிறுவனத்தில் இருந்து நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இச் சொகுசு பஸ் வெள்ளவத்தையில் இரவு 11 மணிக்கு புறப்பட்டு 11.15 மணியளவில் லேக் ஹவுஸை அடைந்து அங்கிருந்து யாழ். புறப்பட்டு வரும்.இதற்கான ரிக்கெற் பதிவுகளை லேக் ஹவுஸ் பதிவு நிலையத்திலும் யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள பதிவு நிலையத்திலும்மேற்கொள்ள முடியும்.

குளிரூட்டப்பட்ட இந்த சொகுசு பஸ் 49 ஆசனங்களைக் கொண்டது.றேடியோ மற்றும் தொலைக் காட்சி வசதியையும் கொண்டது.

பாடசாலை மற்றும் கழகங்கள் குழுக்களாக பயணம் செய்ய விரும்பின் 25 வீத கழிவு வழங்கப்படும். மூத்த பிரஜைகள் மற்றும் 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு 7 வீத கழிவு வழங்கப்படும் என்றும் ஒரு வழிக் கட்டணம் 1800ரூபாய் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல் களை 2489273 மற்றும் 021 223 5361 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கு.முருகதாஸ்

# அரசியல் பழிவாங்கல்களுக்கு எதிராக தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல் சம்பவம் ஒன்றுக்கு எதிராக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நடவடிக்மை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதல் தடவையாக அரசியல் பழிவாங்கல் அடிப்படையில் இடமாற்றம் செய்யப்பட்ட காவல்துறை உயரதிகாரி ஒருவரின் இடமாற்ற உத்தரவு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் பதாகைகளை அகற்றியமைக்காக அம்பாறைப் பிரதேச காவல்துறை அத்தியட்சகர் கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்ட காவல்துறை அத்தியட்சகர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன என்பவரே கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

எவ்வாறெனினும் காவல்துறை மா அதிபர் மஹிந்த பாலசூரியவினால் பிறப்பிக்கப்பட்ட குறித்த இடமாற்ற உத்தரவினை உடனடியாக இரத்துச் செய்யுமாறு தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் பிறப்பிக்கப்படும் இடமாற்றங்களை இரத்துச் செய்யும் உரிமை தேர்தல் ஆணையாளருக்கு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# இலங்கை மக்களுக்கு மாறுபட்ட அரசாட்சி வழங்குவதே எமது நோக்கம்

## சரத்பொன்சேகா

(கொழும்பு)

இலங்கை மக்களுக்கு மாறுபட்ட வித்தியாசமான அரசாட்சி ஒன்றை வழங்குவதே தமது ஒரேநோக்கம் என எதிர்க்கட்சி பொதுவேட்பாளர் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

முப்படைத் தலைமை அதிகாரியாக இருந்தவேளையில் தாம் அரசியலில் கால் பதிப்போம் என்பதை எண்ணியிருக்கவில்லை என்றும் இராணுவ அதிகாரியாக இருந்து இன்றைய அரசியல் சூழ்நிலையைப் பார்த்தமையும் அது தமக்கு ஒத்துவரும் என நினைத்திருக்காமையே இதற்கு காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



எனினும் தற்போது தாம் இணைந்துள்ள கூட்டம் மாறுபட்ட அரசியல் விரும்பிகளாகக் காணப்படுவதனாலேயே அவர்களுடன் இணைந்து அரசியல் நடத்த தீர்மானித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளதோடு இந்த நிலையில் அரசியல் சூழ்நிலையை மாற்றியமைத்து புதிய ஆட்சி முறையொன்றை அமைக்கும் திட்டத்தி லேயே தாம் இருப்பதாகவும் அவர் தெரிவித் துள்ளார். அத்தோடு இராணுவத்தில் பேணப் படுகி ன்ற ஒழுக்க முறைகள் , நேர்மை என்பன தமது ஆட்சி யில் காணப்படும் எனவும் சரத் பொன்சேகா சுட்டிக் காட்டியுள்ளார். (2-6)




## யோகராஜன், சச்சி ஆகியோரின் வெளியேற்றம்

# ஜனாதிபதி தேர்தலில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது

## ஆறுமுகன் தொண்டமான்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரான ஆர்.யோகராஜன் மற்றும் பிரதி அமைச்சருமான என்.சச்சிதானந்தன் ஆகியோரின் வெளியேற்றத்தால் ஜனாதிபதித் தேர்தலில் எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்று இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பது தொடர்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயற்குழு கூடி ஆராய்ந்து முடிவெடுத்தபோது சத்தமின்றி இருந்துவிட்டு தற்போது புதுப்புதுக் கதைகளைக் கூறுவதானது வேண்டாத பெண்டாட்டியின் கை பட்டாலும் குற்றம் கால்பட்டாலும் குற்றம் என்பதுபோன்றுள்ளது எனவும் அவர்சுட்டிக்காட்டினார்.

நேற்றுமுன்தினம் இளைஞர் வலுவூட்டல் அமைச்சின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் மேலும் அவர் கருத்துக் கூறுகையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு ஆலமரம் போன்றது. அது எமது மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானுடைய காலம் தொட்டு ஒரு கட்டுக்கோப்புடன் இருந்து வருகிறது.

எனவே அவ்வாறான எமது கட்சி ஒரு முடிவை எடுத்தால் அதில் உறுதியுடன் இருக்கும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூடி ஆராய்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதாக முடிபெடுத்துள்ளது. அவரை ஆதரிப்பதற்கு விருப்பம் இல்லையென்றால் அல்லது இ.தொ.கா.வின் செயற்பாடுகள் சரியில்லை என்றால் சரியில்லை என்றால் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்குமுன்னர் இவர்கள் வெளியேறியிருக்கலாம். ஆனால் இவர்கள் அப்படிச் செய்யாமல் தற்பொழுது திடீரென விலகியிருக்கிறார்கள்.

இதைப் பற்றி நான் என்ன சொல்வது அவர்களிடம் கேட்கவேண்டும். வெளியேறிய அந்த இரண்டு உறுப்பினர்களையும் கடைசிவரை நாம் நம்பியிருந்தோம். அவர்கள் திடீரென இப்படிச் செய்திருப்பதானது அவர்களுடைய சுய நலத்திற்காகவிருக்கலாம். ஏனென்றால் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்னர் அரசாங்கம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் யோகராஜன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்துப் பேசியிருந்தார்.

ஆனால் ,தற்போது திடீரென ஜனநாயகம் இல்லை இ.தொ.கா.வால் நெருந் தோட்டப்பிள்ளைகளுக்கு வாய்ப்பில்லை. அப்படி இப்படியென பேசுகின்றார்கள். இவர்களைப் போல எடுத்த முடிவை அடிக்கடி மாற்றுவதற்கு நாம் தயாரில்லை .நாங்கள் எடுத்த முடிவில் நாம் உறுதியாக உள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (ஓ-2-6)

# 2017இல் ஜனாதிபதியாவதற்கு ரணில் கனவு காண்கிறார்

## எஸ்.பி.திஸாநாயக்க

(கொழும்பு)

ரணில்விக்கிரமசிங்க 2017 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக வருவதற்கு கனவு காண்கிறார். அதனால் தான் இம்மாதம் நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடாது சரத் பொன்சேகாவை நிறுத்தியுள்ளார் என முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸா நாயக்க கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது, எதிரணியினர் எவ்வளவு தான் முயன்றாலும் ஆட்சியைக் கைப்பற்றுவது இயலாத காரிய மாகும். 2023 ஆம்ஆண்டு வரையில் ஐ.தே.கட்சி எதிர்க்கட்சியாகவே இருக்க வேண்டிய நிலை ஏற்படும்.



மக்கள் விடுதலை முன்னணியின் வாக்குப் பலம் இப்போது குறைந்துள்ளது. தனித்து நின்று எமது ஜனாதிபதியை தெரிவுசெய்யும் திராணியில்லாத காரணத்தால் அக்கட்சி தமது கொள்கைகளுக்கு முரண்பட்ட கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

இதனால் விரக்தி அடைந்துள்ள அக்கட்சியின் உறுப்பினர்கள் இப்போது விலகிச் செல்ல ஆரம்பித்துள்ளனர் என்றும் கூறி யுள்ளார். (2-6)

## தேர்தல் பிரசாரங்களிற்காய்

# அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தும் மஹிந்த

(கொழும்பு)

அரச தலைவருக்கான அதிகாரங்கள் அனைத்தையும் பயன்படுத்த தேர்தல் விதிகளிற்கு முரணாக மஹிந்த ராஜபக்ஷ பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்துள்ளன. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது ,

தனது நிறைவேற்று அதிகாரங்களையும், அரச உடமைகளையும் பயன்படுத்தி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருதாகவும் இன்று றுவன்வெல பகுதியில் நடைபெறவுள்ள தேர்தல் பிரச்சார பணிகளுக்கு துறைமுக அதிகாரசபை சேர்ந்த பணியாளர்களும், வாகனங்களும் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



இந்த நடவடிக்கைகளில் பயன் படுத்தப்படும் அரச வாகனங்களின் இலக் கங்கள் மற்றும் பணியாளர்களின் உத்தியோக அடையாள இலக்கங்கள் ஆகியவற்றை கொழும்பு இணையத்தளமொன்று வெளியிட்டுள்ளது. (ஓ-2-6)

# தேர்தலில் வென்றதும் முதலில் பொன்சேகா 17 ஆம் திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவார்

## ஜே.வி.பி. நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா வெற்றியீட்டியதன் பின்னர் முதலாவது கடமையாக 17 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவார் என ஜே.வி.பி. கட்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய 17 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்தும் ஆவணத்தில் முதலாவதாக ஜெனரல் கையெழுத்திடுவார் என அவரது ஊடகப் பேச்சாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் இடம்பெயர் மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பார் எனவும் மேலும் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டால் வழக்குத் தொடரவும் அல்லது அவர்களை விடுதலை செய்யவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவசரகாலச் சட்டத்தில் உள்ள பாதகமான சரத்துக்கள் இரத்துச் செய்யப்படும் எனவும் விவசாயிகளுக்கு பல்வேறு நிவாரணங்கள் அளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி. யும் கூட்டாக இணைந்து ஆட்சி அமைக்காது எனவும் ஜே.வி.பி. எதிர்க்கட்சியிலிருந்து புதிய அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-2-6)

# தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு குற்றவாளிகளை பயன்படுத்த வேண்டாம்

## தேர்தல்களுக்கு பொறுப்பான பொலிஸ் பிரிவு

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக குற்றவாளிகளை ஈடுபடுத்த வேண்டாம் என ஜனாதிபதி வேட்பாளர்களிடம் தேர்தல்களுக்குப் பொறுப்பான பொலிஸ் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

இதன் பிரகாரம் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் மற்றும் பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டவர்களை தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதனை தவிக்குமாறும் மீறி வேண்டுமென்றே இவ்வாறான குற்றவாளிகளை பயன்படுத்தினால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாக தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட் ண தெரிவிக்கின்றார். (ஓ-2-6)

# நுளம்புகள் சிலரை தேடிக் கடிப்பதேன் சிலரை விட்டுச் செல்வதேன்

## மன அழுத்தத்தின் போது வெளியிடப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் நுளம்புகளை கவருகின்றன

நுளம்புகளாலான அச்சம் இன்னும் நம் நாட்டை விட்டு அகலவில்லை. பல்லாயிரம் மக்களை இவ்வருடம் மாத்திரம் நுளம்புகள் நோயாளிகள் ஆக்கியுள்ளதுடன் இதுவரை குறிப்பிட்ட ஒரு நுளம்பைக் காவியாகக் கொண்ட டெங்குவினால் 250 க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளதாக பதிவுகள் கூறுகின்றன.

இது மட்டுமன்றி வருடா வருடம் உலகளாவிய ரீதியில் பல மில்லியன் மக்கள் நுளம்பை காவியாக கொண்ட நோய்களினால் பாதிக்கப்படுவதும் இறப்பதும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

குறிப்பாக 500 மில்லியன் மலேரியா சம்பவங்கள் நுளம்பால் உருவாக்கப்படுகின்றது. இத்துடன் டெங்கு மஞ்சள் காய்ச்சல், நைல் வைரஸ் என்பனவும் உலகளாவிய ரீதியில் நுளம்பால் பரப்பப்படும் நோய்கள். தென்னாசியா, தென்கிழக்காசியா மற்றும் ஆபிரிக்கா நுளம்புகளால் அதிகம் பாதிக்கப்படும் நாடுகளைக் கொண்டுள்ளன.

நுளம்பைக் கர்வியாக கொண்ட நோய்களை கட்டுப்படுத்தப் பல வழிகளை தேடும் விஞ்ஞான உலகம் இன்னும் அதற்கான தீர்க்கமான வழிவகைகளை கண்டறியவில்லை. சில தற்காலிக வழிகளை ஒட்டி நிற்கின்றன. மற்றும் இவ் வழிகளை தேடும் பாதையில் சில நிறுத்தங்களில் வேறு சில கண்டறிகைகளையும் வெளிக்கொண்டு வந்துள்ளன.


அந்த வகையில் அண்மையில் வெளியாகியுள்ள ஒரு புதிய விடயம் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

பலர் குழமியுள்ள இடத்தில் ஒரு சிலரை மாத்திரம் நுளம்புகள் விரட்டி குற்றுவதை நாம் அன்றாடம் நமது வீடுகளிலும் வேலைத்தளங்களிலும் கண்டுள்ளோம். அதற்கு பல காரணிகளையும் கூறிவந்துள்ளோம்.

இதற்கு முடிபு தேடும் விதத்திலும் அவ்வாறு நுளம்புகளால் இலக்கு வைக்கப்படுபவர்களை பாதுகாக்கும் பொருட்டும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து தற்போது சில முடிபுகள் எட்டப்பட்டுள்ளன.

அதிகம் நுளம்புகளால் தாக்கப்படுபவர்கள் நுளம்பை காவியாகக் கொண்ட நோய்த்தாக்கத்தின் நிகழ்தகவு கூடுவதனால் இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மனித உடலில் இருந்து சுரக்கப்படும் 400 வரையான தனித்துவமான மணம் உள்ள இரசாயனங்கள், பூச்சியினங்களைக் கவரும் அல்லது விரட்டும் இயல்பு கொண்டன என சந்தேகிக்கப்பட்ட இரசாயனங்களை ஆய்வுக்கு உட்படுத்திய விடத்து குறிப்பிட்ட சிலரை ஏன் நுளம்புகள் தொடர்ந்து விரட்டி குறிவைக்கின்றன என்பதற்கு விடை கண்டறியப் பட்டுள்ளது.



அத்துடன், அதற்கான இரசாயனங்களும் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியாளர்களின் முடிவின் படி, மன அழுத்த நிலையில் உள்ளபோது வெளியிடப்படும் மனித உடல் இரசாயனங்களில் நுளம்புகளை கவரும் அவற்றின் மன உணர்வுகளை தூண்டுவது கண்டறியப்பட்டுள்ளது.

மனித உடலில் இருந்து வெளியேறும் காபனீரொட்சைட்டு மற்றும் இலத்திரிக்கமிலம் ஸ்ரிரோய்ட் எனப்படும் பதார்த்தம் சில அதிரினல் சுரப்பியின் சுரப்புக்கள் என்பன நுளம்புகளைக் கவரும் இரசாயனங்களாக காணப்படுகின்றன.

இவற்றின் சுரப்பு மற்றும் செறிவு என்பன மன அழுத்த நேரத்தில் அதிகமாக உள்ளதால் அவை நுளம்புகளின் உணர்திறனை தூண்டுகின்றன என்றும், இதனால் நுளம்புகள் இவர்களை தேடித் தாக்குகின்றன என்றும் விஞ்ஞான முடிபுகள் தெரிவிக்கின்றன. இதேபோல், வேறு சில இரசாயனங்கள் நுளம்பை விரட்டுகின்றன.

தற்போது இவற்றை வைத்தே நுளம்பு விரட்டிகளை உருவாக்கி விடத் துடிக்கின்றனர் விஞ்ஞானிகள். மனித உடலின் வாசனை அல்லது பிரத்தியேக மணத்தின் சேர்க்கை சிக்கலாக உள்ளபோது, அதாவது பல இரசாயனங்கள் ஒன்று கூடி வாசனையை வெளிக் காட்டும்போது நுளம்புகள் கவரப் படுவது இல்லை என்றும், மாறாக அவை விலகி இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கான காரணம் அவற்றின் உணர்திறன் பொறிமுறை குழப்பப்படுவதனால் அவற்றின் ஒரு சீரான இயக்கம் தடைப்படுதல் ஆகும்.


இந்த வகையில் இதுவரை பொதுவாக நுளம்பு விரட்டியாக பயன்பட்டது. DEED எனப்படும் (N, N-diethyl - meta - toluamide) ஆகும். இதுவே எங்கள் நுளம்பு சுருள்கள் தெளிப்பான்கள் அனைத்திலும் காணப்படும் பொதுப்பதார்த்தம். தற்போது மனித உடலில் இருந்து வெளியேற்றப்படும் இயற்கையான இரு இரசாயனங்கள் நுளம்புகளை விரட்டும் இயல்புள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

மனிதத் தோலில் இருந்து வெளியேற்றப்படும் 6- methyl - 5 - hepten - 2 - one, geranylacetone பதார்த்தங்களே அவை. இவை முறையே ஒருவகை நகச்சாய நீக்கி மற்றும் நறுமணம் கொண்டதாக உள்ளன. இவை எல்லோரிலும் சுரக்கப்பட்டாலும் இவற்றின் செறிவு வேறுபாடுகளால் நுளம்புகள் விரட்டப்படுவது கடினமாகின்றது.

இவற்றைச் செயற்கையான உயிரி தொழில்நுட்பத்தின் மூலமாகவோ அன்றி இயற்கையாகவோ பெற்று அதன் மூலம் நுளம்பு விரட்டிகளை உருவாக்கி அநியாய இறப்புகளைக் கட்டுப்படுத்த அடுத்த கட்டம் நோக்கி நகர்கின்றது விஞ்ஞான உலகு.

ஆனால், நம்மைத் தேடி வரும் நுளம்பை குறைக்க அல்லது விரட்ட நாம் மன அழுத்தங்களில் இருந்து விடுபட்டு வாழ்வதும் ஒரு சாதாரண முன்எச்சரிக்கை என்பதையும் விஞ்ஞானம் கூறி நிற்கின்றது.

நுளம்பு விரட்டிகள் நுளம்புகளை விரட்டும் அதேவேளை மனித ஆரோக்கியத்திலும் கேடு விளைவிக்கின்றன. அதாவது நுளம்பு விரட்டிச் சுருள்கள், விசிறிகள், பசைகள், cream ஏனைய வகையான விரட்டிகள் அனைத்தும் ஒவ்வாமைகள் சுவாசத் தொற்றுக்கள் குறைபாடுகள் மற்றும் தோல் வியாதிகளுக்கு வித்திடுகின்றன என்பது மருத்துவ ரீதியான கருத்து.



**மனித உடலில் இருந்து வெளியேறும் காபனீரொட்சைட்டு மற்றும் இலத்திரிக்கமிலம் ஸ்ரிரோய்ட் எனப்படும் பதார்த்தம் சில அதிரினல் சுரப்பியின் சுரப்புக்கள் என்பன நுளம்புகளை கவரும் இரசாயனங்களாக காணப்படுகின்றன.**

சில நுளம்பு விரட்டிகளில் உள்ள இரசாயனங்கள் மனித நரம்புத் தொகுதியின் கணத்தாக்கம் கடத்தும் சோடியம் கால்வாயை தொடர்ந்து தூண்டல் நிலையில் வைத்திருப்பது நரம்பு ரீதியான நோய்களை ஏற்படுத்தலாம். அதாவது கணத் தாக்கக் கடத்தல் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பது பிறிதொரு கருத்து.

**நிருபராஜ்**

இதேவேளை தொடர்ந்து வெளியிடப்படும் நுளம்பு விரட்டிகளின் புகைகளால் சுவாசப்பையின் மீள்தன்மை மற்றும் ஈரலிப்பில் கூட பாதிப்புகள் ஏற்படுகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

# 2010 புத்தாண்டு பலன்கள்

## மேடம்

**தொட்ட காரியங்கள் வெற்றி பெறும்**

**மற்றவர்கள் உங்களை தூக்கிப் பேசினாலும், தாக்கிப் பேசினாலும் ஒரே மன நிலையைப் பெற்றிருக்கும் மேட ராசி நேயர்களே!**

வந்துவிட்டது புத்தாண்டு! வளமான வாழ்க்கை உங்களுக்கு அமையப் போகிறது. உங்களுக்கு இனி பணக் கவலையும் இல்லை ; மனக் கவலையும் இல்லை. உங்கள் இராசிநாதன் செவ்வாய் என்பதால் தைரியமும், தன்னம்பிக்கையும் தான் உங்களுக்கு கைகொடுத்து உதவுகிறது.

துணிவு ஒருபுறம், பணிவு ஒருபுறமும் உங்களுக்கு பக்கபலமாக இருப்பதால் எந்தக் காரியமும் எளிதில் நடைபெற்று விடுகிறது. உங்களுக்குத் தனாதிபதியாக சுக்ரன் விளங்குவதால் அள்ளிக் கொடுக்கும் சுக்ரன் அள்ளிக் கொடுத்துக் கொண்டே இருப்பார். பணப் புழக்கம் குறைவாக இருக்கும் பொழுது வழிபாடுகள் உங்களுக்கு கைகொடுத்து உதவும். எனவே மனக்குழப்பம் வேண்டாம்.

ஜுலை 21 முதல் செப்டெம்பர் 6 வரை மனதில் பதித்து வைத்துக் கொள்ள வேண்டிய நாட்களாகும். அப்பொழுதுதான் சனியும், செவ்வாயும் கன்னி இராசியில் இணைகிறார்கள். மிகுந்த கவனம் தேவைப்படும் நேரம் அது. கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய அந்த நேரத்தில் தெய்வங்களைக் கும்பிட்டுக் காரியங்களைத் தொடங்கினால் வாடும் சூழ்நிலை மாறி வளரும் சூழ்நிலை உருவாகும்.

உங்கள் சுய ஜாதகத்தில் உள்ள கட்டங்களையும், புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவை இணைந்து செயல்பட்டால் துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல், பணிந்து வணங்கி பரிகாரங்கள் செய்து யோகபலம் பெற்ற நாளில் ஸ்தலங்களுக்கும் சென்று வந்தால் தேக நலனும் சிறப்பாக இருக்கும். செல்வ வளமும் பெருகும்.

பெயரியல் முறையில் எண்கணித அடிப்படையில் சுக்ரன் சுய ஜாதகத்தில் இருக்கும் பாதசார அடிப்படையில் அம்சநிலை பார்த்து அதற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால் எதிர்காலம் இனிமையாக இருக்கும்.

குருவிற்குரிய ஆண்டாகக் கருதப்படும் இந்த 2010 இல் குருவின் பார்வை உங்கள் ராசிக்கு எந்தெந்த இடங்களில் எல்லாம் பதிகிறதோ, அந்தந்த இடங்களில் எல்லாம் நல்ல மாற்றங்கள் வந்து சேரும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**01-01-2010 முதல் 30-04-2010 வரை**

இக்காலம் உங்களுக்கு எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டிய காலமாகும். இராசி நாதன் செவ்வாய் நீசம் பெறுகிறார். எனவே, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். மருத்துவச் செலவுகள் கூடும். மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து கொண்டேயிருக்கும்.

உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ள வேண்டுமானால், நீங்கள் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சொத்துப் பிரச்சினைகளை சுமூகமாக முடித்துக் கொள்வது நல்லது. சொந்தங்களை அரவணைத்துச் சென்றால் வந்த வாய்ப்புக்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

குடும்பச் செலவுகள் கூடும். இக்காலத்தில் சனியும் வக்ர கதியில் இயங்குவது அவ்வளவு நல்லதல்ல. 10,11 க்கு அதிபதி வக்ரம் பெறுவதால் தொழிலில் மாற்றங்கள் உருவாகும்.

தொல்லை தரும் எதிரிகளின் எண்ணிக்கை அதிகரிக்காமல் இருக்க வேண்டுமானால், நல்ல சூழ்நிலைகள் அமைய வேண்டுமானால் தெள்ளத் தெளிவோடு தேர்ந்தெடுத்த கோவில்களுக்குச் சென்று வழிபட்டு வர வேண்டும்.

வார வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும். மாத வழிபாடு மடமடவென்று காரியங்களை நிறைவேற்றி மகிழ்ச்சி வரவழைத்துக் கொடுக்கும். சிறப்பு வழிபாடுகள் சிக்கல்கள் அனைத்தையும் தீர்த்து வைக்கும்.

**01-05-2010 முதல் 31.08-2010 வரை**

இக்காலம் இன்பங்களை அதிகம் சந்திக்கும் காலமாக அமையப் போகிறது. காரணம், விரயாதிபதி குருவும் வக்ரம் பெறுகிறார்.

எனவே திட்டமிடாது செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைக்கும். பெட்டியில் பணம் சேர பிரபலஸ்தர்கள் பின்னணியாக விளங்குவர். உடல்நலம் சீராகி உற்சாகப் படுத்தும். கடன் சுமை குறைந்து கவலைகள் தீர்ந்ததை உறவினர்களிடமும், நண்பர்களிடமும் எடுத்துரைப்பீர்கள்.

மே - 5 ஆம் திகதி முதல் மீன இராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். போட்டி, பந்தயங்களில் இலாபம் கிடைக்கும். விருப்பப்படும் போதெல்லாம் வெளிநாடு சென்று வந்து சம்பாத்தியத்தை பெருக்கிக் கொள்வீர்கள்.

மீனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை பதியும் இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. உங்கள் இராசிக்கு 4,6,8 ஆகிய இடங்களை குரு பார்க்கப் போவதால், அந்த இடங்களுக்குரிய ஆதிபத்யங்கள் எல்லாம் துரிதமாக நடைபெறப்போகின்றன.

குறிப்பாக வீடு வாங்க வேண்டும், இடம் வாங்க வேண்டும் என்று கனவு கண்டவர்கள், கனவு நனவாகி மகிழ்ச்சி வெள்ளத்தில் கரை புரளப் போகிறார்கள்.

சொத்துக்களால் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். சொந்தங்களால் ஏற்பட்ட கலக்கம் தீரும். தாய்வழி ஆதரவு பெருகும். சகோதரர்களைச் சார்ந்திருந்த பெற்றோர்கள் இனி உங்களைச் சார்ந்திருப்பர்.

மருத்துவச் செலவு குறையும். ரண சிகிச்சை சாதாரண சிகிச்சையாகும். இதுவரை எதிரியாக இருந்த இனத்தார்களும், பங்காளிகளும் இப்பொழுது குணம் மாறுவர். பொது வாழ்வில் புகழ் கூடும்.

குருவின் பார்வை அஷ்டமத்தில் பதிவதால் சென்ற வருடத்தில் ஏற்பட்ட இழப்புகளை இப்பொழுது ஈடுகட்டுவீர்கள். ஏமாற்றிய கூட்டாளிகள் சரணடைவர். தாமாகவே முன்வந்து தாங்கள் செய்த சிக்கல்களைச் சொல்லி தனஇலாபத்தை உங்களிடம் தருவர். குடும்பத்தில் உள்ள மனக்கசப்புகள் மாறும்.

**01-09-2010 முதல் 31-12-2010 வரை**

இக்காலத்தில் குரு வக்ர கதியில் இயங்குகிறார். இருப்பினும், மற்ற கிரகங்கள் நல்ல நிலையில் உலா வருகின்றன. கன்னி ராசியில் உள்ள சனி வக்ர நிவர்த்தியாகி விட்டார்.

எனவே தொழில்வளம் சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அன்றாடப் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து ஆதரவுக்கரம் நீட்டுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும். மூடிக்கிடந்த உங்கள் தொழிலுக்கு திறப்புவிழா காண்பீர்கள். முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

வருடக் கடைசியில் வசந்த காலம் உங்களுக்கு வந்து சேரப் போகிறது. அருளாலர்களின் சந்திப்பு கிட்டும். அஞ்சல் வழியிலும் அனுகூலமான செய்தி வந்து சேரும். வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

பழைய வாகனங்களைப் பழுது பார்த்து செலவிடுவதைக் காட்டிலும், புதிய வாகனம் வாங்கினால் என்ன? என்ற சிந்தனை மேலோங்கும். முரண்டு பிடித்த மூத்த சகோதரர்கள் ஒத்து வருவர். குழந்தைகளின் கல்வி நலனுக்கும், கல்யாண முயற்சிக்கும் எதைச் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ அதைச் செய்து வைப்பீர்கள்.

கேட்ட வரங்களை அள்ளிக் கொடுக்கும் விநாயகரை வழிபட்டு வாருங்கள். செவ்வாய், சனி சேர்க்கை காலத்தில் அங்காரக ஸ்தலத்திற்கு அவசியம் செல்வது நல்லது.

மேட ராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத் தொடக்கத்திலேயே குடும்பச் சுமை கூடும். விலை உயர்ந்த பொருட்களைக் கையாளுவதில் கவனம் தேவை. மே மாதத்திற்கு மேல் குருவின் பார்வை பலத்தால் தாய்வழி ஆதரவு பெருகும். உடன் பிறப்புகளும் உங்களுக்கு வேண்டியதைச் செய்து கொடுப்பர்.

கணவன் செய்யும் தொழில்களில் உங்களைப் பங்குதாரர் ஆக்கிக் கொள்ளும் வாய்ப்பு உண்டு.

ஆகஸ்ட் மாதத்திற்கு மேல் நீங்கள் ஆசைப்பட்டதை அடைய நேரிடும். கும்ப குருவையும், சர்ப்ப கிரகத்தையும் கும்பிட்டு சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டால் உங்கள் நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும்.

சிவல்புரி சிங்காரம்

(தொடரும்)

## சட்ட விரோத பதாகை அகற்றும் பணிகள் திருப்தியளிக்கவில்லை

### பவ்ரல் அமைப்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சட்ட விரோத பதாகைகளை அகற்றும் பணிகள் திருப்தியளிக்கும் வகையில் அமையப் பெறவில்லை என பவ்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கட்சி காரியாலயங்களுக்கு முன்னால் மற்றும் தேர்தல் கூட்டங்கள் நடைபெறும் இடங்கள் ஆகியவற்றில் பதாகைகளை அமைத்துக் கொள்வதில் சிக்கல் இல்லை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தற்போது சட்டவிரோத பதாகைகளை அகற்றும் பணிகளை காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்ற போதிலும் அது திருப்தி அளிக்கும் வகையில் அமையப் பெறவில்லை என்றும் பதாகைகளை அகற்றுவதற்கு போதியளவு பணமும், ஆளணி வளமும் வழங்கப்பட்டுள்ள நிலையிலும் பல இடங்களில் சட்ட விரோத பதாகைகளே காட்சியளிப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் உள்ளூராட்சி நிர்வாகங்களும் பதாகை அகற்றும் பணிகளுக்கு காத்திரமான முறையில் பங்களிப்பினை வழங்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

## டுபாயில் இலங்கையைச் சேர்ந்த தொழில் நுட்பவியலாளர் தற்கொலை

### மத்திய கிழக்கு இணையம் செய்தி

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த தொழில் நுட்பவியலாளர் ஒருவர் டுபாயில் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக மத்திய கிழக்கு இணையமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

டுபாயில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் கடமையாற்றிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அவர் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தொழில்நுட்பவியலாளர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக இரசாயன பகுப்பாய்வின் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

முகாமைத்துவத்துடன் ஏற்பட்ட முறுகல் நிலையினால் குறித்த இலங்கையர் மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்ததாகவும் தாய்நாடு திரும்புவது தொடர்பில் நிறுவனத்திற்கும் அவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதமே இந்த தற்கொலைக்கான பிரதான காரணி என அவரது நண்பர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் கடுமையான தலைவலியினால் அல்லலுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-2-6)

## அவுஸ்திரேலியாவை உலுக்கிய வங்கி கடனட்டை மோசடி

### இரு இலங்கைத் தமிழர்கள் கைது

இலங்கையைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்து மற்றும் கனடாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்டு சர்வதேச அளவில் வங்கிக் கடனட்டை மோசடிகள் பலவற்றில் ஈடுபட்டு வந்த இருதமிழர்களை அவுஸ்திரேலியப் பொலிஸார் அண்மையில் கைது செய்துள்ளனர்.

இங்கிலாந்தைச் சேர்ந்த 36 வயதுடைய இளங்கோவன் கணேஷமூர்த்தி மற்றும் கனடாவைச் சேர்ந்த 31 வயதுடைய ருக்ஷாந் செல்வராஜா ஆகிய இருவருமே இவ்வாறு மோசடியில் ஈடுபட்டுக் கைது செய்யப்பட்டவர்களாவர்.

மேலும் அவுஸ்திரேலிய மாநிலமான பேர்த்திலுள்ள சுமார் 20 இற்கும் மேற்பட்ட மக்டொனால்ட் உணவு விடுதியில் டிரைவ் இன் பகுதியால் உள்நுழைந்து பணியாளர் வேறு வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் தருனத்தைப் பார்த்திருந்து தமது மோசடி எல்ட்பொஸ் இயந்திரத்தை அங்கிருக்கும் இயந்திரத்திற்காகப் பிரதியீடு செய்த இவர்கள் பின்னர் புளூடூத் பொறிமுறை மூலம் தமது மோசடி இயந்திரத்தில் உரசப்படும் காசட்டைகளின் விவரங்களை தமது பிரத்தியேகக் கணனிக்கு தரவிறக்கம் செய்து விடுகிறார்கள்.

இவ்வாறு தரவிறக்கம் செய்யப்படும் அப்பாவிகளின் காசட்டை இலக்கம் மற்றும் இரகசிய குறியீட்டு எண் என்பவற்றைப் பாவித்து போலியான வங்கிச் காசட்டைகள் தயாரிக்கப் படுகின்றன.

பின்னர் இக் காசட்டைகளைக் கொண்டு உலகெங்குமுள்ள ஏ.ரி.எம். இலத்திரனியல் காசு இயந்திரங்களினூடாகப் பெருமளவு பணம் எடுக்கப்படுகிறது.

இவ்வாறு எடுக்கப்பட்ட பணத்தின் அளவு சுமார் 5 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களைத் தாண்டும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

தனியொரு வங்கிக் காசட்டை ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட அதிகூடிய பணத்தினளவு சுமார் 7 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதே வகையிலான மோசடி ஒன்று பிரபல வங்கி ஒன்றின் ஏ.ரி.எம். ஊடாகவும் நிகழ்ந்திருக்கிறது. அந்த இலத்திரனியல் காசு இயந்திரம் இயக்கப்படும் ஒவ்வொரு தறுவாயும் அதில் பதியப்படும் இலக்கங்கள் மற்றும் கடனட்டை இலக்கங்கள் இரகசியமாகத் தரவிறக்கப்பட்டு பின்னர் வங்கிக் கணக்குகளிலிருந்து பணம் பெறப்பட்டுள்ளது. வங்கி இயந்திர தட்டச்சு மட்டையை ஒத்ததாக இருக்கும் இந்த மோசடிக் கும்பலின் தட்டச்சு மட்டையும் இலகுவாக பணியாளர்கள் மற்றும் கஸ்ரவாடிக்கையாளர்களின் கண்களில் மண்ணைத் தூவி விடுகின்றன.

இதனால் அண்மைக்காலத்தில் இந்த குறிப்பிட்ட வங்கி ஏ.ரி.எம். களைப் பாவித்த வாடிக்கையாளர்களைத் தமது வங்கி நிதி அறிக்கையை சரிபார்க்கும்படி பொலிஸாரால் கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-2-6)

இடையனின் பாலுக்கு விலையைக் குறைத் தால் நஷ்டம் தண்ணீரோடு போய்விடும்.
-சுவீடன்

வலம்புரி

# ஒவ்வொரு வருடமும் தேர்தலைத் தா இறைவா!

என்னை என்னால் நம்ப முடியாத அளவிற்கு யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலையுள்ளது.

யாழ்.நகர் எங்கும் மக்கள் கூட்டம், வாகன நெரிசல். நான் எங்கே இருக்கின்றேன்! நடப்பது கனவா? நனவா?

கவச வாகனங்கள், அரசியல் கூட்டங்கள், வீதி எங்கும் நடைபாதை வியாபாரங்கள் என்ன வாயிற்று யாழ்ப்பாணத்திற்கு. இந்த கேள்விகளோடு, காவலரண்களைத் தாண்டும் போது படையினரின் சிரிப்பு.

ஐயா! அடையாள அட்டை... பதிவு... இறங்கி உருட்டிச் செல்லும் பண்பாடு, பாஸ் எதுவும் வேண்டாமோ!

சிப்பாய் சிரித்தது எனக்கல்ல; காதோடு ஒட்டியிருக்கும் கையடக்கத் தொலைபேசிக்கு என்பதை உணர முடிந்தது.

கூடவே வன்னி முகாமில் அடைபட்டிருந்த மக்களின் விடுதலை. முகாமிலிருந்து வீடு திரும்பலாம். வீடு திரும்பிய பின் மீண்டும் முகாமுக்கு வரலாம். எதுவாயினும் செய்யலாம்.

ஏ-9 வீதியால் எவரும் பயணிக்கலாம். தனியார் வாகனங்கள் ஓடித்திரியலாம். எந்தப் பொருளையும் எடுத்துச் செல்லலாம். சிங்கள மக்கள் கந்தரோடைக்கும் நாகவிகாரைக்கும் வந்து போகலாம். தங்குவதற்கு பள்ளிக்கூடங்கள், மணிமண்டபங்கள் தாராளமாகத் தந்து உதவலாம்.

ஊரடங்கு முற்றாக நீக்கம். சாராயக் கடைகள் தொடர்ந்து திறக்கலாம். முற்றவெளியில் திருவிழா பார்க்கலாம். இரவிலும் மீன்பிடிக்கலாம் ங்குனியிலும் பயிர் செய்யலாம். நீங்கள் பாவப்பட்டவர்கள் அல்ல. நாங்கள் எல்லாம் தருகிறோம் என்கிறார்கள் அவர்கள்.

அடடா! ஏன் இந்த ஞானம்? ஏன் இந்த பணிவு? ஏன் இந்த அளவுகடந்த அன்பு? எல்லாம் தேர்தல் திருவிழா என்பதால், மீண்டும் நசுக்குவதற்கு முன் தொழுது பணிகிறார்கள்.

ஆறுவருடங்கள் அடக்கியாள அன்பு செலுத்துகிறார்கள்.

வந்து போகிறார்கள். கரம் கூப்பி தொழுது வணங்குகிறார்கள். ஆட்சியில் அமர்ந்து எம்மை ஆட்டிப்படைக்க அவர்கள் விழுந்து எழும்புகிறார்கள்.

ஆனாலும் பரவாயில்லை. தேர்தல் காலம் தான் பொதுமக்களின் இளவேனில் காலம் என்றால் தொடர்ந்து தேர்தல் வரட்டும்.

எல்லா நாடுகளிலும் தேர்தல் ஜனநாயகத்தின் இருப்புக்காக நடத்தப்படுகின்றது. ஆனால் இலங்கையில் தேர்தல் காலத்தின்போது தான் ஜனநாயகமே தலை தூக்குகிறது.

தேர்தலுக்குப்பின் ஜனநாயகத்தின் தலை அடித்து அமர்த்தப்படும். எட்டிப்பார்த்தால் எறி விழும்.

அடுத்த தேர்தல் ஞாபகத்துக்கு வரும் வரை இந்த நிட்டூரம் நீண்டு செல்லும்.

ஆக இறைவா! ஆண்டு தோறும் தேர்தலைத்தா! அது போதும் நாங்கள் வாழ்வதற்கு.

# வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு ஜனாதிபதியே விமோசனம் அளிப்பார்

## அமைச்சர் ரிஷாத்

(கொழும்பு)

வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் விமோசனம் ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதிலேயே தங்கியுள்ளது என மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

புத்தளம் ஆலங்குடாவில் அண்மையில் இடம்பெற்ற அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் வடமாகாண மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எம் மீது உள்ள முதற்தர பணி வடமாகாண முஸ்லிம்களை மீள் குடியேற்றுவதாகும். அதற்கான காலம் ஜனாதிபதி தேர்தல் முடிந்த மாத்திரத்தில் கனியவுள்ளது. இடம்பெயர்ந்த தமிழ் முஸ்லிம்களை மீளவும் அவர்களின் சொந்த இடங்களில் குடியேற்றி இயல்பு வாழ்க்கையை தோற்றுவிப்பதையே ஜனாதிபதி ஆவலுடன் எதிர்பார்த்துள்ளார். அதற்கான பூரண ஒத்துழைப்பை நாம் அனைவரும் ஒன்றுபட்டு இத்தேர்தலில் அவருக்கு வாக்களிப்பதன் மூலம் வழங்க வேண்டும்.

வடமாகாண முஸ்லிம்களின் மீள் குடியேற்றச் செயற்பாடுகளை விசேட வேலைத்திட்டமொன்றின் கீழ் செயற்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். சரியான அரசியல் முடிவொன்றை உரிய தருணத்தில் நான் மேற்கொண்டதால் அதன் பலன்களை வடமாகாண முஸ்லிம்கள் அனுபவித்து வருவது வெள்ளிடைமலையாகும் என்றார். (2-6)

# மீளக்குடியேறும் வரையில் இடம்பெயர்ந்த மக்களின் உடமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதிக்கு சிவசக்தி ஆனந்தன் எம்.பி.கடிதம்

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களது வீட்டுக் கதவுகள், ஜன்னல்கள் என்பன தற்போது காணாமல் போகத் தொடங்கியிருப்பதாகவும் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறும் வரையில் அவர்களது வீட்டு உடைமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என். சிவசக்தி ஆனந்தன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த மாதம் அங்கு சென்று பார்வையிட்ட போது பாதுகாப்பாக இருந்த அவர்களது வீடுகளின் கதவுகள், ஜன்னல்கள் மற்றும் கூரைகள் என்பன தற்போது காணாமல் போயிருப்பதாக முறையிட்டிருக்கின்றார்கள். எனவே இன்னும் இடம்பெயர்ந்த நிலையில் உள்ள இந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீண்டும் குடியேற்றப்படும் வரையில் அவர்களது சொத்துக்களைப் பாதுகாத்து வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அத்துடன் வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து வெளியேறி நண்பர்கள், உறவினர்களது வீடுகளில் வசித்து வருகின்ற 5 ஆயிரத்து 530 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 869 பேருக்கு கடந்த இரண்டு மாதங்களாக நிவாரணமாக எந்த விதமான உணவுப் பொருட்களும் வழங்கப்படவில்லை என்றும் இந்த மக்கள் எவ்வித தொழிலும் இல்லாமல் தமது ஜீவனோபாயத்திற்கு வழியில்லாமல் மிகவும் கஷ்டமடைந்துள்ளார்கள்.

எனவே, இந்த மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீண்டும் மீளக்குடியேற்றப்படும் வரையில் அவர்களுக்கான நிவாரணமாக உலர் உணவுப் பொருட்களை வழங்குவதுடன் அவர்கள் வசிப்பதற்குத் தேவையான தற்காலிக வசிப்பிடங்களுக்குரிய பொருட்களையும் வழங்கி உதவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# கடந்த வருடத்தின் உத்தேச வருமான இலக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது

## இறைவரித் திணைக்களம்

(கொழும்பு)

கடந்த ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 277 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் பிரகாரம் கடந்த வருடத்தின் உத்தேச வருமான இலக்கு நிறைவேற்றப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் மஹிந்த மெதகொட தெரிவித்துள்ளார்.

இதன்படி இந்த வருடம் வரி செலுத்துவோரின் எண்ணிக்கையை மேலும் உயர்த்துவதற்கு எண்ணியுள்ளதாகவும் இதற்கான நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.


வரி செலுத்துவதற்குத் தாமாகவே முன்வந்தவர்களின் எண்ணிக்கையும் கடந்த வருடம் அதிகரித்திருந்ததாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# கல்விமாணி புதிய மாணவர் வரவேற்பு நிகழ்வு

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி பட்டநெறி 2009/2010 புதிய கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும் திசை முகப்படுத்தல் நிகழ்வும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணி முதல் பிற்பகல் 4.00மணிவரை பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரிய வலுவூட்டல் திணைக்களப் பணிப்பாளர் நிகால் விக்கிரமசிங்க கலந்து கொள்கின்றார். ஆசியுரையினை செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன், வாழ்த்துரைகளை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் யாழ். மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி ஆகியோர் வழங்கவுள்ளனர். (ச)

# காட்சியும்- சாட்சியும்



இயற்கையின் நியதிகளை மீறி எதையும் செய்ய முடியாது. அதேபோல கடவுளின் காட்சிகள் இருந்துகொண்டே இருக்கும். காட்சிகள் கண்டுவிட்டால் அங்கு சாட்சியம் நடந்து கொண்டே இருக்கும்.

ஆம், இதுதான் கடவுளின் தன்மை. கடவுள் தம்மை வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார். இயேசு தான் இறை வெளிப்பாட்டின் ஒரே அடையாளம். ஆனால் இங்கு இன்னொரு வித்தியாசமும் உண்டு. புதிய ஏற்பாட்டில் தன் மக்களுக்காக மட்டுமல்ல உலகில் உள்ள எல்லா மக்களுக்கும் குறிப்பாக, புறவினத்து மக்களுக்குத் தான் அதிகம் வெளிப்படுத்துகின்றார். இன்றைய விழாவில் புறவினத்து அரசர்களாகிய மூன்று ஞானிகளுக்கு குழந்தை உருவில் தன்னை வெளிப்படுத்துகிறார். அதன் அடையாளம் நட்சத்திரம்.

## பரமபிதா காட்டிய பாதை

சாதாரண காட்சி நடைபெற்ற பின்பே சாட்சியம் நடைபெறும். ஆனால் இங்கு சிறிய வித்தியாசம். அதாவது காட்சி நடைபெறுவதற்கு முன்பே சாட்சியும் நடக்கிறது... ஆம் மூன்று ஞானிகளும் நட்சத்திரம் வழி நடத்த எருசலேம் வருகின்றனர். எருசலேம் அடைந்ததும் நட்சத்திரம் என்ற அடையாளம் மறைகின்றது. காரணம் அழிவுக்குரிய அடையாளமாக அந்நகரில் இருந்தான். அவன்தான் ஏரோது. நட்சத்திர அடையாளம் காணாத ஞானிகள் எருசலேம் அரண்மனை அடைந்து ஏரோது அரசனிடம் கேட்கின்றார்கள். "யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்"(மத்2:2) இங்கு நாம் ஒரு உண்மையை ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும். புறவினத்து ஞானிகள் இயேசுவை யூதர்களின் அரசர் என்று சான்று பகர்கின்றார்கள். அதுவும் யாருக்கு? தன்னை விட வேறு அரசனா? என்று அந்த அரசனைக் கொல்ல சதி செய்த ஏரோது அரசனுக்கு. என்ன வேடிக்கை!

ஆம் இன்றும் இறைவன் தன்னை நமக்கு வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றார். நமக்கு காட்சி கொடுத்துக் கொண்டே இருக்கிறார். அன்றாட நிகழ்வுகள், நாம் சந்திக்கின்ற மனிதர்கள், குறிப்பாக ஏழைகள், அனாதைகள், குழந்தைகள், நோயுற்றோர் இவர்கள் வழியாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார். நாம் அந்த இயேசுவை அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவிகள் செய்வதன் வழியாக உண்மையான இயேசுவின் சாட்சிகளாய் வாழ முடியும். இந்த உண்மையைத் தான் இன்றைய திருக்காட்சி விழா நமக்கு அறிவுறுத்துகிறது:

ஜோன் ஹேபேர்ட்





கொழும்பு அரிமாக் கழகத்தைச் சேர்ந்த லயன் திருமதி ஆன் குணசேகரவினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட புற்றுநோயாளர்களுக்கான சத்துணவு மாப்பொதிகளை வழங்கும் நிகழ்வு அண்மையில் வடமாகாண புற்றுநோய் எயிட்ஸ் தடுப்பு சங்க பணிமனையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் உபதலைவர் உரையாற்றுவதையும் யாழ். லயன்ஸ் கழக நோயாளர் நலன்பேணும் குழுவின் தலைவர் ஸ்ரீ விமலேந்திரன் நோயாளி ஒருவருக்கு சத்துமாப் பொதி ஒன்றினை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## எனது வாக்கு வங்கியிலேயே பிரதான இரு வேட்பாளர்களின் வெற்றி தங்கியுள்ளது

### மயோன் முஸ்தபா

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினதும் ஜெனரல் சரத் பொன்சேகாவினதும் வெற்றி தனக்கு விழப்போகும் வாக்குகளின் எண்ணிக்கையிலேயே தங்கியுள்ளதாக ஜனாதிபதி வேட்பாளரும் முன்னாள் உயர் கல்வி பிரதியமைச்சருமான மயோன் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இதன்படி தனது கொள்கைகளை ஏற்று தனக்குப் பின்னால் அணி திரள சிறுபான்மை மக்கள் தயாராகவுள்ளதாகக் குறிப்பிட்ட அவர் கடந்த சில நாட்களாக நாட்டின் பல்வேறு பாகங்களையும் சேர்ந்த மக்கள் தனது வெற்றிக்காக உழைப்பதற்கு முன்வந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர் குழு ஒன்று என்னைச் சந்தித்து ஜனாதிபதித் தேர்தலில் எனது வெற்றிக்காக உழைக்கவுள்ளதாக உறுதியளித்துள்ளது.

அதேபோன்று குருநாகல் மாவட்டத்திலும் எனது வெற்றிக்காக உழைப்பதற்கு சிலர் முன்வந்துள்ளது மட்டுமன்றி வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் சிறுபான்மை மக்களின் வாக்குகளும் நிச்சயம் எனக்குக் கிடைக்கும் என்று கூறியுள்ளார். (2-6)

## கரையோரப் பாதுகாப்பில் எவ்வித தளர்வுமில்லை

### கடற்படையினர்

(கொழும்பு)

கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் எவ்வித தளர்வும் ஏற்படுத்தப்படவில்லை என கடற்படை அறிவித்துள்ளது.

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் தொடர்ந்தும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக கடற்படைப் பேச்சாளர் கப்டன் அதுல செனரத் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஐந்து இலங்கை அகதிகள் தமிழகத்தில் தஞ்சமடைந்த செய்தி தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று சிறுவர்கள் உள்ளிட்ட ஐந்து இலங்கை அகதிகள் படகு மூலமாக தமிழகத்தின் தனுஷ்கோடி கரையோரத்தை அடைந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதில் கரையோரப் பாதுகாப்பு தளர்த்தப்பட்டுள்ள காரணத்தினாலேயே இலங்கை அகதிகள் தமிழகத்தில் சரணடைந்துள்ளதாக சுட்டிக் காட்டியிருந்தன.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றதென இலங்கை கடற்படையினர் அறிவித்துள்ளதுடன் கரையோரப் பாதுகாப்பில் எவ்வித தளர்வுகளும் ஏற்படுத்தப்படவில்லை எனவும் திட்ட வட்டமாக அறிவித்துள்ளனர். (ஓ-2-6)

## அரசியல் அறிவின்மையால் பொன்சேகா பல்வேறு கதைகளை கூறி வருகின்றார்

### கோத்தபாய ராஜபக்ஷ



(கொழும்பு)

அரசியலில் அரிச்சுவடி கூட அறியாத காரணத்தால் ஜெனரல் சரத்பொன்சேகா பல்வேறு தேவதைக் கதைகளைக் கூறிவருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது வங்கிக் கணக்கு விபரங்களை எவரும் பரிசீலனை செய்யமுடியும் எனவும் தமக்கு சவால் விடுக்கும் நபர்களின் கணக்கு விபரங்களை பரிசீலிக்க அனுமதி அளிக்கப்படுமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.


ராஜபக்ஷ தலைமுறை கடந்த 75 ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டு வருவதாகவும் சொத் துக்களை சேகரித்திருந்தால் ஜனாதிபதி பதவி வரையில் ராஜபக்ஷ குடும்பத்தாருக்கு சென் றிருக்க முடியாதெனவும் தமக்கு இருக்கும் ஒரே சொத்து மக்கள் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் யுத்தம் வெற்றி கொள்ள முடியாதென தீர்மானிக்கப்பட்ட காலத்தில் தைரியமாக பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க வழிகாட்டியதாகவும் இவ்வாறு யுத்தத்தை வெற்றி கொண்ட ஜனாதிபதி பொருளாதார யுத்தத்தையும் இலகுவில் வெற்றிகொள்வார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அரசாங்கத்திற்கு எதிரான சக்திகளின் பகடைக்காயாக ஜெனரல் சரத்பொன்சேகா மாறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## பிரபாகரனின் கொள்கையை பின்பற்றுவோரால் இலங்கைக்கு ஆபத்துக்கள் உண்டு

### இராணுவத் தளபதி ஜயந்த ஜெயசூரிய



(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் கொள்கையை வலுவாக பற்றி கொண்டவர்களால் இலங்கைக்கு ஆபத்துக்கள் உண்டு என இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெகத் ஜெயசூரியா தனது புதுவருட செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் கொள்கையை பின்பற்றும் தமிழ் மக்கள் இலங்கையிலும் அனைத்துலகத்திலும் உள்ளனர். அவர்களால் இலங்கைக்கு ஆபத்துக்கள் உண்டு.

அவர்களால் இலங்கையின் இறைமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் பாதிப்புக்கள் ஏற்படலாம். எனவே சில பிரிவுகள் தற்போதும் இயங்கி வருவதை படையினர் உணர்ந்து கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். (ஓ-2-6)

## விவசாயத்துறையின் மேம்பாட்டுக்கான செலவீடு - விவசாய அமைச்சு

(கொழும்பு)

விவசாயத்துறை மேம்பாட்டுக்காக கடந்த நான்கு வருட காலத்துக்குள் ஒரு இலட்சத்து 41 ஆயிரத்து 322 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சின் செயலாளர் எஸ். அமரசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சின் செயலாளர் இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மஹிந்த சிந்தனையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கமைய 3 ஆயிரம் ரூபா தொடக்கம் 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட உரம் 350 ரூபாவுக்கு மானிய அடிப்படையில் வழங்கப்பட்டது. இதனால் நெல்லின் உற்பத்தி 30 வீதத்தினால் அதிகரித்தது.

மேலும் நெற்செய்கையுடன் இடைப் பயிர் செய்கை கைகொடுத்தது. அதிகூடிய இறக்கு மதித் தீர்வையுடன் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட கிழங்கு, வெங்காயம், மிளகாய், பழ வகை மற்றும் காய்கறிகள் உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கப்பட்டதால் நியாயமான விலைக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தது.

அத்தோடு மிளகு, கறுவா, கராம்பு, சாதிக்காய் மற்றும் ஏலம் போன்ற ஏற்றுமதிப் பயிர்களுக்காக அதியுயர் விலை கிடைத்தது.

2005 ஆம் ஆண்டு 9.575 மில்லியன் ரூபாவாக இருந்த ஏற்றுமதி வருமானம் 2009 ஆம் ஆண்டில் 16 ஆயிரத்து 664 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## முன்னாள் பிரதம நீதியரசரின் தீர்ப்புகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும்

### எஸ்.பி. திஸாநாயக்க

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் நீதியரசர் சரத் என் சில்வாவினால் வழங்கப்பட்ட சில தீர்ப்புக்கள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.உயர் நீதிமன்ற நீதவான் குழாம் அல்ல சட்ட வல்லுனர்களினால் இந்தத் தீர்ப்புக்கள் தொடர்பில் ஆராயப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

மஹாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் வொட்டர்ஸ் எட்ஜ் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்றவை தொடர்பான வழக்கு விசாரணைகள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்டிருக்க வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளதுடன் பிரதம நீதியரசராக கடமையாற்றிய காலத்திலேயே சரத் என் சில்வா அரசியல் நோக்கங்களுடன் செயற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு கட்சியிலிருந்து மற்றுமொரு கட்சிக்கு தாவும் அரசியல் வாதிகளுக்கு ஆதரவாக அவர் வழங்கிய தீர்ப்பே நாட்டில் பல்வேறு ஊழல் மோசடிகள் இடம்பெறக் காரணம் என திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிசயமொன்றின் மூலம் ஜனாதிபதியாக ஜெனரல் சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டால் தற்போது பார்க்கும் சரத் பொன்சேகாவை பார்க்க முடியாது என்றும் கடும் சர்வாதிகார ஆட்சி முறைமைகளை ஜெனரல் சரத் பொன்சேகா பின்பற்றுவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே வீடு தேடி வந்து கட்சியில் இணைந்து கொள்ளுமாறு விடுத்த அழைப்பினை நிராகரிக்க முடியவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஓ-2-6)


# ஜெனரல் சரத் பொன்சேகாவின் யாழ். விஜயம்

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது...








யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை உடன் சந்திப்பு...


காரைநகருக்கான விஜயத்தின் போது...


சரத் பொன்சேகாவின் யாழ். மாவட்ட தேர்தல் அலுவலக திறப்பு விழாவின் போது...


வீரசிங்க மண்டபத்தில் உரை நிகழ்த்திய பிரமுகர்கள்...










# ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதி...

சரத் பொன்சேகா வெற்றி பெற்றவுடன் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்படும்.


## Computer Sales

Pentium -4 கணனிகள் மிகவும் மலிவு விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

Intel Processor, Intel Mother Board, 15" LCD Monitor, ATX Silver Black Casing, DVD Writer, UPS, Computer Table, Multimedia KeyBoard, Laser Mouse அனைத்தும் 35250 மட் டுமே.

(PHILIPS 19' Real Flat Monitor with TV Combo, 13000 மட் டுமே)

(அனைத்துக்கும் ஒருவருட உத் தரவாதம்) (C-4107)

STR Computer System
384, Navalar Road, Nallur Jaffna.
T.P. 021 222 4459, 077 4192275


அத்துடன் தமிழ் மக்களுக்கு அவசியம் மேற்கொள்ள வேண்டிய அவசர அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இதில் இடம்பெயர்ந்து முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள மக்கள் சொந்த இடங்களில் சகல வசதிகளுடன் மீள்குடியமர்த்தப்படுவார்கள். அத்துடன் அதி உயர் பாது காப்பு வலயங்களாகவுள்ள இடங்களில் மக்களை மீள்குடியமர்த்தி அவர் களின் இடங்களில் விரும்பிய தொழில்த்துறைகளில் ஈடுபட வசதிகள் செய்து கொடுக்கப்படும். இவற்றுடன் போக்குவரத்து உட்பட அத்தியாவசிய சேவைகள் சீரமைக்கப்படுவது போன்ற அபிவிருத்தித்திட்டங்கள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.


ஆரம்பித்தோம்; வென்றோம்

## A/L-2012

கலை, வர்த்தகப் பிரிவு
உடனடியாகவே பிரிவு II
ஆரம்பம் ஜனவரி-09 ல்
நேரம்- சனி 8AM
பொருளியற் கல்லூரி
(C-4104) யாழ்ப்பாணம்


அத்துடன் ஆட்சி மாற்றத்தினையடுத்து நாடாளுமன்றத்தில் புதிய அரசியல் யோசனை முன்வைக்கப்படும். இதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுக்களை அமைத்து காலத்தை வீணடிக்காமல் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து புதிய அரசியல் யோசனையை தீர்மானிக்கும்.

இந்த அரசியல் யோசனையை தற் போதே ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஆகிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது.

இதில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் விரைவில் தீர்த்து வைக்கப்படும். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அமைத்தால் மீண்டுமொருமுறை ஆயுதப் போராட்டம் ஏற்படுவதை தடுக்குமா? என ஊடகவியலாளர் கேட்டதற்கு பதிலளித்த எதிர்க்கட்சிகளின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க,

மீண்டுமொரு ஆயுதப் போராட்டம் ஏற்பட முடியாதவாறு இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி முன்வைக்கப்படும்.

இதனையே நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தனிடம் கேட்டுவருகின்றேன்.

ஏனென்றால் நானும் சம்பந்தனும் 1977 ஆம் ஆண்டில் நாடாளுமன்றதில் நுழைந்து இன்று வரையுள்ளோம். எனவே இருவரும் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேற முதல் அரசியலில் தீர்வு காணப்பட வேண்டுமென கூறுவேன்.

நாட்டில் போர் முடிவடைந்த நிலையில் அதியுயர் பாதுகாப்பு வலயம் தேவையில்லை ஆனால் தற்போது வடக்கு கிழக்கில் மட்டுமல்ல தெற்கில் ஜனாதிபதி மாளிகை, ரூபவாகினி கூட்டுத்தாபனம், குருநாகலில் ராஜபக்ஷ கம்பனி வாங்கியுள்ள சொத்துக்கள்என எல்லா இடங்களும் உயர் பாதுகாப்பு வலய மாகவுள்ளது.

நாட்டில் இராணுவ ஆட்சி ஏற்படப் போகுதென அச்சம் கொண்ட மகிந்த ராஜபக்ஷ அரசே இந்தியாவுக்கு ஓடிச் சென்றது.

ஆனால் ஜெனரல் சரத் பொன்சேகா நாட்டில் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தவே அரசியலில் குதித்துள்ளார் எனஎதிர்க்கட்சித்தலைவர்ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். (ச-5)


## GUITAR NOTES

பின்வருவன விற்பனைக்குண்டு
01.Electric Guitar 02.Box Guitar 03.Guitar Notes
Organ, Guitar, புல்லாங்குழல் பயிற்சி வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
KARAVEENA ISAI MANRAM, 75, TEMPLE ROAD, NALLUR,
T.P.No. 077 7031293
(161)



## நீங்காத நினைவுகளில் 31 ஆம் நாள்

தாயின் மடியில் — இறைவனின் அரவணைப்பில்

15 02 1980 — 04 12 2009



அமரர் கமலநாதன் ரஞ்சித்ராஜ் (ரஞ்சன்)

(ஆனந்தபுரம், கிளிநொச்சி)

உன்னோடு வாழ்ந்த பொழுதுகளின், நினைவுகள்,
நெஞ்சம் கனக்கிறது எம்மைவிட்டு எங்கு சென்றாய்,
எம் செல்வமே நீங்காத நெஞ்சத்து
நினைவுகளோடு உன் ஆத்மா சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (03.01.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அந்தோனியார் கோவிலடி,
பெரியவிளான், இளவாலை
- குடும்பத்தினர்
(C-4109)



புதிய நிர்வாகத்தில் — நியூ கேம்பிரிச் — புதிய பொலிவுடன்

அளவெட்டி

05/01/2010 ல் A/L 2012 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- தரம் 1 முதல் O/L வரை சிறப்பான ஆசிரியர் குழுவுடன் புதிய பிரிவு ஜனவரி 5 ல்.
- தமிழ் மொழி-ஆங்கில மொழி மூலம்
- தரம் -5 விசேட வகுப்பு – ஆசிரியர் அன்பழகனின் பரீட்சைகள்
- நலன்புரி நிலையங்களிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்கட்கு அனுமதி முற்றிலும் இலவசம்.
- விசேட ஆங்கில-சிங்கள வகுப்பு ஆரம்பமாகின்றது

By:- பிரியதர்ஷன
(174)


## காணாமல்...

வீரசிங்கம் மண்டபத்தில் சந்தித்தனர். இதன் போதே அவர்கள் காணாமல் போன தமது உறவினர்களை மீட்டுத்தருமாறு கதறி அழுதனர்.

கைக்குழந்தைகளுடன் இளம் தாய்மார், வயது முதிர்ந்தவர்கள் என பலர் மனோகணேசனைச் சந்தித்து தமது மனக்குறைகளை கொட்டித்தீர்த்தனர். (ச)

## ஜனாதிபதி...

அங்குபலதரப்பினரையும்சந்தித்தார். அதன் பின்னர் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தை திறந்து வைத்தார். அதன் பின்வீரசிங்கம் மண்டபத்திற்குசென்று மக்கள் மத்தியில் உரைநிகழ்த்தினார்.

(02ஆம் பக்கம் பார்க்க)


## தேவைப்படுகிறது

திரு.தா.சண்முகநாதன் (சோக்கல்லோ சண்முகம்) என்பவரால் எழுதப்பட்ட 'கோமதியின் கணவன்' என்ற நாவல் 1956 ஆம் ஆண்டு பதுளை காந்தி அச்சகத்தில் வெளியிடப்பட்டு கலுகல்ல, நமுனுகுல, பள்ளக்கட்டுவ போன்ற இடங்களில் விநியோகிக்கப்பட்டது.

தற்போது இந் நாவல் திருத்திய பதிப்பிற்காகத் தேவைப்படுகின்றது. ஆசிரியரிடம் இந் நாவல் கைவசம் இல்லாததால் இந் நாவலை வைத்திருப்பவர்கள் தயவு செய்து கீழ்க் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டுகிறோம்.

முகவரி:-
திருமதி க.கௌரிகாந்தன்
மில்லேன்,
ஏழாலை மேற்கு, ஏழாலை. (167)

T.P.No. 011 4978806,
021 7911776
Mobile:- 077 6577415



Sri Lanka Telecom Mobitel We Care, Always.

மொபிற்றல் அனுசரணையுடன்
திருமுருகன் கொம் நெற் வழங்கும்

அரச சேவையில் உள்ளவர்களுக்கான
உபகார இணைப்பு
Government "Upahara" Service Package

திருமுருகன் கொம் நெற்
46.ஆடியபாதம் வீதி திருநெல்வேலி T.P No: 021 222 7835 259.கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்



## வாழ்வகம்
### விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்

#### முக்கிய அறிவித்தல்

எமது வாழ்வகத்தின் பெயரைப் பயன்படுத்திச் சிலர் வீடுவீடாகச் சென்று நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருவதாக அறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

இவ்விதமான நடவடிக்கைகளுக்கும் எமக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதையும் நாம் ஒருபோதும் இவ்விதமான நிதி சேகரிப்பில் ஈடுபடுவதில்லை என்பதையும் திட்டவட்டமாக அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தலைவர்,
வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.
(C-4112)



## SUBRA (14)

சித்தன்கேணி

இரு இடங்களிலும் — 05.01.2010 இல் மாலை 4.30 — A/L 2012

- 2009 A/L 7 மாணவர்கள் 3A பெறுபேறு. 49 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி
- நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி முற்றிலும் இலவசம்.

தரம் 1 முதல் O/L வரை புதிய பிரிவு II ஆரம்பம் (தமிழ், ஆங்கில மொழி மூலம்) 05.01.2010 மாலை 4.30
(173)



ST. JOHN'S COLLEGE JAFFNA CEYLON

## ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME

- A three-month English course for School leavers/Job seekers.
- The Course content comprises the four skills - Listening, Speaking, Reading & Writing.
- Evaluation & Award of certificate at the end of the programme.
- Free Handouts.

Commencement 11th January 2010

Lessons on Weekdays from 3.30 - 5.45 p.m.

Application Forms could be obtained at the College office.

Closing Date: 09th January 2010

*Awarding Ceremony for the previous batch will be held on 20th Jan. 2010 at 3.30 p.m. Parents are invited.*

***English Language Teaching Unit***
***St. John's College, Jaffna***


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.